A/L 89 கலை வர்த்தகம்
PAPER CLASS
Eco - சின்னத்தம்பி
சனி, ஞாயிறு 5-00
Acc - மரியதாஸ்
திங் – புதன் 6-00 a.m.
Com. தேவா
செ, வியா. 6-30 a.m.
Day மீட்டல் வகுப்பு
காலை 7-30—9-30
நடைபெறுகின்றன.
NIRU TUITION CENTRE
KONDAVIL

வார
முரசொலி
VARAMURASOLI

89 A/L
Paper Class
Phy - [illegible]
[illegible], வியா. 4-00
Che - [illegible]
சனி, ஞா. 2-30
Bot - பாலா
சனி, ஞா. 3-30
Zoo - ஞானம்
சனி, ஞா. 8-15
NIRU TUITION CENTRE
KONDAVIL

முரசு 3 ஒலி 61 ஞாயிறுக்கிழமை 29-01-1989 (தை 16) ஐ. ஆகிர் 20 விலை ரூபா நான்கு

# பெருந்தொகை இராணுவம் தென்மாகாணம் விரைகிறது!

## சுமார் நானூறு சந்தேக ஜே. வி. பி காரர் கடந்த 24 மணித்தியாலத்தில் கைது

**தென் பகுதியில் தேர்தலைக் குழப்பும் வகையில் வன் செயலகளும், படுகொலைகளும் அதிகரித்துள்ளதால் ஒரு மாத இடைவெளிக்குப்பின்னர் ராணுவத்தினர் மீண்டும் முகாம்களுக்கு வெளியே அனுப்பப்பட்டுள்ளனர். கடந்த இருபத்தி நான்குமணி நேரத்துக்குள் ஜே வி. பி. பயங்கரவாதிகள் என்று சந்தேகிக்கப்படும் சுமார் நானூறு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.**

அக்குரஸ்ஸ என்ற இடத்தில் நேற்று முற்பகல் இராணுவத்துக்கும் ஜே.வி.பியினருக்கும் இடையில் இடம்பெற்ற நேரடி மோதலில் சுமார் எட்டுப்பேர் வரை இருதரப்பிலும் பலியானதாக ஊர்ஜிதம் செய்யப்படாத தகவல் தெரிவிக்கின்றது.

மாத்தறை, ஹம்பாந்தோட்ட பகுதியில் பயங்கரவாதிகளைத் தேடிக் கண்டுபிடிக்கும் பணிகளுக்குப் பயன்படுத்தவென இரண்டு ஹெலிகப்டர்கள் நேற்று அனுப்பப்பட்டதாகவும் தெரியவந்துள்ளது.

அதேசமயம் கடந்தஇரண்டு மாதங்களாக கொழும்பில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த விசேஷ அதிரடிப்படையின் ஒரு பிரிவும் தென்மாகாணத்துக்கு அனுப்பப்பட்டதாகவும், சில குறிப்பிட்ட இடங்களில் மட்டுமே இவர்கள் கடமையில் ஈடுபடுவரென்றும் தெரிவிக்கப்பட்டது.

### ஸ்ரீமாவோ தாக்கல் செய்த
## தேர்தல் ஆட்சேப மனுமீதான விசாரணை மார்ச் 13-ம் திகதி

சுதந்திரக்கட்சித் தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவினால் தாக்கல் செய்யப்பட்ட ஜனாதிபதி தேர்தல் ஆட்சேப மனு மீதான விசாரணையை மார்ச் பதின்மூன்றாம் திகதிக்கு எடுத்துக்கொள்ள பிரதம நீதியரசர் பாரிந்த ரணசிங்க இணங்கியுள்ளார்.

இதேவேளை இந்த மனுவின் எதிர்மனுதாரரான ஜனாதிபதி பிரேமதாஸவும், தேர்தல் ஆணையாளரும் தமது வழக்கறிஞர்கள் மூலம் விசாரணையை எதிர்வரும் பெப்ரவரி இருபத்தி மூன்றாம் திகதிக்கு எடுத்துக் கொள்ளுமாறும் கோரியுள்ளனர்.

அன்றையதினம் சட்டபூர்வ

→ 16-ம் பக்கம் பார்க்க

## கிளிநொச்சியில் 30 லட்ச ரூபா செலவில் கல்விக் கந்தோர்

கிளிநொச்சியில் கல்வித் திணைக்களத்திற்கான புதிய கட்டடம் ஒன்றை அமைப்பதற்கு கல்வியமைச்சு முப்பது லட்சம் ரூபாவை தந்துதவ முன்வந்துள்ளது. கிளிநொச்சி மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் எடுத்த தீவிர முயற்சியினால் இந்த நிதியுதவி வழங்கப்படவுள்ளது.

இந்தப் புதிய கட்டடம் இரு மாடிகளைக் கொண்டதாக அமையும். பணிப்பாளர் விடுதி, அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் இருப்பிட வசதிகள் என்பனவும் இதில் இடம் பெறும்.

இதற்கான காணியை தந்துதவுமாறு கிளிநொச்சி அரசாங்க அதிபர், மேலதிக அரசாங்க அதிபர் (காணி) ஆகியோரிடம் கல்விப் பணிப்

→ 16-ம் பக்கம் பார்க்க

## முழங்காவில் வைத்தியசாலை இருவாரமாக மூடப்பட்டுள்ளது

(பூநகரி)

முழங்காவில் அரசினர் வைத்தியசாலை கடந்த இரு வாரங்களாக மூடப்பட்டுள்ளதால் பல்லவராயன் கட்டு குமிழமுனை, ஜெயபுரம், முழங்காவில், நாச்சிக்குடா பகுதிகளைச் சேர்ந்த நோயாளர்கள் பெரும் பாதிப்படைந்துள்ளனர்.

வைத்தியசாலை டாக்டர் எஸ். அம்பிகைபாலன் இரண்டாவது தடவையாகவும் படையினரால் விசாரிக்கப்பட்டு தாக்கப்பட்டதைத்

→ 16-ம் பக்கம் பார்க்க

### சிங்கப்பூரில் புதிய சட்டங்கள்
## பிச்சையெடுத்தால் சிறை கள்ள வரவுக்கு கசையடி

(சிங்கப்பூர்)

சிங்கப்பூரில் அண்மையில் நிறைவேற்றப்பட்ட சட்டங்களின்படி பிச்சை எடுப்போருக்கு ; சிறைத்தண்டனையும் அபராதமும் விதிக்கப்படவுள்ளது. இதேபோல் சட்ட விரோதமாக சிங்கப்பூரில் குடியேறி அங்கு 90 நாட்களுக்குமேல் தங்கியிருப்போருக்கு கசையடி வழங்கும் தண்டனையும் வழங்கப்படும். தற்போது ஆயிரம் பேர் வரை சிங்கப்பூரில் சட்ட விரோதமாக உள்ளனர் என்ற குற்றச்சாட்டில் சிறையில் உள்ளனர்.

## அரியாலை பகுதி சம்பவத்தில் இரண்டு பேர் மரணமானர்கள்

நேற்றுக் காலை அரியாலைப் பகுதியில் தொடர்ச்சியாக நடந்த துப்பாக்கிச் சமரைத் தொடர்ந்து அப்பகுதியில் பெரும் பதற்றம் நிலவியது. சம்பவத்தையடுத்து அப் பகுதியில் போக்கு வரத்தும் குறைவாகக் காணப்பட்டது

இச் சம்பவத்தில் ஒருவர் மரணமானர் சம்பவத்தின் போது காயமடைந்த இன்னொருவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மரணமானர் யாழ் ஆஸ்பத்திரியில் மரணமானவர் அரியாலை மேற்கைச் சேர்ந்த நல்லையா சரவணபாலசந்திரன் (25). இவர் அரியாலை பூமகள் வீதியில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானதாகவும். கச்சேரி உள்ளூராட்சி திணைக்கள ஊழியர் எனவும் தெரியவருகிறது.

## சுதந்திரக்கட்சியினர் கொலை பற்றி ஸ்ரீமாவோ கடிதம்

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அபேட்சகர்கள், நிர்வாகிகள், ஆதரவாளர்கள் திட்டமிட்டுக் கொலைசெய்யப்படுவது பற்றிய விபரங்களை சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தேர்தல் ஆணையாளரின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளார்.

இதுவரை ஏழு அபேட்சகர்களும், நூறுக்கும் அதிகமான கட்சி முக்கியஸ்தர்களும் படுகொலை செய்யப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தேர்தலைச் சட்டத்துக்குட்பட்டதாக நடத்த தேர்தல் ஆணையாளர் தமது அதிகாரத்தைப் பூரணமாகப் பயன்படுத்த வேண்டுமெனவும் திருமதி பண்டாரநாயக்கா வேண்டியுள்ளார்.

## சர்வதேச கண்காணிப்பு குழு பொதுத்தேர்தலுக்கு வரும்

பொதுத்தேர்தல் நீதியான முறையில் நடைபெறுவதை கண்காணிப்பதற்காக சர்வதேச கண்காணிப்புக்குழு ஒன்றை அழைப்பது குறித்து ஆராய்வதாக தேர்தல் ஆணையாளர் திரு. சந்திரானந்த டி சில்வா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலைக் கண்காணிப்பதற்கென சார்க் கண்காணிப்புக்குழு அழைக்கப்பட்டதைப்போல் பொதுத்தேர்தலைக் கண்காணிக்கவும் சர்வதேசகுழு அழைக்கப்படவேண்டும் என்று எதிர்கட்சிகள் ஏற்கனவே கோரிக்கை விடுத்துள்ளன.

## கிளிநொச்சிக்கு பட்டதாரி ஆசிரியர் நியமனம்

கிளிநொச்சி மாவட்டத்திற்கு கல்விச் சேவை ஆணைக் குழுவினால் நியமனம் பெற்ற

→ 16-ம் பக்கம் பார்க்க

## பேராசிரியர் 'வித்தி' பூதவுடல் அக்கினியுடன் சங்கமமானது

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதல் துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்களின் பூதவுடல் நேற்றுப் பிற்பகல் அன்னாரின் மாணவர்கள், நண்பர்கள், அனுதாபிகள், உறவினர்கள் அனைவரும் கண்ணீர் மல்கி நிற்க அக்கினியுடன் சங்கமமானது பேராசிரியரின் புதல்வர்கள் அருள்நம்பி, இன்பச்செல்வன், சிவமைந்தன் ஆகியோர் சிதைக்குத் தீமூட்டினர்.

நண்பகல் ஒரு மணியளவில் பேராசிரியரின் இறுதி ஊர்வலம் அவரது தமிழகம் இல்லத்திலிருந்து ஆரம்பமானது மாணவ 'கடேற்' மலர்வளையங்களை தாங்கிக் கொண்டு முன்னே செல்ல, தேவார பாராயணபண்ணிசை பின்னால் முழங்க, பேராசிரியரின் பூதவுடலைத் தாங்கிய பேழையை ஏற்றியவாகனம் ஒருமணி நேரத்தின் பின் மயானத்தைச் சென்றடைந்தது.

பல்வேறுதுறைப் பிரமுகர்களும் இறுதிச்சடங்கில் பங்குபற்றினர். பெருந்தொகையான அஞ்சலிப் பிரசுரங்கள் இங்கு விநியோகிக்கப்பட்டன.

## சிறு விளம்பரம்

### கண்டெடுக்கப்பட்டது
யாழ். நகரில் 19.01.89 அன்று அநாதரவாகக் கண்டெடுக்கப்பட்ட ரலி சைக்கிள் ஒன்று எமது பாதுகாப்பில் உள்ளது. சைக்கிள் சொந்தக்காரர் தகுந்த ஆதாரங்களுடன் நேரில் வரவும். சண்முக வடிவேல் தொழில்நுட்பக் கல்லூரி எதிரில், பிரவுண் வீதி, யாழ்ப்பாணம்.
01633

### வகுப்பு
ஆங்கிலம், தமிழ் (New Key-Board) தட்டெழுத்து சுருக்கெழுத்து வகுப்புக்கள் நடைபெறுகின்றன. (1) "செல்க்கா இன்ஸ்ரிரியூட்," தாளையடி ஒழுங்கை, திருநெல்வேலி தெற்கு. (பலாலிவீதியிலிருந்து 100 யார்) (2) டச்றோட், சாவகச்சேரி.
01635

### விற்பனைக்கு
கட்டிட ஒப்பந்தக்காரருக்கு ஓர் அரிய சந்தர்ப்பம், கீழ் காணும் பொருட்கள் உடன் விற்பனைக்குண்டு. $\frac{1}{4}$" கம்பி நெட், 3/8 நூல் கம்பி, L கேடர்கள், $2\times2\times\frac{1}{4}$, $2\frac{1}{2}\times2\frac{1}{2}\times3/8$, $3\times3\times\frac{1}{4}$ சுருக்குகேற்றுகள், $\frac{1}{4}$" தகடுகள், $3\times3\times3/8$ T கேடர்கள், 12" ப கேடர்கள்: மற்றும் தேவையான பொருட்கள் எம்மிடம் உண்டு. அம்பாள் காட்வொயர்ஸ்ரோர்ஸ், 2 3/1, ஸ்ரான்லிறோட், யாழ்ப்பாணம்.
01642

### கல்வி
1-2-1989-ல் ஆரம்பம் Spoken English (With Grammar), Spoken Sinhalese, Sinhalese (With Grammar) ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில் மாலை 4.30-5.30, சனி, ஞாயிறு காலை 9-00-12-30 I E T கல்வி ஸ்தாபனம், 11 B, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
01429

### புத்தகம்
ஆனந்தன் எழுதும் "காலங்கள் மாறும்" சமூகநாவலை சுவைத்து படிக்கும் வாசகர்களே; இந் நாவலாசிரியரின் "ராதையின் நெஞ்சம்" உயிரோட்டமான சமூக நாவல் 200 பக்கங்கள். 30/- ரூபா. ராஜன் புத்தகசாலை, பஸ்நிலையம், யாழ்ப்பாணம்.
01618

வானொலி நாடக நூல், 125 வானொலி நாடகங்களை எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் 9 நாடகங்களின் தொகுப்புநூல் 'கெட்டிக்காரர்கள்' விலை ரூபா 25 எங்கும் கிடைக்கும்.
01660

### தேவை
யாழ். நகரில் புதிதாக ஆரம்பிக்க இருக்கும் புளக் தயாரிக்கும் நிறுவனம் ஒன்றுக்கு நபர் சில், பிளாஸ்ரிக்போட், சித்திர வேலைகள் செய்வதில் அனுபவமுள்ள அல்லது வேலை பழக விரும்பும் பெண்பிள்ளைகள் தேவை. ஆர்ட் கிராபிக்ஸ் 538, ஆஸ்பத்திரி வீதி (ஆஸ்பத்திரி முன்பாக), யாழ்ப்பாணம்.
01651

### விசேட சங்காபிஷேகம்
(பருத்தித்துறை)
இலங்கை இரண்டாவது கதிர்காமமெனப் போற்றப்படும் தென்புலோலி தான்தோன்றி உபயகதிர்காமகந்தன் ஆலயத்தில் தைப்பூசத்தினத்தன்று விசேட சங்காபிஷேகம் நடைபெற்றது.

அன்றைய தினம் பகல் உபய கதிர்காமக்கந்தன் திருவீதி உலாதிருவிழாவும் நடைபெற்றது

### தேவை
புரோயிலர் கோழிகள் தேவை. இருப்பவர்கள் தொடர்புகொள்ளவும். அண்ணா பாம், இணுவில், செம்மா தெரு, யாழ்ப்பாணம்.
01652

### விற்பனைக்கு
C90 Honda Econd Power மோட்டார் சைக்கிளும், Hero சின்னச் சைக்கிளும் விற்பனைக்கு. பொ. சிவபாதலிங்கம், நம். 9, அரசடி ஒழுங்கை, தட்டாதெரு, யாழ்ப்பாணம்.
01644

**A/L MATHS**
**ஆசிரியர்:**
**ரவிமோகன்**
யாழ்ப்பாணம்
[பெருமாள்கோவிலடி]

## முதலாவது நினைவஞ்சலி



### அமரர் சுப்பிரமணியம் முருகவேள்
B. A. (Cey) S. L. A. S.
[மேலதிக அரச அதிபர் (காணி) கிளிநொச்சி]

பூவுலகில் 03. 05. 1938 — வானுலகில் 11. 02. 1988

ஆண்டொன்று ஓடிமறைந்தாலும் இதயத்தால்
நாங்கள் உங்களை என்றென்றும் மறவோம்.

எம் குடும்பத்தின் குலவிளக்கே - உங்களின் ஆத்மசாந்திக்காக எமது இதய பூர்வமான அஞ்சலிகளைச் செலுத்துகின்றோம்.

அன்பு மனைவி, பிள்ளைகள்.
சாவகச்சேரி.
01622

# அகில இலங்கை
# பரஸ்பர சகாய நிதிச் சங்கம்

தபாற்கந்தோர் அருகாமை — வட்டுக்கோட்டை

ஸ்தாபிதம்: 22 - 08 - 1957
பதிவு இலக்கம்: S 154 / 26 - 03 - 1964

## அன்பார்ந்த தமிழ் மக்களே!

### அனைவருக்கும் எங்கள் ஸ்தாபனத்தின் மகிழ்ச்சிகரமான அறிவிப்பு

பரந்துபட்ட சேவையை மேற்கொள்ளும் பொருட்டு எமது சங்கத்தின் புதிய கிளை நிறுவனம் எதிர்வரும் 05 . 02 . 1989 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிமுதல் வரும் சுபவேளையில் இருந்து 507, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் திறந்து வைக்கப்படவுள்ளது என்பதைப் பெருமகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

"சிக்கன முறையைக் கையாண்டு சேமிக்கச் செய்வதும் பணக்கஷ்டம் ஏற்படும்போதும், மரணம் நேரும் போதும் பண உதவி செய்தலையும் பிரதான நோக்குகளாகக் கொண்டு செயற்படும் இந்த அகில இலங்கை பரஸ்பர சகாய நிதிச் சங்கம் உங்கள் சங்கம். இதில் அங்கத்தினராகச் சேர்ந்துகொண்டு நன்மைகள் பலபெற அன்புடன் அழைக்கிறது."

பணம் பெறுவதே நோக்கமாகக் கொண்டுள்ள சில நிதிநிறுவனங்களும் அந்நிய நாட்டு உதவியுடன் இயங்கும் சில ஸ்தாபனங்களும் தங்கள் தலைமையகத்தை தமிழ் மக்களுக்கு வெகுதூரத்தில் வைத்துக் கொண்டும் எமது நிதியினால் தமது சுற்றுடலை வளம்படுத்திக் கொண்டும் இருக்கும் இன்றைய காலகட்டத்தில் நீங்கள் செய்யவேண்டியது என்ன?

எங்கள் தாயக மண்ணில் தலைமையகத்தை வைத்துக்கொண்டு எம் தமிழ் மக்களுக்காகத் தம்மையே அர்ப்பணித்து சேவையே இலட்சியமாகக் கொண்டு செயற்படும் இச்சங்கத்தை ஆதரிப்பதல்லவா. இன்றே அகில இலங்கை பரஸ்பர சகாய நிதிச் சங்கத்தில் உங்களையும் ஓர் அங்கத்தினராகச் சேர்த்துக்கொண்டு வாழ்வைப் பிடிப்புள்ளதாக்குங்கள். நாம் வழங்கும் சேவைகள் அனைத்தும் உங்கள் அன்றாட வாழ்வுடன் பின்னிப் பிணைந்தவை. ஒவ்வொன்றும் உங்கள் வாழ்வின் மைல்கல். எமது இளம் சந்ததி வளத்துடன் வளர்ந்து முன்னேற அருமையான திட்டங்கள்.

அங்கத்தினர்களுக்குரிய எமது நன்கொடைகள்: ருதுகல்யாணம், திருமணம், மரணம்
உடனடியாக உங்களையும் ஓர் அங்கத்தினராக எம் ஸ்தாபனத்துடன் இணைத்துக்கொள்ளுங்கள்.

பிரவேசம் ரூ. 120 — மாதாந்தம் ரூ. 20

மேலதிக விபரங்களைப் பெற உடன் தொடர்புகொள்ளுங்கள்:

பொது முகாமையாளர்
அகில இலங்கை
பரஸ்பர சகாயநிதிச் சங்கம் லிமிற்றெட்
தபாற்கந்தோர் அருகாமை, வட்டுக்கோட்டை.

வே. இ. புவனஈஸ்வரன்
தலைவர்

01587

# வார முரசொலி

# நினைத்ததைச்செய்துமுடிக்கும்

# அஞ்சாநெஞ்சினன் 'வித்தி'

ஈழத்தமிழர் யாவருக்கும் நன்கு தெரிந்த ஒருவர் பேராசிரியர் வித்தியானந்தன். கடல் கடந்த நாடுகளிலே எங்கெல்லாம் தமிழர் வாழ்கின்றார்களோ அங்கெல்லாம் இவருடைய பெயர் பரிச்சயமான தொன்றாகும். தமிழறிஞருக்கு இந்த ஈழத்தறிஞரை நன்கு தெரியும். அதனால் தான் தமிழ் நாட்டிலே முதன்முலாக ஒரு தமிழ் பல்கலைக்கழகம் தஞ்சைப் பெருநகரில் அமைத்த போது அப் பல்கலைக்கழகத்தின் ஆளுனர்சபைக்கு ஈழத்திலிருந்து இப்பேரறிஞர் தெரிவுசெய்யப்பட்டார். அறிஞனாக, பேராசிரியனாக, கலைஞனாக, ஆராய்ச்சியாளனாக, பல்கலைக்கழக நிர்வாகியாக, குடும்பத்தலைவனாக தோற்றும் 'வித்தி'யிடத்துள்ள மனிதப் பண்பு எல்லாவற்றுக்கும் மேலானதொன்றாகும்.

வசதியற்ற பல்கலைக்கழக மாணவர்கள், கடன் பெற்றுத் தம் பல்கலைக்கழக கல்வியை மேற்கொள்வது வழக்கமான விடயமாகும். இக்கடன் வசதியினைப் பெறாத சில மாணவர்கள் என்னிடம் ஒருநாள் தம் நிலையை மனவருத்தத்துடன் கூறிக் கொண்டிருந்தார்கள். அப்போது என்னருகே நின்ற பண்டிதர் க. வீரகத்தி 'அந்த மனுசன் பெரியவனப்பா, அவரிடம் போய்ச் சொல்லுங்கோ நிச்சயமாய் உங்கள் குறை தீரும்' என்று கூறினார். பண்டிதர் குறிப்பிட்ட அந்த பெரிய மனிதன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தராயிருந்த பேராசிரியர் வித்தியானந்தனேயாகும். பண்டிதர் கூறியது போல அம்மாணவர்களுடைய குறை தீர்ந்தது பேராசிரியருக்கு அம்மாணவர்களுடைய பெயர்கள் நினைவிலே இருக்க மாட்டாது. ஆனால் அம்மாணவர்கள் இவரை என்றும் மறக்க மாட்டார்கள்.

பேராதனைப் பல்கலைக்கழகத்திலே அக்காலத்தில் வசதியற்ற மாணவர்களுக்கு (Bursary) எனப்படும் பல்கலைக்கழகப் பணஉதவி வழங்கப்படுவதுண்டு. பல தமிழ் மாணவர்களுக்கு இவ்விடயமே தெரியாமல் இருந்ததுண்டு. வசதியற்ற மாணவர்கள் எவரெவரென இனங்கண்டு அவர்களுக்குத் தானே விண்ணப்பப் படிவங்கள் எடுத்துக்கொடுத்து அப்பண உதவியினை பெற்றுக் கொடுக்கும் வழக்கம் இந்த மனித நேயப் பண்பு மிக்க பேராசிரியரிடம் இருந்தது. நானும், இன்னும் பல மாணவர்களும் அதற்குச் சாட்சி.

ஒருவருடைய இன்பத்திலே தொடர்பு கொள்வதை விட அவர் துன்பத்திலே பங்கு கொள்வதுதான் மேலானது. பேராசிரியரிடம் வாய்ந்த இப்பண்பினைப் பலரும் பல்வேறு சந்தர்ப்பங்களிலே விதந்து கூறியுள்ளனர். தன்னுடைய மாணவர்களுக்கோ நண்பர்களுக்கோ ஏதாவது இன்னல் ஏற்படும் சந்தர்ப்பத்திலே அவர்கள் நாட்டின் எப்பகுதியில் இருந்தாலும் அங்கு சென்று அவர்களுடைய துன்பத்திலே தானும் பங்கெடுத்துக் கொள்வார். மாணவர்களோ, நண்பர்களோ, கடிதம் எழுதினால் அக்கடிதத்திற்கு உடனடியாகப் பதில் எழுதும் மிகவும் அரிய பண்புடையவர் இப்பெரியார். உலகத்தின் எப்பகுதியிலிருந்தாவது 'வித்தி'க்குக் கடிதம் எழுதினால் நிச்சயமாகப் பதிலை எதிர்பார்க்கலாம். சில பெரிய மனிதர்கள் தம் தரத்தில் குறைந்தவர்கள் எழுதும் கடிதங்களுக்குப் பதிலே எழுதுவதில்லை. ஆனால் மானுடநேசமுள்ள இப்பண்பாளனோ எவர் கடிதம் எழுதினாலும் அதற்கு உடனடியாகப் பதில் எழுதி மகிழ்ச்சியடைவார். இவரிடமுள்ள முகவரிப் புத்தகத்தை யாருக்காவது காணும்வாய்ப்பு ஏற்பட்டால் அவர் அதன் நிலையைக் கண்டு மிகுந்த ஆச்சரியமடைவார். பல தசாப்தங்கள் கண்ட புத்தகம் அது. பல்கலைக்கழகத்தில் பயின்று நல்ல தொடர்பினை ஏற்படுத்திக் கொண்டு வந்துள்ள மாணவர்கள் நண்பர்கள் ஆகியோருடைய முகவரிகளெல்லாம் அப்புத்தகத்திலே அமைந்துள்ளன. சிலர் இந்த உலகிலே முகவரியின்றி மறுவுலகம் சென்று விட்டனர். அவர்களுடைய பெயர்களும் அப்புத்தகத்திலே இன்னும் காணப்படுகின்றன.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இவரிடம் பயின்றவர்கள் அல்லது இவருடன் நன்கு பழகியவர்கள் தங்களுடைய உறவினர் அல்லது மாணவர்கள் யாராவது பல்கலைக்கழகம் செல்கின்றாரெனில் தயக்கமெதுவுமின்றி பேராசிரியரை அம்மாணவர் நலனைக்கவனிக்கும்படி எழுதுவர். பேராசிரியரும் அவ்வாறு வந்தோருடைய நலன்களை கவனித்து வந்துள்ளார். மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலயத்திலே எனக்குத் தமிழ் பயிற்றியவர் பண்டிதர் வித்துவான் வி.சீ. கந்தையா அவர்கள். அவருக்கும் பேராசிரியருக்கும் நெருங்கிய தொடர்பு இருந்தது. வகுப்பிலே தருணம் வாய்க்கும் பொழுதெல்லாம் 'நீங்கள் பல்கலைக்கழகம் போனால் உங்களுக்கு எந்தக் கஷ்டமும் வராது. அங்கு கலாநிதி வித்தியானந்தன் இருக்கிறார். அவர் வேண்டிய உதவிகளெல்லாம் செய்வார் என்று பண்டிதர் கூறியது போல அன்று அந்த வகுப்பிலே படித்துப் பல்கலைக்கழகம் சென்றவர்கள் அனைவரும் கலாநிதி வித்தியானந்தனுடைய அன்பினையும் பல்வேறு உதவிகளையும் பெற்றனர். இவருடைய மனம் வருந்தும்படி செயலாற்றியவர்கள் இவரைத் தூஷித்துத் திரிந்தவர்கள் தங்கள் பிழையினைப் பின்னொரு காலத்தில் உணர்ந்தோ உணராமலோ இவரிடம் உதவி என்று கேட்டுச் சென்றால் முன்னர் இவர்களுக்குச் செய்த உதவியினைவிடப் பன்மடங்கு செய்யும் பண்புடையவர் பேராசிரியர் 'வித்தி'. இப்பண்பினை எண்ணும்போதெல்லாம் புறநானூற்றிலே சோழன் நெய்தலங்கானல் இளஞ்சேட் சென்னியை ஊன்பொதி பசுங்குடையார் பாடும்போது

'நீமெய் கண்ட தீமை
காணின்
ஒப்ப நாடி அத்தக ஒறுத்தி
வந்தடி யொருத்தி முந்தை
நின்றபின்
தண்டமும் தணிதிநீ பண்
டையிற் பெரிதே'

என்று கூறும் பாடலடிகளே நினைவுக்கு வரும். நீ மெய்யாக மனத்தான் ஆராய்ந்து அறுதியிடப்பட்ட கொடுமையை ஒருவன் பாற் காணின் அதனை நீதிநூற்குத் தக ஆராய்ந்து தீமைக்குத் தக தண்டஞ் செய்வை வந்து நின் பாதத்தையடைந்து முன்னே நிற்பாராயின் அவர் பிழை செய்வதற்கு முன் நீ செய்யும் தண்டமும் தணிவை என்று இப்பாடலடிகளுக்கு உரை கூறப்பட்டுள்ளது இவ்வாறு நோகச் செய்தவர்களையும் பொறுக்கும் பேராசிரியருடைய இவ்வியல்பினைப் பலவீனமாக எண்ணி எவரும் ஏமாறிவிடவும் முடியாது.

பேராசிரியர் அ. சண்முகதாஸ்

கண்டிப்பாக நடந்துகொள்ள வேண்டிய இடத்தில் மிக கண்டிப்பாகக் கூறவேண்டியவற்றைக் கூறிச் செய்ய வேண்டியவற்றைச் செய்து விடுவார்.

இக்கட்டான வேளைகளிலே மனந்தளருதல், கோபித்தல், தடுமாற்றமடைதல் ஆகியன சாதாரண மனிதனிடம் ஏற்படுவன. பேராசிரியர் வித்தி ஒரு மாமனிதன் என்பதனே இக்கட்டான சந்தர்ப்பங்களிலே இவர் நடந்து கொள்ளும் விதத்தினைப் பார்பவர்கள் நன்கு உணர்ந்து கொள்வர் நான்காவது உலகத்தமிழராய்ச்சி மகாநாட்டை யாழ்ப்பாணத்திலே நடத்தியபோது மிகப்பதற்றமான வேளைகளிலும் தடுமாற்றமில்லாமல் நிதானமிழக்காமல் செயலாற்றிய பேராசிரியரின் பண்பினை இவருடன் மகாநாட்டுக்காக நெருங்கி உழைத்தவர்கள் நேரடியாக அவதானித்திருப்பார்கள், மாநாட்டுக்கு அரசின் ஆதரவில்லை வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கு விசா வழங்க அரசுபின்னின்றது பேராசிரியரின்சில மாணவர்களும் நண்பர்களும் இவருக்கு ஆதரவு கொடுக்காமல் ஒதுங்கிக் கொண்டனர். இந்த நிலையில் சாதாரண மனிதர்களாயின் இயங்கவோ, செயலில் முன்னேறிச் செல்லவோ இயலாதவர்களாகியிருப்பவர். ஆனால் பேராசிரியரோ தான் எடுத்துக் கொண்ட நல்ல நிகழ்ச்சியினை நிகழ்த்தியே ஆவதென ''உச்சி மீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே என்னும் பாரதிப்பாடலுக்கு இலக்கியமாக நிதானத்துடன் செயலாற்றி மாநாட்டை நடத்தினார்.

... 15ஆம் பக்கம் பார்க்க

## செயற்கரிய செய்தோர்

சேர சோழ பாண்டியர் மூவரும் பெரும்பாலும் ஒருவரை ஒருவர் பகைத்த வண்ணமே வாழ்ந்தனர். ஒருமுறை சோழன் திருமாவளவனும், பாண்டியன் பெருவழுதியும் பெருநட்பினராய் ஒன்றாக இருந்தனர். இந்த இனிய காட்சியைக் காரிக்கண்ணனார் என்னும் புலவர் கண்டார். பெரும் மகிழ்வு கொண்டார். ''நீங்கள் இருவரும் இன்றுபோல் என்றும் அன்பாக இருங்கள் இவ்வாறு அன்பாக இருந்தால் இந்த உலகம் முழுவதுமே உங்கள் ஆட்சியின் கீழ் நிலவும் என்றார். அத்துடன் இன்னும் ஒரு சிறந்த கருத்தை அவர்களுக்குக் கூறினார். அக்காலத்தில் அவர்களுக்குக் கூறிய அக்கருத்து எக்காலத்தும் எவர்க்கும் பொருந்தும்.

காரிக்கண்ணனார்

அவர் சொன்ன கருத்து' ''நீங்கள் இருவரும் ஒற்றுமையாக இருப்பதைப் பார்த்து அதைப் பொறுக்க முடியாதவர்கள் நல்லன போலவும், நியாயத்தை உடையன போலவும் முன்னோர் ஒழுகிய ஒழுக்கமுடையன போலவும் சிலவற்றைக் கூறி உங்களிடையே புகுந்து உங்களைப் பிரிக்கமுயல்வார்கள். அவர்களது சிறப்பில்லாத மொழியைக் கொள்ளாதீர்கள். இன்றுபோல் என்றும் ஒற்றுமையுடன் வாழுங்கள்'' என்றார்.

வேந்தர்கள் ஒன்றுபட்டிருப்பின் போர் அற்றுவிடுமென்பதையும், தமிழ்நாடு ஒன்றுபடும், தமிழர் வாழ்வு வளம்பெறும், என்பதையும் உணர்ந்த காரிக்கண்ணனார் அவர்களை வாழ்த்தி இவ்வரிய கருத்தை வழங்கினார்.

## தரிசனம்

எங்களுடன் ஒருவராக, எங்களுக்குள் ஒருவராக எங்களுக்காகவே எங்களுடன் வாழ்ந்து வந்த எங்கள் கால மூத்த தமிழறிஞனை நாங்கள் இழந்து விட்டோம்.

'வித்தி' இருக்கிறார் எமக்கென்ன குறை? என்று எண்ணியிருந்த தமிழ் பேசும் இனம், இன்று மூத்த தமிழ் மகனை இழந்து தவிக்கின்றது.

தமிழ்த்தாயின் தனிப் பெரும் புதல்வனாய் அமர்ந்து, தமிழ்த் தாயை அலங்கரித்து, அழகூட்டி, மெருகூட்டிவந்த வித்தியானந்தன் என்ற பேரறிஞனை தமிழ்கூறும் நல்லுலகு மறந்து விடத் தயாராகவில்லை.

நேற்று மாலை அந்தப் பெருமகனின் பூதவுடலை அக்கினி தன்னுடன் அணைத்துக் கொண்ட போது, கதறி அழுதவர்கள், கண்ணீர் விட்டவர்கள், மௌனித்து நெஞ்சத்துள் விம்மிப் புடைத்தவர்கள் அந்தப் பேராசானின்பால் அன்பு கொண்டவர்கள்.

பகைவர்களேயில்லாத தனியுலகில் கொடி கட்டிப் பறந்த வேந்தனாக பேராசிரியர் வித்தியானந்தன் எம்மத்தியில் பவனி வந்தவர்.

அன்னாரின் அப்பழுக்கற்ற நாற்பதாண்டு கால கல்வி, இலக்கிய, சமய, சமூகப் பணிகளில், பத்தாண்டுகள் மட்டுமே யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துடன் சம்பந்தமானது.

எனினும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்னும் போது பேராசிரியர் வித்தியானந்தனை அங்கிருந்து பிரித்து வைத்துப் பார்க்க முடியவில்லை.

தனது மனைவி, பிள்ளைகளை அவர் எவ்வாறு நேசித்தாரோ, அதனிலும் மேலாக அவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அக்கறை காட்டி நேசித்தார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஈழத் தமிழர்களின் சொத்து என்பதால் அதனை வளர்ப்பதிலும், பேணுவதிலும் பேராசிரியர் காட்டிய அதீத அக்கறை இதனுடன் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் தெரிந்தது.

ஆனாலும் இறுதி நாட்களில் அன்னார் பல்கலைக்கழகத்திலிருந்து பிரித்து வைக்கப் பட்டிருந்தது வேதனைக்குரியது.

அதனிலும் வேதனையான விடயம், அவரிடம் உதவி பெற்றவர்கள், அவரால் நம்பப்பட்டவர்களே அவருக்கு எதிராக செயற்பட்டமை.

இது எல்லாவற்றிலும் மேலான வேதனை தரும் நிகழ்வு, எந்தப் பல்கலைக்கழகத்தை அவர் கட்டி வளர்த்து உயிரினும் மேலாக நேசித்தாரோ, அந்தப் பல்கலைக்கழகத்தைத் தரிசிக்காமலே தமது இறுதி யாத்திரையை அவர் மேற்கொண்டதுதான்!

எஸ். திருச்செல்வம்
பிரதம ஆசிரியர்
முரசொலி / வாரமுரசொலி

## வைத்திய கலசம்

# தோய்விற்கு வைத்தியம்

டாக்டர் எம். கே. முருகானந்தன் M. B. B.S. (Cey)

★ தொய்வு சிலருக்குத் திடீரெனத் தோன்றுவதாலும், வேறு சிலருக்கு நீண்டகாலம் நீடிப்பதாலும், அதைக் கட்டுப்படுத்தக்கூடிய மருந்து வகைகளையும், ஏனைய நடைமுறைகளையும் அறிந்து வைத்திருப்பதுடன், உங்கள் வைத்தியரின் ஆலோசனையுடனும், அவரது கண்காணிப்பின் கீழும் அவற்றை உபயோகிக்கவும் பழகியிருந்தால், பல வீண் அசௌகரியங்களைத் தவிர்த்துக் கொள்ளலாம்'

★ தொய்வினால் பாதிக்கப்படும் போது, கைகளை திடமாக ஊன்றிக்கொண்டு கதிரையில் உட்கார்ந்திருப்பது அசௌகரியமானது என்பதை அனுபவத்தில் உணர்ந்திருப்பீர்கள். எனவே இரவில் அடிக்கடி ஏற்படும் ஆஸ்த்மாவிற்கு உதவும் வகையில், படுக்கை அறையில் கதிரை ஒன்றை முன்கூட்டியே ஆயத்தமாக வைத்திருப்பது நல்லது.

★ இந்நோயினால் அவஸ்தைப்படும் போது, சுவாசக் காற்றை வெளியேற்றுவதில் உள்ள சிரமத்தால் மன அந்தரப்பட்டு, வேகமாகச் சுவாசிக்க முயல்வது நிலைமையை மேலும் மோசமாக்கும். அந் நேரத்தல் மன அமைதியைப் பேணி, ஆழமாகவும், மெதுவாகவும் சுவாசியுங்கள். இதற்காகச் சாதாரண நேரங்களில் பயிற்சி செய்வது அவசியம்.

★ எபட்ரீன் (Ephedrine), அமைனோபிலின் (Aminophylline), ஒஸிபிரினலீன் (Orciprenaline–Alupent) போன்றவை நீண்ட காலமாகப் பெருமளவில் உபயோகத்தில் இருந்தாலும், படபடப்பு, நித்திரையின்மை, ஓங்காளம், சததி போன்ற விரும்பத்தகாத விளைவுகளையும் கொடுக்கலாம். எபட்ரீன், அமைனோபிலின் ஆகியவற்றுடன் நித்திரையையும் கொடுக்கக் கூடிய லூமினல் (Luminal) என்ற மருந்தையும் கலந்து எபட்ரீன் கொம்பவுண்ட் (Ephedrine Compound) என்ற மருந்து ஆக்கப்பட்டுள்ளது. இது டெட்ரால் (Tedral), பிரனோல் (Franol) போன்ற பிரபலமான வியாபாரப் பெயர்களில் கிடைக்கிறது.

★ மிகக் குறைந்த அளவு பக்கவிளைவுகளையே ஏற்படுத்தும் பாதுகாப்பான மருந்துகள் சல்பியூடமோல் (Salbutamol)டெர்பியூடலின் (Terbutaline) ஆகியவையாகும்' இவை முறையே வென்டோலின் (Ventolin) பிரிக்கானில் (Bricanyl) ஆகிய பிரபல வியாபாரப் பெயர்களில் கிடைக்கிறது.

★ ஸ்டீரொயிட்ஸ் (Steroids) என்ற வகையைச் சேர்ந்த பிரட்னிசோலோன்(Prednisolone)ஹைட்ரோகோட்டிசோன் (Hydrocortizone) போன்றவை மிக வீரியமான, ஆனால் பல பின் விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய மருநதுகள். இவ்வகை மருந்துகளை நீண்டகாலம், அதிக அளவில் உபயோகித்தால் உடல் வீக்கம், உயர்இரத்த அமுக்கம், எலும்புத்தேய்வு, குடற்புண், நீரிழிவு போன்ற பாரதூரமான பின் விளைவுகள் ஏற்படலாம். எனவே இவ்வகை மருந்துகளை வைத்திய ஆலோசனையின்றி நீங்களாகவே ஒரு போதும் உட்கொள்ள வேண்டாம்.

★ பெரும்பாலான மருந்துகள் மாத்திரைகளாகவும், திரவமருந்துகளாகவும் கிடைக்கின்றன. வென்ட்டோலின், பிரிக்கானில், பெக்காடைட் (Becatide) போன்றவை 'பம்ப்' (Pump) என்று பொதுவாகச் சொல்லப்படும். (Inhaler) ஆகவும் கிடைக்கின்றன. இவற்றை வாயினுள் வைத்து அமுக்கும்போது, புகை போன்று வரும் மருந்து சுவாசக் குழாய்களை நேரடியாக அடைவதால், மிக விரைவாக நிவாரணம் கிடைக்கிறது. மிகக்குறைந்த அளவு மருந்தே இம் முறையில் உபயோகிக்கப்படுவதால் மிகவும் பாதுகாப்பானது. இவை ஆபத்தானவை என்றும், உபயோகிக்க ஆரம்பித்தால் விட்டுவிட முடியாதபடி பழக்கப்பட்டுவிடும் என்றும் பலரும் நம்புவது தவறானது.

★ எனவே அடிக்கடி தொய்வு வரும் நோயாளிகள்' பம்ப்' உபயோகிக்க ஆரம்பிப்பது நல்லது. ஆனால் இதைப் பூரண பலன் பெறும் வகையிலும், பாதுகாப்பாகவும் உபயோகிக்கும் முறை பற்றி ஆரம்பத்திலேயே வைத்தியரிடம் பயிற்சி பெறவேண்டும்.

★ நோய் மிகக் கடுமையாக இருந்தால், சுய வைத்தியம் செய்ய முனைவது ஆபத்தில் முடியலாம். அத் தருணங்களில் உங்கள் குடும்ப வைத்தியரிடமோ, அரசினர் வைத்தியசாலைக்கோ செல்வது அவசியம் இவ் வேளைகளில மருந்துகளை ஊசிமூலம் ஏற்ற வேண்டியிருக்கலாம். சில வேளைகளில் மருந்து கலந்த சேலைன் (Saline drip) இரத்தக் குழாய்கள் மூலம் செலுத்த வேண்டியும் நேரிடலாம். ஊசி போட்டுப் பழகிவிட்டால் பின்னால் ஊசி இல்லாமல் சமாளிக்க முடியாது என்று சிலர் எண்ணுகிறார்கள். இது தவறானது மிக அவசியம் என்று கருதும் தருணங்களிலேயே வைத்தியர்கள் ஊசி ஏற்றுவார்கள் என்பதை மறந்து விடாதீர்கள்.

★ இந் நோய்க்கு, உங்களுக்கு நீங்களாயோ, அல்லது உறவினர்களைக் கொண்டோ ஊசி மருந்தை ஏற்ற முயற்சிக்காதீர்கள்; ஏனெனில் அது உயிராபத்தைக் கூடக் கொண்டு வரலாம்.




# ஒரு பாட்டில் பதினெட்டு நூல்கள்

பத்துப் பாட்டு எட்டுத் தொகைக்குப்பின் வந்தவை பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள். இவை எவை என்பதைக் கூறுகிறது ஒரு வெண்பா.

'நாலடி நான்மணி நானாற் பதைந்திணைமுப் பால் கடுகங் கோவை பழமொழிமா மூலம் இன்னிலைய காஞ்சியுடன் ஏலாதி யென்பவும் கைந்நிலையுமாங் கீழ்க் கணக்கு'

இப்பாடலில் வரும் நூல்கள்: நாலடியார், நான்மணிக்கடிகை, இன்னா நாற்பது, இனியவை நாற்பது, கார் நாற்பது, களவழி நாற்பதுஐந்திணை ஐம்பது திணை மொழி ஐம்பது திணை மாலை நூற்றைம்பது, திருக்குறள், திரிகடுகம்ஆசாரக்கோவை, பழமொழி நானூறு, சிறுபஞ்சமூலம், முதுமொழிக்காஞ்சி,ஏலாதி கைந்நிலை.

# மேதைகள் கொடுத்த விளக்கம்

### இலட்சியம்

உயர்ந்த இலட்சியத்திற்காக இடையறாது உழைப்பதில்தான் ஒருவன் உயிர் வாழ்வதின் பெருமை முழுவதும் அடங்கி இருக்கிறது.

பெர்னாட்ஷா

### வெற்றி

''வெற்றி'' என்ற வார்த்தையை நினைப்பதை நிறுத்துங்கள். அதற்குப் பதிலாக ''உழைப்பு'' என்ற வார்த்தையை உச்சரியுங்கள் அதை நன்றாகச்செய்யுங்கள் செய்யும்வரையில் சொல்லிக்கொண்டே இருங்கள். ஒருநாள் அந்த உழைப்பு என்ற வார்த்தையே வெற்றி என்ற வார்த்தையாக மாறுவதைக் காண்பீர்கள்.

### உண்மை

தம்முடைய கட்சியில் உண்மை இருக்கவேண்டும் என்று ஒவ்வொருவரும் விரும்புகிறார்கள் ஆனால் ஒவ்வொருவரும் உண்மையான கட்சியில்சேர விரும்புவதில்லை.

—எவர் ஹார்ட்

# அதிசயசெய்திகள்

● போல் ட்ராமெல்லி என்ற பிரான்ஸ் தேசத்தவர் ஒரு நத்தையை தன் வீட்டுப் பிராணியாக வளர்த்தார். நத்தை வளர்த்த மனிதர் உலகில் இவர் ஒருவர்தான். அந்த நத்தையே உலகின் மிகப் பெரிய நத்தையாகிவிட்டது.5 வயதுடைய இதன் எடை ஒன்றரைக்கிலோ ஆகும்.இது விலங்குகள் பற்றிய ஒரு படத்தில்நடித்தும் விட்டது. இதனை 'போல் ட்ராமெல்மி' ஆபிரிக்காவிலிருந்து வந்த கப்பல் ஒன்றிலிருந்து கண்டெடுத்து வளர்த்தார்.

● கலிபோர்ணிய விலங்குக் காட்சிசாலையில் 'கோ கோ' என்ற கொரில்லா ஊமைப்பாசை பேசுகிறதாம். ஊமைகள் சைகையால் பேசுவது போல் இந்த கோகோ பேசுகிறதாம்.மேலும் இது மிருகக் காட்சிச்சாலையில் பூனைகளை தன் நண்பர்கள் ஆக்கிவிட்டதாம்.தற்போது அது பேபி என பேசக் கற்று வருகின்றதாம்.

● ஜப்பானின் ஒபிரொ பூங்காவில் உள்ள 400 மீற்றர் நீள வாங்கே உலகின் மிக நீளவாங்கு ஆகும்.இதில் ஒரே சமயத்தில் 1000 பேர் அமரலாம்.

● நினைவுச்சக்தியை வளர்க்க ஜேர்மன் தேச பேராசிரியர் கூரத்பாலித் ஒரு மருந்தைக் கண்டுபிடித்துள்ளார். ஆகா என எல்லோரும் சந்தோஷப்படாதீர்கள். இம்மருந்து சுத்தமாக ஞாபக சக்தி அற்றவர்களுக்குத்தான் உபயோகப்படுமாம்.

தமிழாளன்
நல்லூர்

# முகத்தில் விழித்த பலன்

ஓர் அரசன் பொழுதுவிடியுமுன் எழுந்து வேட்டையாடுவதற்குக் காட்டுக்குப் போனான். காட்டில் நண்பகல் வரைக்கும் சுற்றித் திரிந்தும் வேட்டை அகப்படவில்லை. அன்றைய தினம் விடியற் காலத்தில் அரசன் ஒரு குடியானவன் முகத்தில் விழித்தபடியால் தனக்கு வேட்டை அகப்படவில்லையென்று நினைத்து அந்தக் குடியானவனைக் கொன்றுவிடும்படி கட்டளையிட்டான்.

குடியானவன் அரசனைப் பார்த்து ''பேரரசேவிடியற் காலத்தில் நீங்கள் என் முகத்தில் விழித்தது போலவே நானும் உங்கள் முகத்தில் விழித்தேன். என் முகத்தில் நீங்கள்விழித்ததற்கு உங்களுக்கு வேட்டை அகப்படவில்லை. உங்கள் முகத்தில் நான் விழித்ததற்கு என்னுடைய உயிரை இழந்து போகும்படி ஏற்பட்டிருக்கிறது'' என்றான். இதைக்கேட்டவுடன் அரசனுக்கு அறிவுண்டாகி ''குடியானவனைக் கொல்ல வேண்டாம்'' என்று கட்டளையிட்டான். (பிரதாப முதலியார் சரித்திரத்திலிருந்து)

# காந்தியும் டால்ஸ்டாயும்

மாகாத்மாகாந்தி தமது குருவாக ரஷ்யஞானி டால்ஸ்டாயை போற்றினார். எளிமைவாழ்வு, ஏழையர்க்கு இரங்கல், பொருட்பற்றின்மை அனைத்திலும் இருவருக்கும் பெரும் ஒற்றுமை இருந்தது.

இல்லற வாழ்வு இருவருக்கும் நேர்மாறாக அமைந்தது. ஆரம்பத்தில் சிறிது வேறுபட்டாலும் காந்தியின் கொள்கைகளைப் புரிந்துகொண்டு காந்தியின் பொதுப்பணிகள் அனைத்துக்கும் துணை நின்றார்கஸ்தூரிபாய்

டால்ஸ்டாயின் மனைவி சோன்யாவோ டால்ஸ்ட்டாயின் கொள்கைகளுக்குப் பெரிதும் மாறுபட்டார். எளிமையை அவர் விரும்பவில்லை. ஆடம்பரத்தை விரும்பினார்; பொருளை விரும்பினார். பெரும்சொத்துக்கு உரியவரான பிரபு குடும்பத்தைச் சேர்ந்த டால்ஸ்டாய் தமது சொத்துக்களை ரஷ்ய ஏழை மக்களுக்கு பகிர்ந்தளிக்க விரும்பினார் இதனை அறிந்த டால்ஸ்டாயின் மனைவி சோன்யா டாஸ்டாய் அப்படிச்செய்தால் அவருக்குப் பயித்தியம் பிடித்ததென்று நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து அவரைக் கொடுக்காது தடுப்பதுடன் மனநோய்மருத்துவமனைக்கு அனுப்பி விடுவதாகவும் அச்சுறுத்தினாள்.

ஈற்றில் மனைவியுடன் கோபித்துக்கொண்டு வீட்டை விட்டுப் புறப்பட்ட டால்ஸ்டாய் பிரயாணம் செய்யும்போது உடல் நலம் இழந்து வெகு தொலைவில் உள்ள ஒரு புகைவண்டி நிலையத்தின் அருகில், புகைவண்டி நிலைய அதிபரின் வீட்டில் அநாதைபோல் உயிர்விட்டார்.

# அன்னா கரீனா நாவல்

டால்ஸ்டாயின் அன்னா கரீனா நாவல் வெளிவந்தபோது ரஷ்ய மக்கள் அனைவரும் பெருமகிழ்வெய்தினர். ஐரோப்பிய இலக்கியத்தில் அதற்கு நிகரான ஒன்று இல்லவே இல்லை என்று வானளாவப் புகழ்ந்தார்கள் விமர்சகர்கள்.

அன்னாகரீனாவின்ஆசிரியரைக் கலைக்கடவுளென்று புகழ்ந்தார் ஒருவர். புகழுடன் போட்டி போட்டுக் கொண்டு பணமும் டால்ஸ்டாயின் வீடுவந்து சேர்ந்தது.

இத்தகைய சிறப்பு வாய்ந்தநாவலை இரண்டே மாதங்களில் டால்ஸ்டாய் எழுதி விட்டார். ஆனால் அதைத் திருத்தித்திருத்தித் தெளிவுபடுத்த மூன்று ஆண்டுகள் சென்றன.

அச்சுக்கு அனுப்பப்பட்ட பின்னரும் டால்ஸ்டாய் திருத்துவார் இது அச்சகத்தாருக்குத் தொல்லையாக இருக்கும். ஆனால் டால்ஸ்டாய் அதுபற்றிக்கவலைப்படுவதில்லை. தமக்குத் திருப்தி ஏற்படும்வரை திருத்துவார்.

## மாதம் ஒரு பிறமொழிக்கதை

இரவு எக்ஸ்பிரஸ் ரயிலில் ரோமை விட்டுப் புறப்பட்ட பயணிகள், ஸல்மோனுவுக்குப் போகும் 'லோக்கல்' ரயிலுக்காக ஃப்பிரியானோ– என்ற சின்ன– ஸ்ரேஷனில் விடியும் வரை காத்திருக்க நேர்ந்தது.

ஐந்துபேர் இரவ முழுதும் அடைந்துகொண்டு கிடந்த இரண்டாம் வகுப்புப் பெட்டியொன்றில், விடியலின்போது ஒரு பெண்மணியும் ஏறினள். துயர் தோய்ந்த தோற்றங் காட்டிய பருத்த பெண்மணி. அவளின் பின்னல், இரைத்து அனுங்கியபடி அவள் கணவர். மெலிந்த பலவீனமான சின்ன உருவம். வெளுத்த முகம், கூர்ந்த சிறிய கண்களில் கூச்சமும், அந்தரமுந் தென்பட்டன.

ஒரு இடத்தைப் பிடித்துக் கொண்டபின், தன் மனைவிக்கு உதவி இடம் கொடுத்தமைக்காக அவர் பெட்டியிலிருந்தோர்க்குப் பணிவுடன் நன்றி கூறினர். பிறகு மனைவியின் பக்கந் திரும்பி, அவளது கோட் கொலரை இழுத்து விட முயன்றபடி கேட்டார்:

''எல்லாம் சரியா, உங்களுக்கு?......''

அவள் பதில் சொல்வதற்குப் பதிலாக மீண்டும் கொலரை மேலே கண்வரை இழுத்துவிட்டாள். - தன் முகத்தை மறைக்க விரும்புவது போல.

''ஊத்தை உலகம் ....'' அந்த ஆள் ஒரு சோகப் புன்னகையுடன் முணுமுணுத்தார்.

இந்தப் பெண்– பாவம்-தன் ஒரே மகனைப் போரிடம் பறிகொடுத்திருக்கும் அபாக்கியவதி– என்பதை சக பயணிகளுக்குச் சொல்ல வேண்டியது தன் கடமையென அவருக்குப் பட்டது. இருபது வயதான அந்தப் பையனுக்காக இவர்களிருவரும் தங்கள் வாழ்க்கைகளையே அர்ப்பணித்திருந்தார்கள். அவன் படிப்பதற்காக ரோமுக்குப் போனபோது ஸல்மோனுவிலிருந்து எலலாவற்றையும் விட்டுவிட்டு அவர்களும் அவன் கூடப் போனர்கள்.

பிறகு.அவனைத் தொண்டர் படையிற் சேர அநுமதித்தது கூட, ஆறுமாதம் வரைக்காவது போர்முனைக்கு அனுப்பப்படமாட்டான் என்ற உறுதிமொழியுடன் தான் ஆனல், இப்போது, இருந்தாற்போல தந்தி வந்திருக்கிறது: அவன் மூன்று நாட்களில் முனைக்குப் போகிறன்; வழியனுப்ப வாருங்கள் என்று.

கோட்டுக்குள் புதைந்தபடி அவ்வப்போது முனகிக்கொண்டிருந்த அப் பெண் நெளிந்து திரும்பினள். இந்த விபரங்களெல்லாம் இந்த மனிதர்களிடத்து துளியளவு பச்சாத்தாபத்தையேனும் உண்டாக்கியிரா– ஏனென்றல், அவர்களும் அநேகமாக அவளைப் போன்றதொரு நிலையில்தானிருப்பார்கள் என்பது அவளுக்கு நிச்சயமாகத் தெரியும்.

கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்த ஒருவர் சொன்னர்: ''இப்பதான் உங்கட மகன் வெளிக்கிடுகிறன் எண்டது ஏதோ கடவுள் புண்ணியம். எங்கட மகனை முதல் நாளே அனுப்பிப் போட்டான்கள். இரண்டுதரம் காயப்பட்டு வந்து, திரும்பியும் போட்டான் .....''

''எங்கபாடு தெரியுமோ?... என்ர இரண்டு பெடியன்களும், மூண்டு பெறுமக்களும் அங்கதான்......'' இன்னெரு பயணி சொன்னர்.

'இருக்கலாம் ஆனு இது. எங்கட ஒரே மகன்... ''என்றர் பெண்ணின் கணவர்.

''எண்டாலென்ன? ஒரே பிள்ளையைச் செல்லங்குடுத்துப் பழுதாக்கலாம்... ஆனு வேற பிள்ளையள் இல்லையெண்டு கூடுதல் அன்பு காட்டமுடியுமோ? பாணைப் போல பங்கிட்டுக் கொடுக்கிறதல்ல, தந்தைப்பாசம்...தன்ர எல்லாப்பிள்ளையளுக்கும்– அது ஒண்டோ, பத்தோ– வஞ்சகமில்லாம முழு முழு அன்பைத்தான் ஒரு தகப்பன் கொடுக்க முடியும்.... நான் என்ர இரண்டு பெடியன்களுக்காகக் கவலைப் படுகிறனெண்டால் பாதி பாதியாய்க் கவலைப்படுகிறதெண்டில்லை. பதிலா, இரட்டிப்பாக் கவலைப்படுகிறன்......''

''உண்மை, உண்மை...''– பெண்ணின் கணவர், கூச்சப்பட்டுப் பெருமூச்சு விட்டுச் சொன்னர்.

''ஒரு கதைக்குச் சொல்லுறன் உங்களுக்கு ஒருகாலும் அப்பிடி வரக்கூடாது முனையில இரண்டு பெடியள் உள்ள தகப்பனுக்கு தற்செயலா ஒருதன் போனலும் ஆறுதலுக்கு மற்றவனவது மிஞ்சுவான். ஆனு ..''

''உண்மைதான்...'' மற்றவர் குறுக்கிட்டார்.

''......தகப்பனை ஆறுதல் படுத்த ஒரு மகன் மிஞ்சுவான் அவனுக்காக தகப்பனும் இருந்துதான் தீர வேணும், ஆனு, ஒரு பிள்ளைக்காரன், மகனில்லாமல் போனல் தானும் செத்து அந்தக் கவலைக்கொரு முடிவைத் தேடிக் கொள்ளலாம்-இதிலை எது கஷ்டம், சொல்லுங்கோ?......என்னுடைய நிலைமை உங்களிலும் பார்க்கப் பரிதாபமானதெல்லோ?''

இன்னெரு பயணி சொன்னர்:

''உது அர்த்தமில்லாத கதை''




இத்தாலியக் கதை:
### லூகி பிராண்டெல்லோ
ஆங்கிலம் வழி தமிழில்
### சாந்தன்

ஊதிய சிவத்த முகம். சிவப்பேறிய சாம்பல் கண்கள். அவருக்கு மூச்சு வாங்கியது அவர் தனக்குள்ளே கஷ்டப்பட்டு அடங்கியிருந்த ஒரு வேகம் விழிகளைப் பிதுக்கி வெளிவந்து விடும் போலிருந்தது.

''அர்த்தமில்லாத கதை...'' அவர் மீண்டும் சொன்னர், முன்வாய்ப்பற்களிரண்டு இல்லாததை மறைக்க வாயைக் கையால் மூட முயன்றவாறே.

''...எங்களுக்காகவா நாங்கள் பிள்ளைகளைப் பெறுகிறம்?''மற்றப்பயணிகள் அவரைக் கவலையுடன் பார்த்தார்கள். சேர்ந்து முதல் நாளே போர் முனைக்குப் புறப்பட்ட பையனின் தகப்பன் பெரு மூச்சு விட்டுச் சொன்னர்:

''நீங்கள் சொல்லுறது சரி; எங்கட பிள்ளையள் எங்களுக்காகவல்ல,அவங்கள் நாட்டுக்காக......''

''உதுவும் அர்த்தமில்லாத கதை......''–பருத்த பயணி பட்டென்று சொன்னர்....'' பிள்ளையளுக்கு உயிர் குடுக்கேக்கை நாட்டைப்பற்றி நினைச்சுக் கொண்டா குடுத்த நாங்கள்? .....பிள்ளையள் பிறந்தது ஏனெண்டா ......சரி; பிறக்க வேணுமெண்டதுக்காகப் பிறந்ததுகள். எங்கட உயிர்தான் அதுகளின்ர உயிர், இதுதான் உண்மை நாங்கள்தான் அதுகளின்ரை, அதுகள் எங்கட அல்ல இருபது வயதாச்சு தெண்டா, பிறகு எங்களைப் போலதானே பிள்ளையளு?......எங்களுக்கும் தாய் தகப்பன் இருந்தினம். அதோட வேற ஆர்வங்களும்:பெட்டைகள்,சிகரட், கற்பனைகள்......நாடுதான்– இல்லையெண்ணேல்லை ..... இருபது வயதிலை நாங்களுத்தான் நாட்டுக்காக வெளிக்கிட்டிருப்பம்–எங்கட தாய் தகப்பன் மறிச்சிருந்தாலும்.இப்ப இந்த வயதிலை நாட்டுப்பற்று இருந்தாலும் பிள்ளைப் பாசம் அதிலும் மேலாலையிருக்கு. போர் முனையிலை மகனுக்குப் பதிலாய்ப்போய் நிற்க முடியுமெண்டா, சந்தோஷமாக ஒப்புக்கொள்ளமறுக்கிற ஆரும் இங்கை இருக்கிறமோ?......''

அவர் கூற்றை ஒப்புக்கொள்வதுபோலத் தலையாட்டியபடி எல்லோரும் மௌனமாயிருந்தார்கள். பருத்த மனிதர் கேட்டார்: ''அப்ப ஏன் நாங்கள், எங்கட பிள்ளையளுக்கு இருபது வயதிலை இருக்கிற உணர்ச்சியளைப்பற்றி யோசிக்கக் கூடாது? தாய் தகப்பனிலை இருக்கிற பாசத்திலும், தன்ரை, நாட்டிலை இருக்கிற பாசம் எவ்வளவோ கூடுதலாயிருக்கிறது. அந்த வயதுக்கு இயற்கைதானே? .. நாடும் சாப்பாடுபோலை. அதில்லாமல் சீவிக்க முடியாது. அது வேணுமெண்டா அதை ஆராவது காக்கத்தானே வேணும்? செத்தாலும், பெருமையோட, அழாம– சந்தோஷமாகச்– சாகிறதெண்டு எங்கட பெடியன்கள் இருபது வயதிலை போருன்கள்... ஒருதன், இளமையோட, சந்தோஷமா, வாழ்க்கையின்ரை அசிங்கங்களைப் பாராம, அது அலுக்காம கசக்காம... போறதெண்டா, அவனுக்கு வேற என்ன வேணும்? ஒருதரும் அப்படிப் பட்டவனுக்காக அழக்கூடாது; எல்லாரும் சிரிக்க வேணும்—என்னைப் போல... அல்லது ஆண்டவனுக்கு நன்றியாவது சொல்ல வேணும்... ஏனெண்டா, என்ர மகன் சாகமுந்தி, தான் நல்ல வழியிலை விரும்பியபடி திருப்தியாகச் சாகிறன் எண்டு சொல்லியனுப்பினன். அதுதான், பாருங்கோ—நான் துக்க உடுப்புக்கூட உடுக்காமலிருக்கிறன்......''

—அவர் தன்னுடைய இளமஞ்சள்கோட்டைக்காட்டுவது போலஉதறினர் ஒட்டைப் பற்களுக்கு மேலாய்தெரிந்த நிறமிழந்த உதடுகள் துடித்தன கண்கள், நீர்தழும்பி நிலைகுத்தியிருந்தன. இருந்தாற்போல அவர் கிறீச்சிட்டுச் சிரித்தார். அது ஒரு கேவல் போலவும் இருந்தது. ''ஓமோம்...'' மற்றவர்கள் ஆமோதித்தார்கள்

ஒரு மூலையில், கோட்டுக்குள்சுருண்டிருந்தபெண் இவற்றைக் கேட்டுக்கொண்டிருந்தாள். கடந்த மூன்று மாதங்களாக, தன் தாங்கொணுத் துயரத்திற்கு, தன் கணவனினதும் வேண்டியவர்களினதும் வார்த்தைகளில் ஆறுதலைத் தேடிக்கொண்டிருந்தவள், அவள். சாவைச் சந்திக்கத் தன் மகனை அனுப்பிவிட்டு இருக்கும் ஒருதாய், தன் பரிதவிப்பையும் துயரையும் துறப்பதெப்படி என்பதற்கு அவர்களின் ஒரு சொல்லேனும் உதவாமலிருந்தது. பதிலாக, தன் உணர்வுகளை மற்றவர்கள் புரிந்து கொள்ளவில்லை என்ற எண்ணம், வருத்தத்தை அதிகரிக்க வேறு செய்திருந்தது

ஆனல், இப்போது. இந்தப் பயணியின் வார்த்தைகள் அவளைப் பிரமிப்புற வைத்தன. தமது பிள்ளைகளைப் பிரிவதையும் இழப்பதையும் அழாமல் அசையாமல் தாங்கிக்கொள்ளும் பல பெற்றேர்களின் தரத்திற்கு உயரமுடியாது போனது தன் தவறேயொழிய, மற்றவர்களில் பிழையில்லை என்பது இருந்தாற்போல அவளுள் பளிச்சிட்டது.

நாட்டிற்காக மகிழ்வுடன் உயிர்த்தியாகம் செய்து வீரனய் மரித்த தன் மகனைப்பற்றிப் பருத்த மனிதர் கூறிக்கொண்டிருப்பவற்றைக் கவனிக்கும் ஆர்வத்துடன் அவள் மூலையிலிருந்து தன் தலையைத் தூக்கிச் செவிமடுத்தாள். முன்னர் கனவு கூடக்கண்டிருக்க முடியாத ஒரு உலகத்தில் தான் இப்போது வீசப்பட்டிருப்பதாய் அவளுக்குப் பட்டது. தன்மகனின் சாவைப் பற்றி இப்படிப் பேசும் வீரத் தந்தையை மற்றவர்கள் பாராட்டுவதைப் பார்க்கும் போது அவளுக்குச் சந்தோஷமாயிருந்தது.

இவ்வளவுநேரமும் தூங்கிவிட்டு, இப்போதுதான் விழித்தவள்போல அவள் திடீரெனக் கேட்டாள்:

''அப்ப... உங்கட மகன் உண்மையாகவே செத்துப் போனரா?''

எல்லோரும் அவளைப்பார்த்தார்கள். அந்த மனிதரும் அவள் பக்கந் திரும்பி, நீர் தழும்பி விழிக்கும் தன் பெரிய கண்களை அவள் முகத்திற் பதித்து நோக்கினர். ஏதோ மறுமொழி சொல்ல முயற்சித்தார்; முடியவில்லை. பார்த்துக் கொண்டேயிருந்தார். இந்தப் பொருத்தமில்லாக் கேள்வி அப்போதுதான்போல அவருக்குத் திடீரென உணர்த்தியது: தன் மகன் இறந்துதான் விட்டான். இறந்தே விட்டான்–இனி எப்போதைக்கும் இல்லாமல்.

அவர் முகம் சுருங்கியது; கோணியது தன் பொக்கற்றுக்குள்ளிருந்து அவசரமாய்க் கைக்குட்டையை இழுத்தார். தன்னைச் சூழ இருந்தவர்களின் வியப்பிற்கு மத்தியில் இதயத்தைக் கிழிக்கும் வேதனை பொங்க– அடக்க மாட்டாமல் கேவிக்கேவி விம்மலானர்.

## உள்ளியிலிருந்து அஜோஈன்

மனித உடல் அடங்கிலும் சதா நடைபெற்றுக் கொண்டு இருக்கும் இரத்த ஓட்டத்தின்போது, அவ்விரத்தம் சில வேளைகளில் உறைந்து விடுவது உண்டு. ஒரேயொரு சமயம், அது கட்டியாகியும் விடும். நல்ல உடல்நலநிலையிலுள்ளஒருவருக்கு,உறைந்த அல்லது கட்டியாகிய ஊறுதி, மீண்டும் விரைவில் உடற் தேவைக்கு ஏற்ப.இரத்தமாகி சுற்றேட்டத்தில் கலந்துகொள்ளும்.

உறைந்த, அல்லது கட்டிபட்ட உதிரம் அதே நிலையில் தொடர்வதால் இரத்தச் சுற்றேட்டம் தடைப்படும்.

(Heart attack) இருதயத் தாக்கம் இவ்வாறுதான் ஏற்படுகிறது. இதனைத் திரும்பவும் திரவ இரத்தமாக்க உள்ளி உதவும். இப்படி, தென்னமெரிக்க வெனிஸ்வெலா நாட்டு ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்து உள்ளனர். அவர்கள் உள்ளி எனும் வெள்ளைப் பூடுச்சத்தை மது சாரத்துடன் கலந்து ''அஜோஈன்'' எனும் மருந்தாகத் தயாரித்து உள்ளனர் ஆ.வி.ஐ.சி எனப்படும் அந்நாட்டு விஞ்ஞான ஆய்வு நிறுவனமே இச்சாதனையைப் புரிந்து அமெரிக்காவில் இதன்(பேட்டென்ற்) பிரத்தியேகச்சட்டபூர்வ உரித்து ஒன்றையும் பதிவுசெய்துவிட்டது.

# ஈழத்துக் கவிஞர் பக்கம்

## இலக்கிய வடிவங்கள்

இன்றமிழ் மொழியில்
இலக்கிய வடிவங்கள்
எத்தனை வகையாய்
விரிந்து பரந்து
சொரிந்து கிடக்கினும்
இப்போ
ஆக்க இலக்கியம்
எடுபடும் காலம்
சிறுகதை நாவல்
புதினம் புதுக்கவிதை
நாடகம் என்ற பாணியில்
ஏடுகள் எங்கும்
எழுதுவது போன்றே
இலக்கியம் சார்ந்த
இனிய உரைநடை
எழவே வேண்டும்
எனினும் தமிழில் நாங்கள்
புதுசாய் ஒன்றை
இலக்கிய வடிவாய்
எழிலுடன் படைப்போம்
சிந்தனைச் சிற்பிகள்
வந்ததை வடித்தால்
தமிழன் புதுமைக்குத் தலை
வணங்கும் உலகமே

★ சுரா

## நிழல்

அன்புக்குரியவளே—நீ
அன்று கூறினாய்.
உயிரே
'உலனை நான்
நிழலாய் தொடர்வேன்''
போதையில் கூறினாய்!
பாதியில் பாதைமாறினாய்!
ஒளியாக என் வாழ்வு
இலங்கிட்ட காலமதில்
நிழலாக நீ தொடர்ந்தாய்!
ஒளியான என் வாழ்வில்
இருள் சூழ்ந்த காலமதில்
நிஜமாக நீ மறந்தாய்!
பாதை மாறிய
பேதையே உந்தன்
வார்த்தை ஜாலங்கள்
இப்போதன்றோ புரிகின்றன

★ ''யாழ். அஸீம்''

## மங்கையரே எச்சரிக்கை

மங்கையரே நீங்கள்
எச்சரிக்கையாக இருங்கள்
''சீதனம்'' என்னும்
நயமான வார்த்தையினுள்
''பகற்கொள்ளை'' நடக்கி
றது
ஆமாம்! நஙகையரே
ஏமாந்து போகாதீர்!!
சந்தையிலே மரக்கறிகள்
கூட்டத்துடன் ஆடு
மாடுகளும் விலைபோகும்—
இப்போது
அதன் விலைகளோ
உயர்ந்தே போகிறது—
இன்று
கல்யாண சந்தையிலோ
ஆண்களுமோ விலைபோகும்
விலை''வாசி'' ஏற்றத்தில்
''ஏங்கி'' நிற்கும் ''பெண்
பெற்றோர்''
எத்தனையோ பேருண்டு
''டாக்டருக்கு'' மூன்று
லட்சம்
''எஞ்ஜினீயருக்கு'' ஐந்து
லட்சம்
வெளிநாட்டு
மாப்பிளைக்கோ
'பத்து' வரை விலைபோகும்.
ஏலத்திலோ தம் மகனை
''விலைபேசும்'' பெற்றோர்
கள்
''சிலத்தினால்'' உயர்ந்து
நிற்கும்
''பெண் பெருமை''

அறியாரோ?

★ காரை. யோகி

## ஏனோ முடியவில்லை

எழுதத்தான் உட்கார்ந்தேன், ஏனோ முடியவில்லை!
மனத்தில் உதித்து மலர்ந்த கவிதை ஒன்றுக்
கெழுத்தில் இலக்கிய உருவம் கொடுப்பதற்காய்
எழுதத்தான் உட்கார்ந்தேன் ஏனோ முடியவில்லை!
ஏன்முடிய வில்லையென்று எனக்குப் புரியவில்லை!
ஓடுகின்ற 'பஸ்' ஸிலிருந் தாடி அசைந்து கொண்டே!
பாட்டு வரியெழுதும் பழக்கம் எனக்குண்டு
மனதிலே பாட்டுவரில் மறக்குமுன் அதையுடனே
எழுத ஒரு பேனாவும் ஒரு துண்டுக் காகிதமும்
எத்துப் படாதவொரு இக்கட்டு! வேளையிலும்
'புதினத்தாள்' ஓரத்தில்! கிடைத்தபென்சில் துண்டாலே
ஒருபிழையு மில்லாமல் உடனெழுதிக்கொள்ளும் நான்;
இருபதாண்டுகள் தொடர்ந்து' கவிதை, கதை,
கட்டுரையென்
றெழுதிவரும் கைதேர்ந்த இலக்கிய எழுத்தாளன்
எழுதப் பகல் வெளிச்சம் போதியதா யுள்ள அறை!
வசதியாய் போட்டிருக்கும் மேசை நாற் காலியினில்
இன்றும் வழக்கம் போல் எழுதத்தான் உட்கார்ந்தேன்!
ஏனோ! எனக்கின்று எழுத முடியுதில்லை!
மையுள்ள 'பேனா' என் கையி லிருக்கிறது!
கையில் நடுக்கம்! குறட்டல் கிடையாது
'எழுது' என்று வெள்ளைத்தாள் என் கையைப்
பார்க்கிறது!
பிள்ளைகள் பள்ளிக்கு போய்விட்டார்-தொல்லையில்லை!
பெற்றவளோ கடைசிக் குழந்தை அழுகையினை
மாற்ற அதைக் கொண்டுபின் வளவுக்குள்
போய்விட்டாள்!
'எழுது' என் றெனை நெருக்கும் என்மனதிலே மலர்ந்த
கவிதையிலே சந்தேகம் கடுகளவும்! தோன்றவில்லை!
அந்தக் கவிதையினை அவசரமாய் வேறொன்று
வந்தென் மனதுள் புகுந்து குழப்பவில்லை!
'மூடு' இன்மை 'மொழிமுட்டு' பேச்சுக்கே இடமில்லை!
இப்படி எந்தத் தடையும் எழுதவின்றி
எல்லாம் வாய்ப்பாயின் றிருந்து பயனென்ன?
எழுதத்தானே என்னால் ஏலா திருக்கிறதே!
எழுதமுடியாததொன்றை எழுதவெண்ணுகின்றேனோ!
எதையு மெழுதும் திறமை நேற்றோ டெனக்கில்லையோ!
இப்படிச் சந்தேகித்தென் மனதைப்போட் டுக்குழப்பி!
எந்த முடிவுக்கும் வந்து கொள்ள ஏலாது
எரிச்ச லெரிச்சலாய்! என்மே லெனக்கு வந்து
நீண்டநே ரமிருந்து நெடுமூச் செறிந்துவிட்டு
வேண்டாமின் றைக்கிந்த 'வேலை'யென் றெழுந்து
விட்டேன்
அரியகற் றுசற்ற சான்றோர்! புலவரையும்!
தடுமாறச் செய்து தவறாய் எழுதவைக்கும்
'படுபாவி' யானவித் 'தாமத குணவேளை'
எளியேன்நான் என்றென்மேல் இரக்கப் பட்டுப்
போலும்!
'எழுது தவறாய்' என் றேவி விடாமலென்னை
எழுத விடாமல் தடுமாற வைத்ததொன்றோ
டென்னைவிட்டு விட்டதற்காய் நானதற்கு
நன்றி சொல்லி
எனக்கதால் வந்தமன விரக்தியைத் துரத்தி
விட்டேன்.

★ ஈழமாஜினி

## மலர்கள் வாடுகையில்..!

தள்ளாத வயதினிலே தொல்லை கோடி
தாங்காத இன்னல் வந்து முட்டி மோதும்
பொல்லாத வயிறதனை வளர்ப்பதற்குப்
பொழுதெல்லாம் பிறரிடமே இரத்தல் வேண்டும்

கண்காது வலுவிழந்து வாழா நிற்கும்
கைகால்கள் ஓய்ந்ததனால் தளர்ந்து போகும்
பண்பாடு மறந்தபிள்ளை பழித் தொதுக்கும்
பாரினிலே சுமையாக வாழ்க்கை தோன்றும்

இதனால்தான் பெரியோர்கள் வழியைச் சொன்னார்
இதற்குஅந்த நன்றியுணர்வு இருக்க வேண்டும்
அறமென்ற நன்றியையே அறியச் செய்தார்
அன்னையையும் தந்தையையும் தெய்வம் என்றார்

அன்புஅது இருந்தும்பயன் அதிகம் இல்லை
அல்லலுறும் வாழ்வினிலே பணமே எல்லை
நல்லவர்கள் என்றுசிலர் இருப்பதாலே
நன்றியுணர் வென்றபண்பு இனியும் வாழும்

★ வ. யோகானந்தசிவம்

## எங்கும் மலர்

நிலவே நீ நிற்கமாட்டாயா?
உனை நம்பி மலர்ந்து விட்டேன்
நீ சென்று விட்டால் என் செய்வேன்
பகலவன் கொடுமைதனை வெல்ல.
''மல்லிகையே'' என அழைப்பார் சிலர்
மணம் தந்திடு என்பார் பலர்
மணந்தவுடன் பறித்திடுவார் அவர்
முகர்ந்து விட்டு எறிந்திடுவார் பின்
மாலையிலே உனைக் கொய்து சென்று
காலையிலே மாலையாக்குவார்
கள்ளமற்ற குழந்தை முதல் கிழவிவரை
எனைச்சூடி விடுவார் தினம் தினம்.

★ வைகுந்தன்

## ஏன் வேண்டும் சீதனம்?

சீதனம் என்னும் மாதனம் – இதனால்
சீர்கெட்டுவிட்டது ஆண் இனம்
இருக்க ஓர் வீடு போதாதாம்
இருபது பவுனுடன் காசும் வேணுமாம்!

அழகுடன் அறிவுடன்
அட்வான்ஸ் லெவலும் படித்துவிட்டு
கேட்டது அதிகம் என்றதனால
ஆத்திரத்துடன் வேண்டாம்
இந்த ஏலம் என்று
வீட்டில் ஓலம் போட்டிட்டாள்!

சீதனம் என்னும் - இந்த
சீர்கெட்ட வரிசையினால்
கருகியது - அவள்
வாழ்வு

இந்நாட்டை விட்டு
வெளிநாடு சென்றதனால் – அவன்
கப்பல் ஏறினானோ! – இல்லை
கடலில் நின்றானோ!!
கல்லுடைக்க சென்றானோ!!!
இங்கு வரும் போது

கோட்டுடன் சூட்டுடன் – அவன்
பாங்கு எக்கவுண்டில்
பாங்கு டன் சேர்ப்பான் பல லட்சம்!–இவனுக்கு
ஏன் வேண்டும் சீதனம்?

அழகுடன் அன்றி
அன்புடன் ஒருத்தி,
பொன் நகை இன்றி
புன் நகையுடன் ஒருத்தி,
லட்சம் பல இன்றி – உங்களின்
பட்சம் ஆக இருந்தால் – உங்களுக்கு
ஏன் வேண்டும் சீதனம்?

★ ஸ்ரீதர்

## பூஞ்சோலை வனப்பு

காலைக்கதிரவன் கண் விழித்ததும்
களங்கமில்லாமல் முன் சிரித்து
கண்டவரையும் மயக்கும் இவள்
கண்கவர் கன்னி இவள்

செவ்வந்தி ரோஜா மல்லிகை என்னும்
செந்தமிழ் போற்றும் செண்பகமும்
செவ்வென விரிந்து காண்பதுவும்
செழிப்புடன் தந்தை கொடை இதுவாம்

திகப்பாய் தித்திக்கும் தென்றலும்
திகட்டாமல் பூத்திடும் முல்லையும்
மூவேந்தர் நிலத்து வஞ்சியும்
முத்தாரம் போடும் ஜெகத்தினிலே

வர்ண கோல வடிவுடனே
வண்ணாத்தியும் வந்தது துணிவுடனே
இதழை அகன்று விரித்ததுமே
இன்பமாய் தேனை குடித்ததுவே

பார்ப்பவர் கண்ணுக்குள் திகைப்பு
கண்டவரையும் கவர்ந்திடும் ஓர் அழைப்பு
என்றும் தராது நமக்கு சலிப்பு
இதுதான் பூஞ்சோலை வனப்பு

★ கனகரட்ணம் கேமலதா

## பாண் படும்பாடு

நாட்டினில்
பஞ்ச மென்றாலும்
ஊணுணவுத்
தட்டுப் பாடென்றாலும்
காசுப் புழக்கம்
குறைந்து போனாலும்
முதலில் மெலிவது
பாண் தான்

★ செ. செல்வதாசன்

## ஆளே இல்லை

தேவைப் பட்டது
அவசரமாக
அங்கும் இங்கும்
நாயாய் அலைந்து
அவரை இவரைப் பிடித்து
அவசியமற்ற
சிவப்பு நாடாக் கருமங்கள்
எல்லாம் முடித்து
வந்து சேர்ந்தது
நிவாரண உதவி
அப்போது
ஆளே இல்லை

★ சி. சதாசிவம்




கே.எஸ்.ஆனந்தன்

சமூக நவீனம்

## அத்தியாயம் இரண்டு

பொழுது புலர்ந்து பொழுது சாய்வதற்குள் எத்தனையோ சம்பவங்கள் நிகழ்ந்து முடிகின்றன. அன்றும் அப்படித்தான் பல நிகழ்ச்சிகள் நடந்து முடிந்திருந்தன. ஒரு மூலையில் பாயில் ஒருக்களித்துப் படுத்திருந்தாள் சந்திரஞானம். மாமியார் இறந்தது போனதல்ல அவளுக்கு கவலை. அன்று அங்கு நடந்த முணு முணுப்புக்கள், பாராமுகமான செயல்கள், தன்னைப்பார்த்துவிட்டு முகத்தைச் சுழித்துவிட்டுப் போனவர்களை எல்லாம் வரிசைக் கிரமமாக நினைத்துப் பார்த்தாள். அவளுடைய இதயம் முள்செடியின் மேல் விழுந்த வாழைக்குருத்துப்போல சல்லடை போடப்பட்டு வலித்துக் கொண்டிருந்தது. ''ஞானம்'' மாசிலாமணியின் குரல் தீனமாக ஒலித்தது. தலையை நிமிர்ந்துபார்த்தாள்.

''எழுந்திரேன்''

அவள் எழுந்து உட்கார்ந்தாள், மாசிலாமணியின் தமக்கை தேநீர் ஆற்றியபடி வெளியே வந்தவள் அவளுக்குப் பக்கத்தில் ஒரு கோப்பையையும் அவனுக்குப் பக்கத்தில் ஒன்றையும் வைத்தாள். ''ஞானம் நீ நினைக்கிறளவுக்கு எங்கடை ஆட்கள் இருப்பினம் என்று நினைக்காதே. செத்தவீடு, கல்யாணவீடு என்றால் இப்பிடி ஏதாவது புதினம் கிடைக்குமென்று தான் திரிவினம். உன்னைப்பற்றி இவ்வளவு காலமும் இல்லாததை இன்று உன்னைக் கண்டதும் நெளிக்கினம். இரண்டு நாளைக்கு உப்பிடி எல்லாம் செய்வினம், நீ இங்கே இருந்து பார் உன்னைத் தலையிலை தூக்கி வைச்சு கொண்டாடுவினம்'' என்றாள் மாசிலாமணியின் தமக்கை சரஸ்வதி.

''மச்சாள் நான் அதுக்காக கவலைப்படலை. மாமி செத்துக் கிடைக்கையிலும் நான் அவவைப் பார்க்க வந்திருக்கக் கூடாதாம். பொன்னம்மாக்கா எனக்கு நேருக்கு நேர் சொன்னு'' என்றாள் ஞானம்.

''இங்கே பார் ஞானம்! உனக்கு யாராவது சாப்பாடு போடப்போகினமே, கதைக்கிற கழுதைகள் கதைக்கட்டுமே நீ இதுகளை காதில் போட்டுக்காதே''

''நான் இன்று கூட உன்னை இங்கே கூப்பிட்டிருக்க மாட்டேன். அம்மா சாகமுன்பு உன்னைப்பார்க்க ஆசைப்பட்டா. பிள்ளைகளை விட்டிட்டு அவளை என்றாலும் கூப்பிடடா என்றதால் தான் தந்தி கொடுத்தேன், அவ நீ வர முன்பே போய்விட்டா. கொள்ளிக்காரன் நான் அதனாலை நான்......''தொண்டை கம்மியது மாசிலாமணிக்கு.

''சும்மா இரடா நீ வேறை பெட்டையன் மாதிரி அழுது கொண்டு உவளவையின்ரை சரித்திரமெல்லாம் உனக்குத் தெரியும் தானே ஞானம். பேசாமல் விட்டிட்டு இருங்கோ'' என்று கூறிவிட்டு எழுந்து உள்ளே போனாள் சரஸ்வதி.

அதேசமயம் வெளியே சென்றிருந்த சரஸ்வதியின் கணவன் ஆறுமுகம் உள்ளே வந்து கொண்டிருந்தான். வந்தவன் சும்மா வரவில்லை. 'யானே பொய். என்நெஞ்சும் பொய். என் அன்பும் பொய் ஆனால் அழுதால் உன்னைப் பெறலாமே'' என்று பாடிக்கொண்டு வந்தான்.

'சரசு சரசு' என்றவன் வெளியே கிடந்த கட்டிலில் உட்கார்ந்து விட்டான்.

''என்ன? தண்ணி கொண்டரட்டே?'' என்று கேட்டவாறு வெளியே வந்தாள் சரஸ்வதி.

''நெருப்புப்பெட்டியை எடுத்துவா''

''எனக்கு தெரியுமே. இம்'' என்று நீட்டினாள்.

''இன்டைக்கெண்டாலும் கொஞ்சம் ஆறுதலாய் அன்பாய்.....''

''அதுதான்இல்லாதகுறை'' என்று சரஸ்வதி கூறவும் உட்பக்கமாக கையைக் காட்டி மாசிலாமணி குடும்பம் இருப்பதை நினைவுபடுத்தினன் ஆறுமுகம்.

''உங்களைப்பற்றி அவனுக்கு தெரியாது. இனித்தான் தெரியனுமாக்கும். வரும்போதே நாலுவீட்டுக்கு கேட்க ஆலோலம் பாடி வந்தீங்களே''

''அட கறுமமே. மாணிக்கவாசகருடைய திருவாசகத்தை உன் தம்பிதான் கிருத்தியம் நடக்கும் போது நெஞ்சுருக படித்தான். அழாத சனம் கூட அழுதுதுகள். நான் ஒரு போத்தல் கள்ளு குடிச்சிட்டு பாடினல் அது வெறியில் பாடினதா? இது தாண்டி உலகம்.

இரகசியமாக என்னென்னவோ எல்லாம் செய்யுறுங்க நாங்கள் பரகசியமாச் செய்தா பிழை. என்னமோ எங்கடை பொழுதும் மதியம் திரும்பி விட்டுது ஏண்டா மணி பிள்ளைகளுக்கு அங்கே யார் துணை?'' என்றான்.

''பக்கத்து வீட்டு மீனாட்சி பாட்டியிடம் சொல்லிவிட்டு வந்தனான்'' என்றாள் ஞானம்.

'நான் சொல்லுறேன் ஒன்று தப்பா நினைக்காதே தங்கச்சி. இங்கை நடந்தது எல்லாம் எனக்கு நன்றாய் விளங்கும். நான் முந்தின ஆள் என்றால் செத்தவீட்டோடை ஒரு செத்தவீடே நடந்திருக்கும். இதுகளை பெரிசு படுத்திக்காமல் பேசாமலிருங்கோ எப்பவோ நடந்து முடிஞ்சதை புதுப்பிக்கிறாளவை. உவளவைக்கு வேலையில்லை. அது சரி சாப்பிட்டு விட்டியளே.'

''இல்லைஅத்தான்'' என்றான் மாசிலாமணி,

''மணிநான் பகிடிக்கு சொல்லேல்லை. நீ வவனிக்குளம் வீட்டை வித்துப்போட்டுவா இதிலை ஒரு பரப்புக் காணி தாறன் இங்கை வீட்டைக் கட்டி இருங்கோ. பிள்ளையும் வளர்ந்து பெரியவளாகிவிட்டாள். அங்கேயிருந்து என்ன செய்யப் போறியள்'' என்று கூறிஅணைந்துபோன சுருட்டை கசக்கி மீண்டும் வாயில் வைத்து தீக்குச்சியால் பற்ற வைத்தார்.

''எல்லாம் ஆறுதலாய் யோசிப்பம்' என்று கூறிவிட்டு எழுந்து வெளியே சென்றான் மாசிலாமணி.

✶

மணிச்சத்தம் கேட்டு வெளியே வந்த விசுவநாதன் தபால்காரன் கொடுத்த பதிவுத்தபாலுடன் உள்ளே நுழைந்தான். கடிதத்தைப் பார்க்குமுன்பே அது என்னவாயிருக்கும் என்பதை புரிந்து கொண்ட அருண்மொழியின் மனதில் குதூகலம் பொங்கியது. துன்பத்தை மறக்க ஏதோ ஒரு இன்பம் தரும் செய்தியை இறைவன் அனுப்பிக் கொண்டேயிருப்பான் போலும்.

கடித உறையக் கிழித்து உள்ளேயிருந்த படிவங்களைப் பார்த்து கொண்டிருந்த அருண்மொழியின் செவிகளில் 'எப்ப அக்கா எக்ஸாம்?' என்ற விசுவநாதத்தின் குரல்.

''ம் .... இன்னும் சரியாக ஒரு மாதமிருக்கடா விசுவம்?''

''எங்கேயக்கா கொழும்பா? பேராதனையா? யாழ்ப்பாணமா?

''பேராதனை தாண்டா, ''நீ ஒரு பைத்தியம். யாழ்ப்பாணம் போட்டிருக்கலாமில்லையா''

முதல் எக்ஸாமிற்கு போகும்போது அம்மாவைக் கேட்டேன். பேராதனைக்கே போடேன். உன் சினேகிதிகள் இருக்கிறார்களே யென்று சொல்லிட்டா. தாய் சொல்லை தட்டலாமோ? அப்படியே செய்திட்டேன். அதனால் சித்தியும் பெற்றேன்'' என்று சிரித்தாள்.

''இந்தப்பரீட்சையிலும் நீங்கள் சித்தியடைந்து பட்டதாரியாக வருவீங்களக்கா'' என்று கூறிய விசுவம் அக்காவை உற்றுப் பார்த்தான். அம்மாவை உரித்து வைத்தாற் போன்ற தோற்றமாயினும் அம்மாவிலும் கூடிய நிறம். கதைப் புத்தகங் களில் வரும் அழகிய பெண்களைப் போன்ற உடல்வாகு, அலங்காரம் ஏதுமின்றியே இயற்கை அழகை பிரமன் வஞ்சகமின்றி தீட்டி விட்டிருந்தான் அவள் அழகை இன்னும் மேம்படுத்தியது அவளுடைய கூந்தல் தேடுவாரற்று செடி பூரா பூத்துக் குலுங்கி மணம் வீசும் காட்டுமல்லிகை போல் விளங்கிய அவளுடைய எதிர்காலம் எப்படியிருக்குமெனச் சிந்தித்தான் விசுவநாதான்.

''என்னடா அப்படிப்பார்க்கிறே'' என்று அவன் கன்னத்தில் கிள்ளினாள் நங்கை

''அக்கா எல்லாம் முடிந்து பட்டதாரியானதும் நீங்கள் பட்டணத்துக்கல் லூரிக்கு இடமாற்றங்கேளுங்கள். உங்கள் அழகுக்கு பட்டணத்து மாப்பிளையாய் கல்யாணம் செய்து அங்கேயே வாழணுமக்கா. தாய் சொல்லே மந்திரம் என்று வயல் செய்கிற சுப்பையனையே கல்யாணம் செய்திடாதே'' என்று சிரித்தானாயினும் அவன் மனதிலும் ஓர் ஆசை இருந்தது.

''ஏண்டா இன்று இப்படி எல்லாம் கதைக்கிறாய். யார் யாருக்கு என்று இறைவன் எப்படி எழுதி வைத்திருக்கிறானோ? யார் கண்டார்கள். உன்னையும் படிப்பித்து பெரிய ஆளாக்கி ஒரு பதவியில் அமர்த்திய பின்பு நீயாகப் பார்த்து அக்காவுக்கு ஏற்ற மாப்பிள்ளையாய் தேடிவையேன்'' என்று சிரித்தாள்.

''அம்மா இல்லாததாலே இப்படி எல்லாம் கதைக்கிறோம்'' என்று கூறும்போது பக்கத்து வீட்டு மீனாட்சிப் பாட்டி இருமிக்கொண்டே உள்ளே வந்தா.

''பாட்டி தேத்தண்ணி போடட்டுமா?'' என்றான் விசுவநாதன். 'விசு உன் கையாலே தண்ணி குடிச்சா அது அமுதம் தாண்டா. எனக்கு இப்ப வேண்டாம். குழந்தை பள்ளிக்கூடம் புறப்பட்டிட்டாளோ?''

''இல்லைப் பாட்டி இன்று லீவு.''

''நல்லதாய் போச்சு பிள்ளையாண்டான் தனியாய் இருப்பானே என்று ஓடிவந்தன் குரக்கன் காயப் போட்டிருக்கான் என் மவன். நான் இரவு படுக்கைக்கு வருகிறேன்'' என்று கூறிப் புறப்பட்டாள் மீனாட்சிப்பாட்டி.

''ஏண்டா விசு இந்தப் பாட்டிக்கு எங்கடை குடும்ப பூர்வீகம் எல்லாம் தெரிந்திருக்கும் இல்லையா?''

''என்னவோ அக்கா இந்தப் பாட்டி எங்கள் மேலே உசிரையே வைத்திருக்கு. அம்மாவுடன் நல்ல ஒட்டு பாட்டியின் சம்பாத்தியங்களும் அம்மாவிடம்தான்.''மாடு கத்துது நான் தவிடு வைத்து விட்டு வாறன்'' என்று கொல்லைப் பக்கமாகச் சென்றான்.

✶

காலைக்கதிரவன் கனவுகளிலிருந்து விழித்துக்கொண்டு தன் பவனியை ஆரம்பித்திருந்தானுயினும் ரகுவரன் கட்டிலைவிட்டுஎழுந்திருக்கவில்லை. நன்றாக இழுத்துப்போர்த்துக் கொண்டு படுத்திருந்தான். ஏழு மணிபடித்தது சுவர்க்கடிகாரம். வாரிச்சுருட்டிக் கொண்டு எழுந்திருந்தான். சோம்பல் முறித்து கொட்டாவி விட்டபடி எழுந்து வெளியே வந்து மாடிப்படிகளில் இறங்கினான். கீழே ஹோலில் சமரசிங்கா அன்றைய காலைத்தினசரியில் மூழ்கியிருந்தவர் காலரவம் கேட்டு நிமிர்ந்து பார்த்து விட்டு ''ஹலோ ரகு குட்மோனிங் ''என்றார்.

''குட்மோனிங் அங்கிள்''

''ரகு ஒரு நல்ல செய்தி உங்கள் பரீட்சை முடிவுகள் வெளிவந்திருக்கு. ஆனால்...''

''என்ன அங்கிள்?''

''உன் பெயரைத்தான் தேடிட்டிருக்கிறேன். காணவில்லையா''

''என்பெயரைத்போடமறந்திருப்பான்கள்'' பத்திரிகைக்காரன்கள் அவரசப்பேர்வழிகள்.''

''ஏன் ரகு பரீட்சை நல்லாத்தானே எழுதினே?''

''என்னைப் பொறுத்தவரை அப்படித்தானே. இனி என் தலைவிதி எப்படியோ அப்படித் தானே முடிவு இருக்கும்''

''உனக்கு தன்னம்பிக்கையில்லையா?''

''அங்கிள் நான் என்றைக்கும் அப்படி நினைத்ததில்லை, நினைப்பவனுமில்லை உங்களால் வளர்த்து எடுக்கப்பட்ட ஒருவன் தன்நம்பிக்கையில்லாதவனுயிருந்தால் அவன் இந்த உலகத்தில் வாழ்வதற்கே தகுதி இல்லாதவன்.''

''ரகு அப்படிச் சொல்லாதேயப்பா. உன்னுடைய திறமையிலே நீ முன்னுக்கு வந்தவன். நீ பாஸ் பண்ணுவிட்டால் வேறு யாரப்பா பாஸ் பண்ணுவான். உன் பெயர்தான் முதலாவதாகப் போட்டிருக்கு'' என்று பத்திரிகையை காட்டினார்.

''அங்கிள் இது எல்லாம் உங்கள் அன்பாலும் ஆசிர்வாதத்தாலுமே கிடைத்தவை''என்று அவன் கூறிய பொழுது அவனைக்கட்டித் தழுவிக்கொண்டு முதுகில் தட்டினார்.

எனக்கொரு பையனிருந்து அவனிப்படி இந்நிலைக்கு வந்திருந்தால் கூட நான் இப்படி மகிழ்ச்சியடைந்திருப்பேனே என்று என்னால் எண்ணிப் பார்க்க முடியவில்லை ''ரகுஐ ஆம் வெறி ஹாப்பி கோட் பிளெஸ் யூ'' என்று அவனை ஆசிர்வதித்தார்.

''தாங்கியூ அங்கிள்'' என்று கூறிவிட்டு குளியலறை நோக்கிச் சென்றான் ரகுவரன்.

அவன் போவதையே பார்த்துக் கொண்டிருந்தார் சமரசிங்கா. தற்கால இளைஞர்களோடு ஒப்பிடும் பொழுது அவன் ஒரு தனிப்பிறவி ஆறு வயதுச் சிறுவனாக வந்தவன் இன்று இருபந்தைந்து வயதைத் தாண்டி விட்டானுயினும் அன்றிருந்த குண இயல்புகள் இன்னும் அவனை விட்டு நீங்கவில்லை என்னதான் படித்து பட்டங்கள் பெற்று பெரியவனுகிவிட்ட போதும் இயல்பான அவனுடைய குணங்கள் சில மாறுபடாத தன்மைவாய்ந்திருந்தன. பெரியவர்களுடன் பேசும்போது அடங்கிப்போகும் தன்மை. படித்துவிட்டோம் என்ற கர்வம் சிறிதும் அவனிடமிருக்கவில்லை. அதிகம் பேசாமல் அளவுடன் தேவையைப் பொறுத்து மட்டுமே பேசும் தன்மை. எதையும் தாங்கும் திடசித்தமுள்ளவனுகவும் விளங்கினான்.

அவன் குளித்துவிட்டு வந்து கொண்டிருந்தான். அவனுடைய அகன்றமார்பும் நேர் கொண்ட பார்வையும் ஆண்மையின் ஆளுமை முழுமையாக பளிச்சிட்டு பிரகாசித்தது ''உடையை மாற்றிக் கொண்டு கெதியாய் வா ரகு இன்று நாம் ஒன்றாயிருந்து சாப்பிடணும் அன்றிஉனக்காக அவசர அவசரமாக ஸ்வீட் செய்திருக்கின்றாள்'' என்றார் சமரசிங்கா. ''இதோ வந்திட்டேன் அங்கிள்''என்று கூறிக் கொண்டே மாடிப்படிகளில் தாவினான். அடுத்த கணம் ஹோலில் தொலைபேசி மணி ஒலித்தது.

அவன் உடைமாற்றிக் கொண்டு கீழே இறங்கி வரும் பொழுது யாருடனே கோபமாக சிங்களத்தில் பேசிக் கொண்டிருந்தார் சமரசிங்கா.

(வளரும்)

தொடர் காவியம்

# காவேரி

காரை. செ. சுந்தரம்பிள்ளை

2

## பின்னையிட்ட தீ

பழமை கொஞ்சிடும் யாழ்ப்பாண மண்ணிலே
பண்பிலங் கும்மர பிற்பி றந்தவர்
இளமை யான வயதிருந் தேதொழில்
யாவும் கற்று வணிகம் புரிபவர்
தளர்வி லாதஇ ரத்தினம் என்பவர்
தரும வான்பொருட் செல்வம் பெருக்கியே
வளத்து டன்பிறர் வாழ்ந்திட வாழ்ந்தனர்
வள்ளன் மைக்கோ ரிலக்கண மாகினர்.

ஈழ நாட்டினெ மில்நகர் யாவிலும்
ஏற்றம் மிக்க கடைகள் அமைத்தனர்
ஆழ மான வணிக மதியினால்
யாவ ரும்வியப் பெய்தும் வகையினில்
நாளும் ஒய்விலா வூக்கமு டையராய்
நாற்றிசைப் பொருள் கொண்டு குவித்தனர்
வாழும் ஆல மரம்விழு தூன்றல் போல்
வரம்பி லாத்தொழிற் கூட மியற்றினர்.

அலைக டந்தபு கழுக்கு ரியவர்
அன்பு நெஞ்சர் இரத்தினமானவர்
கலைஞர் வாழ்ந்திடப் பொற்கிழி நல்கினர்
கலைகள் பூத்திடக் கைப்பொரு ளீந்தனர்
நிலைபெ றுஞ்சம யப்பணி யாற்றினர்
நித்த மும்சமு கத்துயர் போக்கினர்
தலைசி றந்தவித் தண்ணளி யாளரோ
தன்னல மிலாப் புண்ணிய வாளராம்

கொழும்பு மாநக ரத்திற் குபேரராய்
கோடி கோடி பொருளுக் குரியராய்
வளம்பெ ருக்கியே வாழும் பொழுதினில்
வந்து சேர்ந்தது பாழ்படும் வன்செயல்
அழகு மிக்கஇத் தீபகற் பத்திலே
அரிய செந்தமிழ் மக்களை வாட்டிடும்
இழிசெயல் தலைதூக் கத்தொ டங்கிட
ஈழ நாடு பழிபெற லானதே

கத்தி தூக்கிய காடையர் கூட்டமும்
கம்பி தூக்கிய குண்டர்கள் கூட்டமும்
நித்த மும்கொலை கொள்ளை புரிந்திடும்
நீச ராகிய வஞ்சகர் கூட்டமும்
குத்து வாள்கிறிஸ் கோடரி குண்டுகள்
கொண்டு நாட்டிட புகுந்தெங்கும் சென்றனர்
புத்திகெட் டதர்மச் செயல் செய்தனர்
புகழ்பொ லிந்த இலங்கைபா ழானதே

கடைகள் முற்றுகக் கொள்ளை யடித்தனர்
கண்ட பேர்களை வெட்டிச் சரித்தனர்
தடையி லாதுமே வீடுகள் வாசல்கள்
சகல செல்வங்கள் தீயிட்ட ழித்தனர்
இடையிலே வந்த வாகனம் யாவையும்
எண்ணெய் யூற்றிக் கொளுத்தி மகிழ்ந்தனர்
படையெ னப்பு றப்பட்ட புலையர்கள்
பயங்க ரச்செய லாயிரஞ் செய்தனர்

சந்திகள் தோறும் குண்டர்கள் நின்றுதம்
சாக சங்களைச் செய்திட லாயினர்
பந்து போலக் குழந்தை களின்தலை
பாறை மீதினில் மோதி யுடைத்தனர்
மந்தி போலப் புறப்பட்ட தீயர்கள்
மனித நீதியைக் கொன்று குவித்தனர்
சிந்து கின்ற வுதிரப் பெருக்கிலே
சிறுமை சேர்கள வேள்வி நடத்தினர்

வான ளாவிய தீயின் புகையிலே
வாடி மாய்ந்தன தெற்கில் மரமெலாம்
தேன ளாவும் மலர்க்கொடி யாவுமே
தீய்ந்து சாம்பலாய்க் காற்றிற் பறந்தன
ஈன ரின்செய லால்நதி நீரெலாம்
இரத்த மாகவே பாய்ந்திட லானது
ஞான மாதவன் புத்தன் இவைகண்டே
நாண முற்று மௌனத் திருந்தனன்

அஞ்சி யோடிய மக்களில் ஒர்சிலர்
அகதிகள் முகாம் தன்னை அடைந்தனர்
நெஞ்செ லாம்கன லாக வெரிந்திட
நிம்ம தியிழந் தேதவிப் பெய்தினர்
வஞ்சி யர்சிறு செல்லக் குழந்தைகள்
வயோதி பர்இளம் வாலிபர் யாவரும்
துஞ்சி வாடிய காட்சியை வார்த்தையில்
சொல்ல வும்முடி யாதென்ப துண்மையே.

உலக நாடுகள் கண்டனம் செய்தன
உயர்ந்த மக்களோ காறியு மிழ்ந்தனர்
கலகம் செய்தவர் தப்பிப் பிழைத்தனர்
கப்ப லேறித் தமிழர் யாழ் மீண்டனர்
நிலையி லாத தம்வாழ்வை நினைத்தவர்
நெஞ்சு விம்மிப் பொருமிட லாயினர்
தலைவர் கள்சமா தானம் உரைத்தனர்
தரும தேவதை எள்ளி நகைத்தனள்.

# குறளில்

## அவ்விய நெஞ்சும் செவ்விய நெஞ்சும்

புலவர் ஈழத்துச்சிவானந்தன்

விலங்குத்தனங்களை விலக்கி மனித குலத்தை விளங்க வைக்க முயற்சி எடுத்த முழுமையான சிந்தனையாளரே திருவள்ளுவர். திருக்குறள் தமிழ் உலையில் புடம் போட்ட ஔடதம். இது ஒரு சர்வரோக நிவாரணி இந்த நிவாரணியால் சகல பிரச்சனைகளுக்கும் தீர்வு காண முடியுமென்பது உலக ஆய்வாளர்களின் கணிப்பு. திருக்குறள் வாழ்க்கையை விளக்க வந்த தமிழ் ஒளி. இதனுடைய விளக்கத்தில் அரைகுறை இல்லை. துறை முறைச் சார்பு இல்லை. காலதேசக் கட்டுப்பாடோ இனமொழி உரிமைப் பாடோ இல்லாத பொதுமை திருவள்ளுவரின் புலமைப் புதுமை.

திருக்குறள் வாழ்க்கையின் பல்வேறு நிலைகளையும் மனித மனங்களின் பல தரப்பட்ட குண இயல்புகளையும் நுணுகி ஆராய்ந்து வெல்லும் நூலாய் விளங்குகின்றது. பல நாடுகளிலே பல்வேறு மொழிகளில் மொழிபெயர்கப்பட்டதோடு. படிக்கப்படும் பேறும் ஆய்வுப் பொருளாகிய சிறப்பும் பெற்றது. குறளில் மனிதமனம் பற்றிய கருத்துக்கள் நிறைய உண்டு மனச்சுத்தமே வாழ்க்கைச்சுத்தத்திற்கு அடிப்படை என்ற கருத்துடையது வள்ளுவம். அச்சுத்தம் தோன்றி அசுத்தம் அகல வழிகளையும் கூறுகிறது. இத்துடன் சுத்த மனத்தின் கேட்டினையும் அசுத்தமனத்தின் ஆக்கத்தினையும் சிந்தித்ததோடு குறள் படிப்பாரையும் சிந்திக்கத் தூண்டுகிறது.

மனநலனும் நல்லெண்ண வளமுடைய செவ்வியானுக்கே ஆக்கம் உண்டாகுமென்பது மானிட தர்மங்களின் விதி. இந்த விதிக்கு விலக்காக கயமை, பொய்மை, அழுக்காறு முதலிய குணக்கேடுகளுடைய அவ்விய நெஞ்சுடையானுக்கு ஆக்கம் சேர்வது எண்ணிப் பார்க்க வேண்டிய விடயம் என்று எல்லோரையும் சிந்தனைக் களத்திற்கு அழைக்கின்ருர் வள்ளுவர். இவ்விடயத்தில் தனிச் சிந்தனை போதாது. ஒரு கூட்டுச் சிந்தனையே தேவை என்பதால் நினைக்கப் படும் என்று கூறிஞர்.

நினைக்கப்படும் மேடையில் முதல் ஏறிய பரிமேலழகர்

'அவ்விய நெஞ்சத்தான் ஆக்
கமும் செவ்வியான்
கேடும் நினைக்கப்படும்'

என்ற குறளுக்கு பொருளையும் சொன்ஞர். ஒருவனுக்கு முற் பிறப்பில் செய்த வினைகள் இப்பிறப்புக்கும் தொடரும். முற்பிறப்புத் தீவினைகள் இப்பிறப்பிலும் வந்து சூழும். இப்பிறப்பில் நல்லவஞய் நல்வினைகள் செய்து வந்தாலும் முன் வினைவந்து துன்பத்தைக் கொடுக்கும். இந்தப் பிறப்பிலே ஒருவன் அல்லது ஒருத்தி தீவினைகளைச் செய்தாலும் முற்பிறப்பில் செய்த நல்வினையால் இன்புற்று ஆக்கம் பெறலாம் என்ருர். வள்ளுவர் நம்மையும் சிந்தித்துப் பார்க்கும்படி கூறியதால் நீளநினைந்து பார்க்க வேண்டும்.

ஊழின் உண்மையையும் வலிமையும் திருவள்ளுவர் ஒப்புக் கொண்டுள்ளார் ஆகூழ் போகூழ் கோட்பாடுகளுக்கு வள்ளுவர் உடன்பாடானவரே. தீயூழின் முன்னேற்றத்தையும் ஏற்றுக் கொண்ட இவர் முந்துறும் என்று கூறி எங்கெங்கு நாம் சென்ருலும் நாடுவிட்டு நாடு போனுலும் நமக்கு முன்னே விதியானது போய் நம்மை வரவேற்க எதிர்கொள்ளும் என்று எச்சரித்தார். இந்த எச்சரிப்பில் ஊழ் அல்லது விதி குறித்த விழிப்புநிலைவேண்டுமென்பதே வள்ளுவர் வேணவா விழிப்பு நிலையோடு முயற்சி நிலையும் இணைந்து கொண்டால் விதியை விலக்கி உள்பக்கம் தள்ளி வெற்றி பெற்று விடலாமென்பது அவர் துணிபு. இந்த வெற்றிக்கு கடவுளும் கூடவந்து துணை செய்வான் என்கிருர்

''குடிசெய்வல் என்னும்
ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந்
துறும்''

ஊழும் முந்துறும். தெய்வமும் முந்துறும். ஒருவன் விழிப்பு நிலையோடு முயற்சி செய்வானேயாஞல் அவனுடைய போகூழுக்கிம் ஆண்டவனுக்குமே போராட்டமாய் விடும். இவன் தப்பித்துக் கொள்வான். ஊக்கம்-முயற்சி உடையவனுடைய வீட்டைக் கேட்டுக்கொண்டு ஆக்கம் போய்ச்சேரும். ஆகூழுக்குஅணி சேர்க்கும் அவ்விய நெஞ்சங்கள் ஆக்கம் பெறுவதற்குரிய தலையாய காரணம் இதுவே அவ்வியானுக்கு மூன்று குணங்களில் ஒன்ருகிய ரஜதம் மேலோங்கியும் நிற்கும். முயற்சிக்கு ரஜதம் ஊட்டம் கொடுக்கும் ஊக்கியுமாகும்

செவ்விய நெஞ்சுடையான் தன்னுடைய நல்லுணர்வுகளுக்கு நல்ல பயன்வரத் தானே வேண்டுமென்று எண்ணிக்கொண்டு அந்த உணர்வுகளையே செழுமைப்படுத்திக் கொண்டு முயற்சியின்றிச் சும்மா இருந்துவிடுவதால் அவனுக்குக் கேடு வந்துவிடுகிறது.

''முயற்சி திருவினையாக்கும்
முயற்றின்மை
இன்மைபுகுத்திவிடும் ''

என்ற குறளாலும் இது இன்னும் விளக்கம் பெறுகிறது. செவ்வியானுக்கு தாமச குணமே மேலோங்கி நிற்பதால் அவன் சோம்பலை வளர்த்து கேட்டினை உண்டாக்கிவிடுகிருன்.

ஆக்கம் கேடு என்பதை எதனைக் கொண்டு பார்க்கிரும் என்பதும் ''நினைக்கப்படும்'' என்ற குறள்வாக்கால் அறியக்கிடக்கிறது. செல்வம் செல்வாக்கு கவர்ச்சிகளையே ஆக்கம் என்றும் இவை இல்லாமை கேடு என்றும் நாம் வரையறைப் படுத்தி விட்டோம். அவ்விய நெஞ்சத்தான் செல்வம் செல்வாக்குப் பெற்றிருந்தாலும் அமைதி அகமகிழ்வு, இன்பம், அனுபவிப்பு முதலியன இல்லாமல் குழம்பித் துடிப்பது நமக்குத் தெரிவதில்லை. கோடி தொகுத்தாலும் துய்த்தல் இல்லா ஆக்கமுடையான்களும் இவ்வுலகில் வாழ்கின்ருர்கள் செவ்வியான் வெளிப்பார்வைக்கு கெட்டு செல்வம், செல்வாக்கு, கவர்ச்சி அற்றிருந்தாலும் அமைதி, அபு மகிழ்வு. இன்பம் அனுபவிப்பு முதலிய துய்ப்பு நிலைகளில் அமிழ்ந்து வாழ்வாங்கு வாழும் பேறு பெற்றிருப்பதுவும் நினைக்கப்படும் விடயமாகும். இவ்விருவருடைய சரிவு, சாவு' வீழ்ச்சி, எழிச்சிகளிலும் எதிர்பாராத அதிர்ச்சி தரும் நிகழ்வுகள் இடம்பெறுவதும் நினைக்கப்படும். ஒருவன் தேடி வைக்க மற்றவன் திருடி வைக்கும் நிலையும் ஒருவன் உழைத்து. உழைத்துச் சேர்த்துவைக்க மற்றவன் சுரண்டிச் சுரண்டி ஆக்கம் பெற்றிருப்பதுவும் நினைத்துப் பார்க்க வேண்டியவை என்பது வள்ளுவர் விருப்பம்.

ஆக்கம் உடையவர்கள் அத்தனை பேரும் அவ்விய நெஞ்சுடையார் அல்ல என்பதுவும் கேடடைந்துள்ளவர்கள் அனைவரும் செவ்விய நெஞ்சுடையவர்களல்ல என்பதுவும் நினைக்கப்படும் என்பதால் கருத்தில் படும் பொறியாகும்.

அவ்விய நெஞ்சின் ஆக்கமும் செவ்விய நெஞ்சின் கேடும் மேலோட்டமான பார்வைக்குரியவையல்ல. உள்ளோட்டமான ஆய்வு நோக்குக்குரியவை என்பதுவே திருவள்ளுவர் குறிப்பாகும்.

## வேறு

இரத்தினம் என்னும் ஈடிலாப் பெரியவர்
அன்பும் அறிவும் அருளும் திருவும்
பண்பும் வாய்ந்தே பயன்தர வாழ்ந்தவர்
சிங்கள நாட்டில் செல்வம் பெருக்கி
அங்குளோர்க் கெல்லாம் அள்ளி வழங்கிய
தன்னிக ரில்லாத் தார்மீகச் செல்வர்
வன்செயல் வந்தே வாட்டிய போது
தன்னரும் இரண்டு தனயர் களோடு
அன்புசெய் நல்மனை யாளையு மிழந்தார்.

மருத்துவம் பயின்ற மகள்கா வேரியும்
பொறியிய லாளன் புதல்வன் கண்ணனும்
உயிர்பிழைத் ததஞல் உயிர்இவர் பிழைத்தார்
அப்படி யிருந்தும் அவர்ஊர் மீண்டே
கப்பிய மனத்துடன் காலங் கழித்தார்
ஊரிலே இருந்த உறைவிடத் தோடு
இரண்டொரு நிலபுலம் என்பன தவிர
வேறொரு பொருளும் இல்லா நிலையிலும்
காவேரி கண்ணன் ஆகிய பிள்ளைகள்
இருவரும் இருந்ததால் இவருயிர் இருந்ததே.

(தொடரும்)

## லட்சிய வாதிகள்

நாம் சீதனம் வாங்குவதை
முற்ருக எதிர்க்கிரும்
சீதனக் கொடுமைக்கு
எதிராக மேடைகளிலும்
புத்தகங்களிலும் குரல்
கொடுக்கும்
லட்சியவாதிகள்
ஆஞல்
நம் லட்சியங்களை
எமது திருமணத்தின்
போது
லட்சங்களே தீர்மானிக்கும்
ஓ...... ...
இப்போது புரிந்தது
சீதனக் கொடுமைக்
கெதிரான
அலட்சிய வாதிகள் தான்
நாம்

—குப்பிளான் ஜெகன்

# பூகம்பம்: விஞ்ஞானிகள் வெல்வார்களா?

ஆர்மீனியாவில் கடந்த மாதம் ஏற்பட்ட பூகம்பம் உலக மக்களைப் பெரும் கவலைக்குள்ளாக்கியது அரை லட்சம் மனிதரைப் பலி கொண்ட இப் பயங்கரம் இன்றைய அறிவியல் யுகத்தில் மனிதனின் அதிக கற்பனைகளையெல்லாம் வென்று விட்ட சோக நிகழ்ச்சி

பூகம்பம் எங்கு இடம் பெறும் என்று தெரிவிக்க மட்டும் இன்றைய விஞ்ஞானிகளால் முடிகிறது. ஆனால் எப்போது ஏற்படும் என்று கூற முடிவதில்லை.

1985ஆம் ஆண்டு மெக்சிக்கோவில் இத்தகைய பூகம்பம் ஒன்று ஏற்பட்டது; 5000 மக்களைப் பலி கொண்டது.

வரலாற்றில் பல பூகம்பங்களை மனிதன் கண்டு வந்துள்ளான். ஆனால் 1985-ல் மெக்சிக்கோவிலும் கடந்த மாதம் ஆர்மீனியாவிலும் ஏற்பட்ட பூகம்பங்கள், சமீப காலத்தில் மறக்க முடியாத இழப்புக்களை ஏற்படுத்தி விட்டன.

இவற்றை விட மோசமான அதிபயங்கர விளைவுகளைக் காட்டிய பூகம்பங்கள் சுமார் அரை நூற்றாண்டுக்கு முன்னரும் இடம் பெற்றுள்ளன.

1920இல் சீனாவில் கான்சு பகுதியில் ஏற்பட்ட பூகம்பம் 1,80,000 பேரைப்பலி கொண்டது.

1923 இல் யப்பான், டோக்கியோ நகரில் ஏற்பட்ட பூகம்பத்தினால் 1,43,000 பேர் உயிரிழந்தனர்.

1935இல் பாகிஸ்தான், குவெட்டா பகுதியில் எழுந்த பூகம்பம் 60,000 பேரைப் பலிகொண்டது. இதே ஆண்டில் சீனாவில்- மீண்டும் அதே இடத்தில்- ஏற்பட்ட பூகம்பம் 70,000 மனிதரைப்பலிகொண்டது

1948இல் யப்பான், பியூக்கி பகுதியில் இடம் பெற்ற பூகம்பம் 5000, பேரை அழித்தது

1975இல் சீனா லியோனிங் பகுதியில் ஏற்பட்ட பூகம்பத்தினால் அதிர்ஷ்டவசமாக, சில இறப்புகளே இடம் பெற்றன.

1976இல் சீனா, தங்ஷான் பகுதியில் இடம் பெற்ற பூகம்பத்தினால் 2,50,000 பேர் பலியாயினர்.

இந்த விஞ்ஞான யுகத்தில் உலக மக்கள் ஒருமித்து கேட்கக்கூடிய ஒரே கேள்வி பூகம்பம் பற்றி முன்னறிவிப்பு செய்ய முடியாதா? ஆண்டுதோறும் ஏற்ப்படும் ஆயிரக்கணக்கான மனித இழப்புகளை தவிர்க்க முடியாதா? என்பதே.

இம்முயற்சியில், உலகெங்கும் பல விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர் என்பது உண்மை. பல்வேறு நாடுகளில் அளவைக் கருவிகளைக் கையாளுதலும் கட்டுப் படுத்தலும் தொழில் நுட்பக் கலைக்கு சவாலாக உள்ளன. மக்களின் மனோ பலத்தையும் அவர்கள் சிந்தனைக்கெடுக்க வேண்டியுள்ளது-பிழையான ஆருடம் பயங்கர விளைவுகளை ஏற்படுத்தும் என்பதால்.

ஒருதவறான ஆருடம் எதிர் பாராத எதிர்ப்பை சம்பாதிக்கலாம்-'புலி புலி' என்று எந்நாளும் சத்தமிட்டவன் கதைபோல.

அவர்களின் இலக்கு, சரியானதும் குறுகிய கால அறிவித்தலுமாக இருக்க வேண்டும்.

இன்றுவரை பூகம்பம் பற்றிய முன்னறிவிப்புக்களில் ஒன்று மட்டும் வெற்றி பெற்றது.

1975 ஆம் ஆண்டு பெப்ரவரி 4ஆம் நாள் சீனாவின் மாபெரும் தொழிலக பிரதேசமான சாங் நகரை பூகம்பம் தாக்கியது. ஆய்வாளர் இதனை முன் கூட்டியே தெரிவித்தனர் பத்தில் ஒன்பது வீதமான கட்டடங்கள் நாசமாயின ஆனால் அங்கு வாழ்ந்த ஒருலட்சம் மக்கள் காப்பாற்றப்பட்டனர் அரச அதிகாரிகள் மக்களை வெளியேற்றி கிராமப் புறங்களில் கேளிக்கை நிகழ்ச்சிகளை நடாத்தி, பார்த்துகளிக்க செய்தனர், மக்கள் ஏமாற வில்லை.

**எஸ். பி. கே.**

1978இல் சோவியத் விஞ்ஞானிகள் பாமிர் மேட்டில் இடம் பெற்ற பூகம்பத்தை சில மணி நேரத்திற்கு முன் சொல்லி வைத்தனர் எனினும் விஞ்ஞானிகளுக்கு பூரண வெற்றியை அளிக்க வில்லை.

ஹய்சாங் நகரில் பூகம்பத்தை முன் கூட்டியே அறிவித்துமக்களைக்காப்பாற்றிய போதிலும் 1976 இல் உலக மக்களைப் பெரிதும் கவலைக் குள்ளாகிய பயங்கர பூகம்பம் தங்சாங் நகரை உலுக்கி இரண்டரை லட்சம் மக்களைப் பலிகொண்டது.

இரு அமெரிக்க இளம் விஞ்ஞானிகள் பெரு நாட்டின் கரையோரப் பகுதியில், 1981 இல் சில தொடர் பூகம்பம் இடம்பெறும் என தீர்க்கதரிசனம் கூறினர். ஆனால் அவர்கள் சொன்ன காலப்பகுதியில் பூகம்பம் ஏற்படவில்லை. எனினும் நிலவியல் விஞ்ஞானிகள் சொல்வதை அலட்சியம் செய்வதிலும் அர்த்தமில்லை.

பூகம்பம் பற்றி ஆருடம் சொல்வதற்கு, ஒருவருக்கு பூகம்பம் ஏற்படுவதற்கான அடிப்படைக் காரணம் தெரிந்திருத்தல் அவசியம்.

பூமி எனும் நில மண்டலம் பல அடுக்கு 'தகடு' களால் ஆனது என்று நிலவியலாளர் நம்புகின்றனர். பிரமாண்டமான ஒவ்வொரு தகடும் மெல்ல மெல்ல நகருகின்றன. உதாரணமாக வட அமெரிக்க தகடு வட மேற்றிசையில் ஆண்டுக்கு இரண்டு அங்குலம் வீதம் நகருகின்றது. இந்த அசைவுகளின் போது இருபக்கமுமுள்ள தகடுகள் தாக்கமடையலாம். படிப்படியாக பெரும் அமுக்கம் ஏற்படலாம் இத்தகைய அமுக்கம் தீவிரமடையும் போது. பூமியில் உறைந்து இறுகிப் போன படிம சக்திகள் அதிர்ச்சி அலைகளாக மேலே தள்ளப் படும் இவை பூகம்பம் எனப்படும்.

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் கண்டு பிடிக்கப்பட்ட விதி இது.

இவ்விதிப்படி பூமித் தகடுகள் ஒன்றோடொன்று மோதும்போது பூகம்பம் ஏற்படுகின்றது என ஆராய்ச்சியாளர் ஏற்றுக்கொண்டனர்

கலிபோர்னியா, சேன் அன்ட்றா பகுதியில் நகரும் இரு தகடுகள் ஒன்றையொன்று எதிர்த்து செல்வதாயும் அடுத்த முப்பது ஆண்டுகளில் மாபெரும் பூகம்பம் ஒன்று ஏற்படலாம் என்றும் தென் அமெரிக்காவின் மேற்குக்கரையில் நகரும் மற்றொரு தகடு பயமுறுத்திக் கொண்டிருக்கிறது என்றும் ஆய்வுகள் கூறுகின்றன.

உலகின் சில பகுதிகள் பூகம்பத் தாக்குதலுக்கு இலக்காவது எப்படி?

நகரும் தகடுகளுக்கு மத்தியில் உள்ள நாடுகளை பூகம்பம் தாக்குவதில்லை

இலங்கையில் பூகம்பம் ஏற்படாததற்கு காரணம் இது தான்.

பூகம்பம் பற்றிய ஆராய்ச்சியில் யப்பான் 400 ஆண்டுகளாக ஈடுபட்டு வருகின்றது சீனா 2000 ஆண்டுகளாக ஆராய்ந்து வருகிறது.

பூகம்பம் ஏற்படுவதற்கு சற்று முன்னர் நாட்டில் வாழும் மிருகங்கள் அதிர்ச்சியடைந்தாற் போல் அசாதாரண முறையில் நடமாடுகின்றன என சீன ஆய்வாளர் கூறுகின்றனர். மிருகங்கள் அதிர்ச்சியடைவதற்கு காரணம் என்ன என்று இன்னும் தெளிவாகவில்லை.

திரும்பத் திரும்ப பூகம்பம் தாக்கும் பகுதிகளை விட்டு நீண்டகாலம் பூகம்பம் ஏற்படாத இடங்களில் நகரங்களையும் தொழிலகங்களையும் பாடசாலைகளையும் அமைப்பதில் இன்று கவனம் செலுத்தப்படுகின்றது.

ஆக இயற்கையின் சீற்றத்தை வெல்ல விஞ்ஞானம் இன்னும் தயாராகவில்லை.

# நன்றியுள்ள நாய்க்கு வெண்கலத்தில் சிலை

நாட்டு மக்களின் மேம்பாட்டிற்காக உழைத்தவர்கள் நாட்டு மக்களால் மதிக்கப்படுபவர்கள். தேச பிதாக்கள் என்போருக்குச் சிலை வைத்துப் போற்றுவது நமது நாட்டு மரபாக இருக்கின்றது. கற்சிலை, சளிமண் சிலை, வெண்கலச்சிலையெனச் சிலைகள் பல வகைப்படும்.

ஆனால் நன்றியுள்ள நாயொன்றிற்குச் சிலை அமைத்த நாடொன்றிருக்கிறது நக்கிற நாய்க்குச் செக்கென்றுலென்ன சிவலிங்கமென்றுலென்ன என்றொரு பழமொழி இருக்கிறது. ஆனால் நன்றிக்கு நாயையே உதாரணமாக எடுத்துக் காட்டப்படுகிறது. நன்றியுள்ள நாய்க்கு யப்பான் தேசத்திலுள்ள மக்கள் வெண்கலத்திலான சிலையொன்றை நிறுவியுள்ளனர். இது எமக்கு வியப்பூட்டும் நிகழ்ச்சியாக இருக்கிறதல்லவா?

யப்பானின் தலைப்பட்டினம் டோக்கியோ. அங்கு ஷிபூயா புகையிரத நிலைய அருகில் இச்சிலை நிறுவப்பட்டுள்ளது இச் சிலை அமைக்கப்பட்ட பின்னர் இதன் திறப்பு விழாவிற்கு பல ஆயிரக்கணக்கான மக்கள் வந்து மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

இப்படியாக மக்கள் ஒன்று திரண்டு இந்தச் சிலையை அமைக்கக் காரணமாக இருந்த நாயின் வரலாறு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தது. சரித்திரத்தில் இடம் பெற்ற அந்த நாயின் பெயர் ஹச்சிச்கோவாகும். இந் நாய் அக்கிட்டா என்ற உயர் இனத்தைச் சேர்ந்தது. பல்கலைக்கழகப் பேராசிரியராக இருந்த ஹிட்ஸாபுரே யூனோ என்பவரால் இந்நாய் வளர்க்கப்பட்டது.

தினமும் பேராசிரியர் பல்கலைக்கழகம் போகும்போது இந் நாயும் அவருடன் புகையிரத நிலையம் சென்று அவரை வழியனுப்பி விட்டு, மாலை அவர் வீடு திரும்பும் போது மீண்டும் புகையிரத நிலையம் சென்று அவருடன் சேர்ந்து வரும். இது அதன் தினசரி வேலையாக இருந்து வந்தது. தொடர்ந்து சில வருடங்களாக இந்த டியூட்டியை தன் எஜமானனுக்காக இந் நாய் செய்து வந்தது.

நாளாந்தம் செய்வது போல் இந்தநாய் ஒரு நாள் மாலை நேரம் புகையிரத நிலையம் சென்றது. அன்று வந்த புகையிரதத்தில் தனது எஜமானன் வராததைக் கண்டு அவரை எதிர் நோக்கிக் காத்துக் கிடந்தது. ஆனால் பேராசிரியரோ அன்று வீதி விபத்தொன்றில் சிக்கி உயிரிழந்து விட்டார். இது அந்த நன்றியுள்ள நாய்க்கு எப்படித் தெரியும்?

பேராசிரியர் இறந்த செய்தியை அறிந்த அவரது சகாக்கள் அவரை வீட்டுக்குக் கொண்டு வந்து நல்லடக்கம் செய்து விட்டார்கள். நாய் தொடர்ந்து புகையிரதநிலையத்தில் காத்திருந்தது. எஜமானன் வராததால் சில நாட்களின் பின்னர் அவர் இல்லம் திரும்பியது. எஜமானனைக் காணவில்லை. தொடர்ந்து 11 ஆண்டுகள் எஜமானனின் வருகைக்காக மாலை 5 மணிக்குப் புகையிரத நிலையம் சென்று வந்து கொண்டிருந்தது.

**புத்தொளி**

நாய் நாளும் பொழுதும் இப்படி வீட்டுக்கும் புகையிரத நிலையத்திற்குமாக அலைந்து திரிவதை அவ்வூர் மக்கள் அவதானித்தனர். நாயின் நன்றியுணர்வை உணர்ந்து அவர்கள் ஆச்சரியமடைந்தனர். இது ஓர் அபூர்வப்பிறவி என அதனை அன்புடன் கவனித்து வந்தார்கள். பத்திரிகைகள் அதன் புகைப்படத்தைப் பிரசுரித்தோடு அதன் எஜமான விசுவாசம் பற்றியும் எழுதின. வானொலியிலும் இந்நாய் பற்றிப் பலர் பாராட்டுரை வழங்கினர்.

நாய் நோய்கண்டது. நாட்டிலுள்ள மிருகவைத்திய நிபுணர்கள் வந்து பார்த்தனர். மருந்து கொடுத்தனர். நாய் இனி நீண்டகாலம் வாழமாட்டாதென்பதை உணர்த்த மக்கள் நாய் உயிருடனிருக்கும் போதே அதற்கொரு நினைவுச் சின்னம் அமைக்க முடிவு செய்தனர் சிலையும் வெண்கலச் சிலையாக இருக்க வேண்டுமென விரும்பி அவ்வாறே அமைத்தனர். சிலை திறப்பு விழாவிற்கு பல ஆயிரக்கணக்கில் மக்கள் வந்திருந்தார்கள். சிலையைப் பார்க்க அந்த நாயையும் அழைத்து வந்தார்கள். அன்று ஒரே கொண்டாட்டமாக இருந்தது. அங்கு வந்த நாயை, சிலையை அவதானிக்க மக்கள் தூண்டினர். நாய் அச்சிலையைப் பார்த்துக் குரைத்தது.

அதற்குச் சிலை நிறுவிய பதினொரு மாதங்களிற்குப் பின்னர் ஹச்சிக்கோ நடக்க முடியாது புகையிரத நிலையத்தில் எஜமானனுக்காகக் காத்திருந்த போதே ஒரு நாள் உயிரை விட்டது.

நாயின் இறப்பு அவ்வூர் மக்களைக் கவலைக்குள்ளாக்கியது. சிலர் வாய் விட்டுக் கதறி அழுதார்கள். அதனை அடக்கம் செய்வதற்குத் தடபுடல் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அதன் இறுதி நாள் நாலாயிரத்திற்கு மதிகமான மக்கள் ஒன்று திரண்டு மரியாதை செய்தனர். நூற்றுக்கணக்கான மலர் வளையங்கள் வைக்கப்பட்டன. ஒரு மனிதன் இறந்த பின்னர் செய்யும் மரியாதை போல் இந் நாய்க்கு மரியாதை செய்தனர்.

நாயின் எஜமானர் ஹிட்ஸாபுரே யூனோவின் சமாதிக்கருகில் 'அயோமா' என்ற கல்லறையில் ஹச்சிக்கோ நல்லடக்கம் செய்யப்பட்டது யப்பான் நாட்டுச் சரித்திரத்தில் இந்த நாய் இன்று இடம் பிடித்து விட்டது. யப்பான் நாட்டுக்குச் செல்லும் மக்கள் இந்த நாயின் வெண்கலச் சிலையைப் பார்த்து வியப்படைகின்றனர்.

# இந்துபோர்ட் இராசரத்தினம்

## காலமும் வாழ்வும்

**18**

### பல்கலைக்கழக வளாகந்தானே?

இற்றைக்கு ஐம்பதாண்டு களுக்கு முன் இலங்கையிலே பல்கலைக்கழகம் போன்றமைந்த பாடசாலையும், வளாகம் போன்றமைந்த சுற்றுப் புறச்சூழலும் உள்ள ஓரிடம் இருந்ததென்றால் அது எங்கே என்று இன்று பலர் கேட்பார்கள். இன்று வடமாநிலம், கிழக்கு மாநிலம், தென்மாநிலம், மத்தியமாநிலம் எங்கும் பல பல்கலைக்கழகங்களும் பலவாய பீடங்களும், பல்லாயிரவர் படித்துப் பட்டம் பெறும் பெரும் வாய்ப்பும் புலமைப் பரிசில்களூட்டும் உள்ளன.

அன்று இரண்டாம் மகாயுத்தம் ஆரம்பமாவதற்கு உலகம் புகைந்து கொண்டிருந்த வேளையில் வெள்ளையர் இலங்கையை ஆண்ட போக்கில் எங்கும் வேலை குறைப்பும், வேலைநீக்கமும், ஆள்குறைப்பும், உத்தியோகமின்மையும் வேலை வாய்ப்பின்மையும் நிலவிய காலத்தில்,இந்துபோர்ட் இராசரத்தினம் அவர்களின் அநுசரணையில் திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலை பல்கலைக்கழகமென ஒரு பகுதியாயும், சைவாசிரிய கலாசாலை மற்றொரு பகுதியாயும், காவியபாடசாலை இன்னொரு பகுதியாயும், என்றன்ஸ் வகுப்புகள் என்னும் ஆசிரியகலாசாலைப் புகுமுக வகுப்புகளின் மண்டபம் இன்னொருபகுதியாயும், கைத்தொழில் நெசவுத்தொழில் மண்டபங்கள் இன்னொரு பகுதியாயும் இருந்தன.

திருநெல்வேலிச் செம்பாட்டுச் சூழல் புனிதமானது. அங்கே கல்வி கலைத்துறைகள் தம்பாட்டில் வந்து சாரும் தன்மையானவை. முத்துத்தம்பி வித்தியாசாலையைக் கிழக்குப் புறத்திலும் சைவாசிரியகலாசாலையை மேற்குப் புறத்திலும் கொண்டமைந்த சூழல், நிழல்தரு மரங்களாலும் பயன்தரு மரங்களாலும் நிரம்பிய அழகு வாய்ந்தது. முத்துத்தம்பி வித்தியாலயம் ஒரு காலத்தில் மாநிலத்தில் முதற்தரமான தமிழ்ப் பாடசாலையாயிருந்தது. அதன் ஆரம்ப வகுப்புக்கள் ஆடியபாத வீதியில் பழைய கட்டடத்திலும், பெரிய வகுப்புகள் பெரிய மத்தி என்னும் கட்டடங்களில் செம்பாட்டுத் தரையிலும் இடம் பெற்றிருந்தன. பத்தாம் வகுப்பு வரை படிப்பதற்கு வசதியான முத்துத்தம்பி வித்தியாலயத்தில், உடனுறைவதற்கு வசதியான விடுதியும் உண்டு. இதனால் தூரத்துப் பிள்ளைகளும், பிறமாவட்டத்துப் பிள்ளைகளும் பாதுகாப்புக்கருதியும் சிக்கனமான வாழ்க்கை தூய்மையான வாழ்க்கை கருதியும் இங்கே வந்து குவிந்தனர்.

பத்தாம் வகுப்பைத் தாண்டியதும் பழைய காலத்து முறையில் ஆசிரியர்க்கான பயிற்சி பெறவாய்ப்பு அங்கே இருந்தது. அங்கே நிலவிய என்றன்ஸ் வகுப்புக்களில் படித்தால் கட்டாயமாக ஆசிரிய கலாசாலையுட் பிரவேசிக்கலாம். ஆண்களாயின் அடுத்த கட்டத்திலேயும் பெண்களாயின் அடுத்த ஊராய இணுவில் இராமநாதன் கல்லூரியிலும் பயிற்சி பெறலாம். சிவன் பிள்ளைகளாயின் அஃதாவது அனாதையர்களாயின், இராசரத்தினம் அவர்களின் அரவணைப்பில் எல்லாம் இலவசமாகக்கிடைக்கும். அவர் தம் சொந்தப் பிள்ளைகளிற் பார்க்க இந்தப் பிள்ளைகளிலேதான் பற்று மிகுதி. இந்தப் பிள்ளைகளுக்கு ஆசிரியர் அடித்தால் இடமாற்றம் கட்டாயம் கிடைக்கும்.

முத்துத்தம்பி வித்தியாசாலையில் ஒரு தனிக் கல்விப் பாரம்பரியம் அன்று நிலவியது. அது படிப்பாற்றல் தானே ஊறிவருவது. அந்த ஆற்றல் ஒரு மூலவூற்றும் சில கிளையூற்றுக்களாலும் உண்டானது. அந்தமூலவூற்று அன்று எல்லோரும் பற்றோடும் பணிவோடும் பண்டிதர் ஐயா என வழங்கிய கணபதிப் பேராசான் மூலம் ஊறியது. அது நாவலர் பாரம்பரியத்தில் உண்டான தேக்கம், ஒரு வாவி. ஆறு என்பது மலையிலேனும் வாவியிலேனும் ஊற்றெடுத்து நிலத்திலே பாயும் சுத்த நீர்ப்பெருக்கு. இந்த அறிவுப் பெருக்கு திருக்கைலாயத்து ஊற்றிலிருந்து உமாபதிசிவாசாரியார் வரை பாய்ந்து, ஆதீனவழிகளால் திசைதிரும்பி, தம்பிரான்கள் வழியாக எமக்குக் கிடைத்தது. நாம் திருக்கைலாய பரம்பரைச்சைவர். தென்னாடுடைய தமிழும் திருக்கைலாயத்துச் சைவமும் இணைபிரியாதவை. தமிழே சைவம், சைவமே தமிழ்.

முத்துத்தம்பி வித்தியாலயத்தில் புகழ் மணக்க அறிவு கமழ நடந்த என்றன்ஸ் வகுப்பில் ஆண்டு தோறும் நூற்றுக்கும் அதிகமானோர் புகுமுகத் தேர்வுக்கு ஆயத்தஞ் செய்து வந்தார்கள். இராசரத்தினம் அவர்களின் பரந்த மனப்பான்மை அவர்களிடமும் கழிவிரக்கங்காட்டியது. பரீட்சார்த்திகள் இருபத்தைந்து ரூபா மாத்திரம் முற்பணமாகக் கட்டிவிட்டு மூன்று மாதங்களுக்குமேல் நீடித்த படிப்பில்தமிழ்மொழி, கணிதம், பொது அறிவு, பொதுவுளச்சார்பு முதலிய பாடங்களை தக்க ஆசிரியர்களிடம் பயின்றுவந்தார்கள். நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் நூற்றுக்கணக்கான பெண்கள் அங்கே படித்து வந்தார்கள்' அவர்களிற் பெரும்பாலானவர்கள் திருநெல்வேலி விடுதியிலேயே உறைந்து படித்துவந்தார்கள்.

அங்கே படித்த ஆண்களாயினும் பெண்களாயினும் ஏழைகள் எனக் கண்டால் அவர்களிடம் கட்டணம் பெறுமல் இலவசமாகவே படிக்க அனுமதியளித்து வந்தார். சிவன் பிள்ளைகளாயின் விடுதி வசதிகள் உண்டி வசதிகள் யாவும் இலவசமாகவே வழங்கினர்.

இவற்றுக்கெல்லாம் சூத்திரதாரியாக இருந்து அசைத்து நடத்தி வந்தவர் பண்டிதர் அவர்களேயாவர். அவர் முன்னர் 1917 ஆம் ஆண்டுமுதல் நாவலர் காவிய பாடசாலையில் இலவசமாகப் பயின்றதோடு, அங்கே உறைவிட வசதியும் உணவு வசதியும்பெற்றுஉருவானவர். மட்டுவிலிலும் தனங்கிளப்பிலும் தந்தை, தாய் வழியாகப் பெருநிலப் பரப்புக்குச் சொந்தமான வயற்காரன் நாவலர் சம்பிரதாயத்தை அனுசரித்துக் காவிய பாடசாலையில் வசதிகளைப் பெற்று வந்தார்.

அந்தப் பயிற்சி விசேடத்தால் அவர் மதுரைத் தமிழ்ப் பண்டிதரான பின், தமது தந்தையாரின் ஊராய மட்டுவிலிலே ஒரு காவிய பாடசாலை நடத்தி, மாணுக்கர்களுக்கான பரிசுகளையும் சேர். இராமநாதன் அவர்களைக்கொண்டு வழங்கச்செய்தவர். இளைஞரான பண்டிதர் தமது ஊரவரான லோ. செல்லப்பா என்னும் பெரியவர் மூலம் இராமநாதன் அவர்களை மட்டுவிலுக்கு அழைத்தவர். அந்த வகையில் திருநெல்வேலியிலும் ஒரு காவியப் பாடசாலையை ஆரம்பித்து நடத்துவதற்கு அபிலாசை கொண்டு சைவாசிரிய கலாசாலை அதிபர் சுவாமிநாதன் அவர்களைக் கொண்டு, அக்காலத்தில் புகழ்பெற்ற பத்திரிகையாய ஈழகேசரி என்னும் வெளியீட்டில் ஒரு விளம்பரம் பிரசுரித்தார்.

''திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையில் வருகிற 18. 5. 1935 ஆம் நாள் தொடக்கம் வாரந்தோறும் சனிக்கிழமைகளில் மதுரைத் தமிழ்ச்சங்கப் பண்டிதர்களுக்கான வகுப்பும், ஞாயிற்றுக்கிழமைகளில் மதுரைத்தமிழ்ச் சங்கம் யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் ஆகிய நிறுவனங்களின் பால பண்டிதர்களுக்கான வகுப்பும் இலவசமாக நடைபெறும். படிக்க வருபவர்களுக்கு இலவசமாக உணவு வசதியும் உண்டு. பிராமணர்களுக்குரிய வசதிகளும் செய்து தரலாம்''.

இவ்வசதிகள் யாவற்றையும் குறைவறச்செய்து கொடுத்தற்கு முன்வந்தவர் சைவப் பெரியார் இராசரத்தினம் அவர்களே என்பது சொல்லாமலே விளங்கும். அக்காலத்திலே சாதாரண ஆசிரியர் ஒருவர் ஆசிரியர்க்கான பயிற்சியோடு பண்டிதர் பட்டமும் பெறுவாராயின் அவருக்கு மேலதிமாக மாதாந்தம் பத்து ரூபாவும், பாலபண்டிதராயின் ஐந்து ரூபாவும் பெறுவதற்கு வாய்ப்பளித்திருந்தது.,எனவே

**க.சி.குலரத்தினம்**

சைவாசிரியகாலசாலைச் சூழல் பண்டித, பாலபண்டித வகுப்புக்களிற் படிக்க வந்தவர்களின் பெருக்கத்தாலே புகழ் பெறுவதாயிற்று.

காவிய பாடசாலையில் பண்டிதர்கள், பால பண்டிதர்கள் பெருந்தொகையாக உருவாகி வந்த காலத்திலே, பண்டிதர் கணபதிப்பிள்ளை அவர்கள் கொண்டமகிழ்ச்சியின் காரணமாக, அவர் சமஸ்கிருத மொழியையும்புகுத்தி அதிலேயும் பண்டிதர்களையும் பால பண்டிதர்களையும் உருவாக்க விரும்பி, 26. 6. 1938 ஆம் நாள்முதல் வியாகரணசிரோமணி பிரம்மஸ்ரீ தி. க. சீதாராம சாஸ்திரிகள் அவர்களின் உதவியைப் பெற்றார். அன்று முதல் திருநெல்வேலியில் பிராமணர்களின் படிப்பும் இடம் பெற்றது. இந்த மகிழ்ச்சிப் பெருக்கில் மிதந்த பண்டிதர் ஐயா அவர்கள்சிங்கள மொழியும் அங்கே புகுத்த விரும்பி, 30-10- 1938 ஆம் நாள் விஜயதசமிவேளையில் நாகவிகாரைமுதல்வர் ஸ்ரீசுமண தேரோ அவர்களை அழைத்து அதற்கான ஒழுங்குகளையும் செய்துவைத்தார்.

மேலும் விரிவாகப்பணி புரிய விரும்பியபண்டிதர்ஐயா அவர்கள் தோட்டவேலை,நெசவு வேலை அச்சுக்கூட வேலை என்பனவோடுஆறுமுகநாவலரவர்கள் கண்ட கனவைநிறைவாக்க விரும்பிச் சைவபிரசாரகர்கள், சைவக்குருமார் முதலியோர்களின் நெறி முறைகளுக்கான பயிற்சிகளையும் ஆரம்பித்தார்கள்.

இவ்விதமாகப் பரந்த அடிப்படையில் பலவித கலைகளுக்கும் பயிற்சியளித்து வந்த திருநெல்வேலி சைவாசிரிய காலாசாலைச் சுற்றுடல் விரைவில் பல்கலைக்கழகத்தின் வளாகம் போல விரிவடைந்து, செயலாற்றி வந்தது. இவற்றையெல்லாம் நெறிப்படுத்தி பண்டிதர் ஐயா அந்தச் சூழலின் நடுவிலிருந்த மகிழமரத்தினருகிலமைந்த கொட்டிலில் தவமுனிவரென வாழ்ந்து வந்தார்.

பண்டிதர் ஐயா அவர்கள் சைவாசிரிய கலாசாலையிலே தமிழ் இலக்கண இலக்கிய பாடங்களுக்குப் பொறுப்பாசிரியராயிருந்து விரிவுரையாற்றிய காலத்திலே, குறிப்பிட்ட காலத்தில் விதிக்கப் பெற்ற நூல்களிலும் பார்க்க மேலதிகமாகப் பல நூல்களையும், பிரபந்தங்களையும், உள்ளூர்ப் புலவர்களின் ஆக்கங்களையும் ஐந்திலக்கணங்களையும் கற்பித்ததோடு. நல்ல வசனநடையெழுதவும் தரமான பாடல்களையாக்கவும் பயிற்சியளித்து வந்தார். பத்ததிபோல அவர் வகுத்தவழி இலக்கியவழி எனப் பின்னர் அச்சில் வெளி வந்தது. ஒரு காலகட்டத்தில் யாழ்ப்பாணத்தில் சைவாசிரியர்கள் பற்றுக்குறையாக இருந்த காலத்தில், கல்விப் பணிப்பாளர் யாழ்ப்பாணப் பெரியார்களிடம் சைவாசிரியர்களிடம் சைவாசிரியர்களை மேலதிகமாக உருவாக்குங்கள் என்று உற்சாகமூட்டியதும் உண்டு.

பின்னர் முப்பதாம் தசாப்தத்திலே சைவாசிரிய கலாசாலைவேககதியில்நடைபெற்று வந்த காலத்திலே அரசினரின் சகல துறைகள், திணைக்களங்களில் உத்தியோகத்தர்களை வெகுவாகக் குறைத்துக் கட்டுப்படுத்தி வந்த காலத்திலே 1936ஆம் ஆண்டிலே லண்டன் மற்றிக்குலேசன், கேம் பிரிட்ஜ் சீனியர் முதலிய பரீட்சைகளில் சித்தியெய்திய பலர் வேலை வாய்ப்பின்றிச் சோம்பித் திரிந்தனர்.

அக்காலத்தில் புத்திக் கூர்மையுள்ள இராசரத்தினம் அவர்கள், ''வாருங்கள் வந்து நேர்முகப் பரீட்சையிலும் எழுத்துப்பரீட்சையிலும் பங்கு பற்றுமின்'' என வரவேற்று, முப்பத்தாறு பயிற்சியாளரைத் தெரிந்து இரண்டு வருடப் பயிற்சி கொடுத்து. ஆசிரியராக்கி உய்யும் வழிகாட்டிவிட்டார். அவர்களுக்குத் தமிழ்வளம் பண்ணிய பண்டிதமணியவர்கள் நகைச்சுவையாக,

''முப்பத்தாறும் ஆண்டிலே மூன்றுடசின் ஆங்கிலேயருக்குத் தமிழ்வரப் பண்ணினேன்'' என்று கூறியதும் உண்டு. பின்னர் அவ்வாறே 1942 ஆம் ஆண்டிலும் ஆங்கிலம் பயின்ற பதினொருவருக்குப்பயிற்சியளிக்கப் பெற்றமை ஆசிரியகலாசாலை வரலாற்றில் ஓர் அத்தியாயம். ஆங்கிலம் பயின்று தமிழாசிரியர் பயிற்சி பெற்றவர்கள், ஆங்கில ஆசிரியப் பயிற்சி பெற்றவர்களுக்குச் சமமாக இருந்த காலம் ஒரு காலம். இது சொந்த அநுபவம்.

இங்ஙனமாக நிழல் தரு மரங்களின் கீழும், ஓலைக் கொட்டில்களிலும்,ஓட்டு மண்டபங்களிலும் காவிய பாடசாலை, பிரவேசபரீட்சை வகுப்பு, ஆசிரியப் பயிற்சி, நெசவுப் பயிற்சி முதலியன நடைபெற்று வந்த காலத்தில் நிலவிய சுத்தம், சுகாதாரம், சுற்றுடல் தூய்மை, சிட்டாசாரம் இவற்றையெல்லாம் தென்னிலங்கைச் சகோதரர் வந்து கண்டு மதித்துப் போனமை பெரிய வைபவம். கலாநிதி என். எம். பெரரா அவர்கள் மனம் விட்டு வாழ்த்தியதும் உண்டு.

இவ்வாறு தென்னிலங்கைச் சகோதரர்களேயன்றி, தென்னுடு என்னும் தமிழ் நாட்டு நல்லவர் பெரியவர்களும் நாவையசைத்து நன்றுக வாழ்த்தியதும் உண்டு. அவர்களுள் நகைச்சுவையோடு நாவசைத்த பெரியார் கல்கி-கிருஷ்ணமூர்த்தி அவர்கள், ''யாழ்ப்பாணத்திலே தற்செயலாகத் தடக்கி விழுந்தால் ஒரு பண்டிதரின் மேலேதான் விழவேண்டிவரும்'' என்றார். இங்ஙனம் அவர் மதித்த பண்டிதர் கூட்டத்தை உருவாக்கிய பெரிய பண்டிதர் கணபதிப்பிள்ளை ஐயாவை அவர் ''பண்டிதமணி'' எனப் பாராட்டினர். அந்தப் பாராட்டுப் பெற்ற வைபவத்தைத் தினகரன் பத்திரிகையின் அக் காலத்து ஆசிரியரான வீ. கே. பி. நாதன் வெளிப்பகர்ப்புச் செய்தமையால், பண்டிதமணி என்னும் பெயர் எங்கும் பரந்தது; வியாபித்தது. அதுவே சி. க. அவர்களின் காரணப் பெயராகி நிலைத்துவிட்டது. மணி கட்டிய பண்டிதர் என்று வாயில் வந்தபடி கூறிய வம்பர்களும் அவரைக் கண்டால் கைகட்டி வாய்பொத்தி நின்றதும் உண்டு.

### செயல் வீரன் இராசரத்தினம்

தசரதகுமாரன் இராமனும், பாண்டு மைந்தன் அருச்சுனனும் அம்பு விடுவதில் சமர்த்தர். நளமகாராசன் தேரோட்டுவதில் நிபுணன். ''கூந்தன் மாவுளமறிதலிற் சாலிகோத்திரன்'' என நளன் குதிரையின் குணமறியும் தேர்ச்சியில் பெயர் பெற்றவன்.

கல்வித்துறையின் கட்டளைச் சட்டங்கள், விதிகள் உப விதிகள், பிரமாணங்கள் என்பன யாவும் சட்டக்கலையின் துறை போன இராசரத்தினம் அவர்களுக்கும் கைவந்த பாடம். சட்டங்களை ஊடறுத்துப் போகவும், புறநடை கண்டு சட்டங்களையே புறங்காண வைப்பதிலும் அவர் நிபுணன் அவர் சட்டங்களைத்தவிடு பொடியாக்கியதும் உண்டு.

முன்னர் சட்டத் துறையின் விதிகள் விலக்குகள் பாரம்பரியங்கள், வழமைகள் முன் நிகழ்வுகள், விவாதங்கள் எல்லாவற்றையும் கருத்தூன்றிக் கற்று, அவற்றை ஆயிரக்கணக்கான பக்கங்களில் திரட்டு என வெளியிட்ட மேதை அவர்.

இவ்வாறுகச் செயல் வீரனுக்க் களத்திலே குதித்த இராசரத்தினம் அவர்கள், சங்கத்தின் தொண்டுகளுக்குத் தமது மோட்டார் வண்டியை அர்ப்பணித்தமை பெரிதல்ல. அவர் சைவ வித்தியா விருத்திக்காக வருவாய் மிகுந்த தமது நியாயவாதித் தொழிலையே தியாகம் செய்தவர். தீரர்கள் வாழ்ந்தது எம்நாடு. தியாகம் புரிந்தது எம்நாடு'' என்று மாணுக்கர்களுக்குப் பாடிக் கொடுத்ததும் இதைக் கொண்டேயாம். இராசரத்தினம் அவர்கள் ஒரு தியாகசீலர்

சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் நோக்கம் தழைப்பதற்கு எங்கெங்கே இராசர் பாடசாலைகள் அமைத்தாரோ, அங்கெல்லாம் வரலாற்றுச் சம்பவங்கள் நிறைந்த வைபவங்கள் உண்டு. அவர் அமைத்த ஒவ்வொரு பாடசாலையும் கதைபேசும். அக்கதைகளைக் கொண்டே இராசரத்தின காவியம் அல்லது

... 15 ஆம் பக்கம் பார்க்க

# வளர்ந்து வரும் பிரிய மகளே! என்னைப் புரிய மாட்டாயா?

ஓடி வருகையிலே கண்ணம்மா உள்ளம் குளிருதடி! இப்படித்தான் குளிர்ந்தேன் ஒரு வயதுக் குழந்தையாக நீ துள்ளி வருவதைக் கண்டு. உன் தாய் பொக்கை வாய்ச் சிரிப்பும் தளிர் நடையும் கண்டு பொங்கிப் பூரித்து போனேன் நீ பேசிய மழலை மொழி எல்லாம் காதுகளில் அமுதமாக பொழிந்தது. என் அற்புதக் கனவுகளெல்லாம் நனவாகப் போவதாக எத்தனை எத்தனை கற்பனைக் கோட்டைகளை கட்டினேன். வீட்டில் முதல் குழந்தையாக அதுவும் பெண்ணாக பிறந்த உன்னை எத்தனை விதமாக அலங்கரித்து அழகு பார்த்தேன் நான்.

நீ நர்சரி ஸ்கூல் செல்ல ஆரம்பித்தாய். உன் மழலை மொழியில் பாடிய பாடல்கள் எல்லாம் கைதேர்ந்த சங்கீத வித்வானின் சங்கீத கச்சேரியாக என் காதுகளில் விழுந்தது. ஆம் என் மகள் சிறந்த பாடகியாக, நடன அரசியாக விளங்க வேண்டும் என்றெல்லாம் கற்பனைக் கோட்டைகள் கட்டினேன். இளிப்பிள்ளையாக எல்லாவற்றையும் நொடியில் கற்றுக் கொண்டாயே. நாளொரு வண்ணமும் நீ அறிவு ஜீவியாக வளர்ந்து வருவதைக் கண்டு என் உடலெல்லாம் சிலிர்த்துப் போனது.

உன் அறிவுத் திறனைக் கண்டு குடும்பத்தினர் அனைவருமே பூரித்துப் போயினரே. ஓரிடத்தில் நிற்காது துள்ளித் திரிந்து கைகொட்டி நகைத்து நடனமாடி எல்லோர் உள்ளத்தையும் கொள்ளை கொண்டாயே; உன் சித்திரம் வரையும் திறனும் வளர உன்னை ஊக்குவித்து நீ வரைந்த ஓவியமெல்லாம் ரவிவர்மா சித்திரமாக நினைத்து பாராட்டி மகிழ்ந்தேனே. மொத்தத்தில் என் கனவெல்லாம் நனவாக்க வந்த ஆதர்ச மகளாக உன்னை உருவாக்க முனைந்தேன். அப்படித்தான் நீயும் வளர்ந்தாய் எல்லாவற்றிலும் முதன்மையானவளாக நீ திகழப் போகிறாய்; உன் அற்புத வளர்ச்சியைக் கண்டு நாங்கள் எல்லோரும் மகிழ்ச்சியில் திணறப் போகிறோம இவளைப் பெற்றவள் பாக்கியசாலி என்று உலகமெல்லாம் புகழப் போகிறது என்றெல்லாம் 'கனவுகளில் மூழ்கினேன்.

நீ குழந்தைப் பருவத்தைக் கடந்துசிறியபெண்ணாகவளர்ந்

**பாசமிகு ஒரு தாயின் கடிதம்**

தாய். கொஞ்சம்கொஞ்சமாக என்ன மாற்றமடி உன்னிடம். ஆடித்திரிந்த கால்கள அமரிக்கையாக நடப்பதைக் கண்டு என் பெண்ணுக்கு அடக்கம் வந்து விட்டது என்று பூரித்துப் போனேன். அலைபாய்நத கண்கள் அமைதி காட்டிய போது இவள் வளர்ந்து விட்டாள் என்று மகிழ்ச்சி கொண்டேன். மொத்தத்தில் உன் வளர்ச்சியை அணுஅணுவாக ரசித்து மகிழ்ந்தவள் உன் தாய்.

நீ மங்கைப் பருவத்தை அடைந்தாய். உன்னிடம பெருத்த மாறுதலைக் காண்கிறேன். ஏழைக் கூட்டுக்குள் நத்தையாக ஒடுங்குகிறாய். சிறிய விஷயங்களுக்கெல்லாம் கோபங்கொள்ள ஆரம்பிக்கிறாய். சிடுமூஞ்சித்தனம் என் அன்புமகளுக்கு ஏற்றதல்ல கண்ணே! தன்னைப் போல் ஒன்றும் அறியாத பேதையாக நீ வளர்வதை விரும்பவில்லை கடிவாளம்இட்ட குதிரையாக உன் வளர்ச்சியே குறிக்கோளாக இருப்பதனால் உன்னுடைய சிறிய தவறுகளும் அவளுக்கு மலையத்தனையாகத் தெரிகிறது. அம்மா கோபிக்கிறாள் என்பதனால் ஒடுங்கிப் போனாயா? இந்த முட்டாள் அம்மாவைத் தயவு செய்து புரிந்து கொள்ளம்மா.

மழலைப் பருவத்தில் உன் விளையாட்டுத்தனத்தை கண்டு களித்த அவள் உன் மங்கைப் பருவத்தில் உன்பொறுப்புகளை உணரச் செய்ய வேண்டுமென்று தவிக்கிறாளடி. ஆனால் குழந்தையாக பழகிய உன்னிடம் தோழியாகப் பழகத் தெரியவில்லையடி. ஒவ்வொரு முறை உன்னை நான் கோபிக்கும் போதும் உன்னுடைய தனித் தன்மை அடிபடுவதாக நீ நினைக்கிறாய் ஆனால் உன்னுடைய தனித்தன்மை வளர வேண்டும் அப்பொழுதுதான் சுதந்திர வானில் ஒரு ஒளி நட்சத்திரமாக ஒளிர முடியும் என்று நான் நினைக்கிறேன்.

உன் சுதந்திரத்தன்மையை ஆக்க வழியில் பயன்படுத்த வேண்டுமென்று விரும்புகிறாளடி உன் தாய் தன்னைப் போல் தலையாட்டி பொம்மையாய் அடிமைப்பட்டுக் கிடக்க அவள் ஒரு போதும் சம்மதிக்க மாட்டாள். ஆனால் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையும், பொறுத்துக் கொள்ளும் தன்மையும் உன் சுதந்திரத்திற்கு ஒரு நாளும் தடையாக இருக்காது. அதைப் புரிந்து கொள்ளாமல் எதைச் சொன்னாலும் 'நானென்ன அடிமையா', 'என்னால் 'காம்ப்ரமைஸ்' பண்ணிக்க முடியாது' என்றும் கூறுகிறாய்.

கலைகளை எல்லாம் கற்றுக் கொண்ட நீ மனிதநேயத்தை மறந்து விட்டாயே. சிறிய

14 ஆம் பக்கம் பார்க்க

## மங்கையர் மஞ்சரி

### கன்னிப் பிரசவத்தின்போது உண்மை வலி எப்படியிருக்கும்

"முதன் முதலில் கர்ப்பமாகியுள்ள பெண்கள், பிரசவ வலியைப் பற்றித் தெரிந்து கொள்வது அவசியம். உண்மையான பிரசவ வலி அரைமணி நேரத்திற்கு ஒரு முறையோ அல்லது சற்றுக் கூடுதல், குறைவான அளவுப்படியோ இருக்கும்.

வலி தொடர்ந்து இருக்காது என்பது நினைவில் கொள்ள வேண்டிய முக்கியமான விஷயமாகும். வலி, விட்டு விட்டுத் தோன்றும், வலி ஏற்படும் போது, வயிறு இறுகிய நிலையில் கெட்டிப்பட்டது போலக் காட்சி தரும்.

வலி நின்றதும், வயிறு தளர்ச்சி பெற்று, சௌகரியமாக இருப்பது போலத் தோன்றும். இந்த மாதிரியான அறிகுறிகளுக்கு, முரண்பட்டுத் தோன்றுவதுதான் 'பொய்' வலியாகும். பொய் வலியானது உரிய பிரசவ காலத்திற்கு முன்னதாகத் தோன்றும். இம்மாதிரி வலிச்சுப் பொதுவாக மலச்சிக்கல் காரணமாக இருப்பதுண்டு. கர்ப்பிணி மருத்துவமனையில் இருந்தால்'எனிமா' கொடுத்து வலியைச் சமனப்படுத்துவார்கள்.

உண்மையான பிரசவ வலி, இடுப்பு பகுதியில்தான் தோன்றும். பொய் வலியோ, வயிற்றுப் பகுதியில் ஏற்படும். பொய் வலி குறிப்பிட்ட கால அளவுப்படி இல்லாமல் தாறுமாறாக இருக்கும்.

வலி ஏற்படும் போது வயிறு இறுக்கமடைவது உண்மை வலியின் நியதி பொய் வலியின் போது இந்த அறிகுறி தோன்றாது. இம்மாதிரியான அறிகுறிகளை கவனத்தில் கொண்டு, உண்மையான வலியை நிச்சயமாக நிர்ணயித்துத் தக்க நேரத்தில் கர்ப்பிணிகளுக்கு மருத்துவ வசதி கிடைக்குமாறு ஏற்பாடு செய்ய வேண்டும்.

பிரசவதிற்குப் பிறகு அவசரப்பட்டு. உடனே கெட்டியான உணவு வகைகளைக் கொடுத்துவிடக் கூடாது. திரவ ஆகாரம் கொடுப்பது தான்நலம். ரொட்டிபோன்றவற்றை மிகவும் குறைவாகத் தரலாம். பிரசவத்திற்குப் பிறகு தாயின் உடலில் ஜீரண சக்தி மிகவும் பலவீனமான நிலையில் இருக்கும். அந்த நிலையில் கடினமான உணவு வகைகளைக் கொடுத்தால், அது அவளுடைய உடல்நிலையை மிக மோசமாக்கிவிடும்.

பிரசவமான சில நாட்கள் வரை, தாயின் வயிறு எந்த அளவுக்கு மென்மையாகவும், கனமில்லாமலும் இருக்கிறதோ அந்த அளவுக்குத் தாய்க்கு உடல் நலம் மிகவும் சரியாக இருக்கும். எந்த நோயும் அவளை அண்டாது பிரவசத்திற்குப் பிறகு சிறுநீர் தாராளமாக இறங்க வேண்டும். இவ்விஷயத்தில் எவ்விதச் சிக்கலுமின்றி பார்த்துக் கொள்ள வேண்டும். தாயின் உடலுக்குள் பல்வேறு வகையிலும் தேங்கியிருக்கும் அசுத்த, நச்சுப் பொருட்கள் சிறுநீர் மூலமாகத்தான் வெளியேற வேண்டும் தவிர இரத்தம் வளம் பெறவும், சுத்தமடையவும், சிறுநீர் தாராளமாகக் கழிவது அவசியமாகும்.

**பெண் விடுதலைப் போராளிகள்**

வீட்டு  
விளக்கேற்றும்  
பெண்கள் அல்ல  
விடுதலை  
துவக்கேந்தும்  
பெண்கள்!  
அடுப்பூதும்  
குழல்கள் அல்ல  
நெருப்பு  
அனல் கக்கும்  
குழாய்கள்.  
குடத்துள் ஒளிரும்  
குத்து விளக்கா?  
இல்லை...இவர்கள்  
கொடுமை கண்டு  
கொதிக்கும்  
எரிமலைக்  
குழம்புகள்!  
பூவிலும் மெல்லிய  
பூங் கொடியா?  
அல்ல இவர்கள்  
புரட்சி வெடிக்கும்  
பூகம் பங்கள்?  
நிலவின் குளிர்மை  
கொண்டவர்களா?  
இல்லை...இல்லை...  
சூரியனையே சுட்டெரிக்கும்  
சுடர்கள்......  
சேலை கட்டிய  
கூட்டங்கள்–அல்ல  
செந்தணல்  
தீ நாக்குகள்!  
வெறு மனே  
பெண்கள் அல்ல–பெண்  
விடுதலையின்  
வெற்றித் திலகங்கள்  
விளக்கில் எரியும்  
விட்டில்கள் அல்ல  
பெண் இனத்தின்  
விடி வெள்ளிகள்!!

ஊரெழு தர்ஷினி

# இவர் இருக்கவேண்டியஇடம்..?

இப்போது சிலநாட்களாக அவர் பிரமை பிடிததவர் போலானார்! எவ்வளவு கலகலப்பான மனிதர்! இவருக்கு இப்போது என்ன நேர்ந்து விட்டது?

சரியான உணவு இல்லை, உறக்கம் இல்லை. அதிகாலையில் எழுந்தவுடன் யாருடனுமே கதைக்கமாட்டார். விறுவிறுவெனப் புறப்பட்டு வேலைக்குச் சென்றுவிடுவார். மாலையில் வீடு வருவார். தேநீர் கொடுத்தால் குடிப்பார். இல்லாவிட்டால் முற்றத்தில் போடப்பட்ட அந்த ஈசிச்சியாரில் சாய்ந்த வண்ணம் வேலியையோ, ஆகாயத்தையோ ... முற்றத்தில் நிற்கும் அந்த ஒற்றைப் பனையையோ வெறித்துப்பார்த்தபடி இருப்பார்.

ஊர்ச் சனங்களுககு இவர் போக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது! மனைவி மக்களுக்கோ அவரின் நிலை ஏக்கத்தைக் கொடுத்தது! சில வேளைகளில் மனைவி அருகில்போய் "உங்களுக்கு என்னப்பா ..? ஏன் இப்படி இருக்கிறியள்?" என்று கேட்டால "எனக்கு ஒண்டுமில்லைப்போ" என்ற பதிலைத்தவிர வேறொன்றும் அவர் வாயில் இருந்து வராது.

ஏன் இப்படி ஆனார்? எதற்காக இப்படி ஆனார் ம்... அவர் போக்கு புரியாத புதிராகவே இருந்தது.

"வாருங்கோவன் ஒருக்கா டொக்டரிட்டை காட்டிப் பாப்பம்" மனைவியானவள் இப்படிக்கேட்டால் அதற்கு அவர் மனைவியை திரும்பி முறைத்துப் பார்த்துவிட்டு மீண்டும் வானத்தை வெறித்துப்பாப்பார்.

இப்படியே இவரை விட்டால் நிலைமை மோசமாகி விடும் என்பதை உணர்ந்த மனைவி மக்கள் அருகில் உள்ள டொக்டர்ஒருவரை அழைத்து வந்து இப்போது சிலநாட்களாக இவரின் நிலையைப் பற்றி விளக்கிக் கூறினார்கள்.

**பிரச்சனைக் கதை இது**

டொக்டர் இவர் அருகில் வந்தார்.

"ப்பிளீஸ்... கொஞ்சம் உள்ளே வருகிறீர்களா?"

வந்தார்

"இந்தக் கட்டிலில் படுக்கிறீர்களா?"பேச்சுமூச்சுக் கிடையாது படுத்தார். டொக்டர் அவரைப் புரட்டிப் புரட்டிச் சோதனை செய்தார். உடல் பகுதியில் எந்தவிதமான மாறுதலும் இல்லை. அப்படியானால்... டொக்டர் மூளைப்பகுதிக்கு வந்தார் ம்... அங்கேயும் எதுவித மாற்றமும் இல்லை. மூளைப்பகுதியும் சரியாகவே இயங்கிக்கொண்டிருந்தது. அப்படியானால்... இவருக்கு என்ன வியாதி ? டொக்டருக்கே ஆச்சரியம்! தனக்கே பிடிபடாத அந்த நோய் எதுவாக இருக்கும்... என்ற சிந்தனையில் பக்கத்தில் உள்ள கதிரையில் பெருமூச்சுடன் அமர்ந்தார்.

அப்போது ..

இருந்தாற்போல் தூரத்தில் ஒரு பாரிய வெடிச்சத்தம். அந்தச் சத்தத்தைக் கேட்டு டொக்டர் உட்பட மனைவி மக்கள் எல்லோரும் ஏங்கிப் போக... இவர் மாத்திரம் படுக்கையில் இருந்து துள்ளிக் குதித்து எழுந்தார். அவர் முகத்திலே மகிழ்ச்சி ரேகைகள் வேகமாகப் பரவத் தொடங்கின. ஆனந்தத்துடன் மனைவி மக்களைப் பார்த்தார் பேசத்தொடங்கினார்.

"டொக்டர்! எனக்கு என்ன வியாதி என்று உங்களால் கண்டுபிடிக்க முடியவில்லையல்லவா? இதுதான் என் வியாதிக்குக் காரணம். இந்தக் குண்டுச் சத்தங்கள் அடிக்கடி கேட்காமல் இருப்பதால்தான் நான் இப்படியானேன். நாங்கள் முன்பெல்லாம் படுக்கைக்குப் போகும் போது ஏதாவது ஒருவெடிச் சத்தத்துடன் தான் நித்திரை செய்கிறோம். கனவிலும் இதே சத்தங்கள்தான். அதிகாலையில் துயில் கலையும்போதும் டும்! டும்...டுமீல்! என்ற சத்தங்கள் கேட்டால்தான் நித்திரை விட்டெழுந்து அன்றட கடமைகளை கவனிக்கப் புறப்படுகிறோம். இப்போதெல்லாம் இந்தச் சத்தங்கள் கேட்பது குறைவு. அதுதான் எனக்குப் பயமாக இருக்கிறது. அதனால்தான் நான் இப்படியானேன். அப்போதெல்லாம் குண்டுச் சத்தங்களை வாழ்க்கையாகி– வாழ்க்கையே குண்டுச் சத்தங்களாகி வாழ்ந்து பழகிவிட்டேன். அந்த வாழ்க்கையில் இருந்து என்னால் விடுபடமுடியவில்லை; இனிமேல் என்னால் இப்படியான சத்தங்கள் கேட்காமல் நிம்மதியாக வாழமுடியாது .." விறுவிறுவென தன் வியாதியின் காரணத்தை டொக்டருக்குக் கூறிமுடித்தார்.

டொக்டர் சிறிதுநேரம் சிந்தித்தார். தனது கைப்பையில் இருந்து சிறு காகிதத்துண்டை எடுத்தார். இரண்டே இரண்டு வரிகளை எழுதிவிட்டு அவர் மனைவியிடம் கொடுத்து இவரின் நோய்க்குப் பரிகாரம் இதில் உள்ளது. உடனடியாக இதை அமுல் படுத்தவும்.

மனைவி அந்தச் சிறுதுண்டை வாங்கி உரத்துப் படித்தாள் "இனிமேல் இவரால் வட பகுதியில் நிம்மதியாக வாழ முடியாது. இவர் இருக்க வேண்டிய இடம் தென்பகுதி தான்".

★ குமார் தனபால்



## நாளை காந்தி நினைவுதினம்

அண்ணல் காந்தி ஒரு யுக புருஷர். அற்புதமான செயற்கரிய செயல்கள் பல நிகழ்த்திய அவதார புருஷர். தீர்க்கதரிசனமான கோட்பாடுகளை முன்வைத்த சிந்தனையாளர். மனிதநேயத்தை அவாவிய அகிம்சாவாதி. ஏழைகளின் உள்ளங்களை நன்குணர்ந்த ஏழைபங்காளர். எத்தகைய எதிர்ப்பின் மத்தியிலும் உண்மைக்காகப் போராடிய சத்தியசீலர். சமுதாயத்தில் புரையோடிப் போயிருந்த மூடநம்பிக்கைகளைச் சாடிய சீர்திருத்தவாதி. இந்திய நாட்டின் விடுதலைக்காகத் தம்மை முழுமையாக அர்ப்பணித்த தியாகசீலர்.

### அமரத்துவமான படைப்பு

இம் மனிதகுல தெய்வமாக விளங்கிய மகாத்மாவைப் பற்றி எழுதப்பட்ட நூல்கள் பல உண்டு. அதே வேளையில் மகாத்மா தமது அனுபவங்கள், கொள்கைகள் பற்றி எழுதிய நூல்களும் பல உள. இவற்றுள் அவரின் சுயசரிதையாகிய சத்தியசோதனை ஓர் அரிய படைப்பாகும். இந்நூல் ஆங்கிலம், தமிழ் மற்றும் சில பிறமொழிகளிலும் ஆயிரக்கணக்கான பிரதிகளாக வெளிவந்துள்ளன. காந்தியடிகளின் உள்ளத்தை உள்ளவாறு உணர்ந்து கொள்வதற்கு இவரது சத்திய சோதனையை ஒவ்வொருவரும் படித்தல் வேண்டும். இந்நூல் வயது முதிர்ந்தவர்கள் மட்டுமன்றி குழந்தைகள் புரிந்து கொள்ளக் கூடிய பல விஷயங்களையும் அறிவுரைகளையும் அடக்கியுள்ளது. அவை யாவற்றையும் இங்கு குறிப்பிடுவது எளிதல்ல. பொதுவாகப் பெரியவருக்கும் குறிப்பாக இளம்பிராயத்தினருக்கும் பயன்படக் கூடிய சில கருத்துக்களை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்காகும். காந்திஜியின் சத்திய சோதனை என்னும் சுயசரிதை நூலை இதுவரை படித்திராத பலருக்கு இக்கட்டுரை திறவுகோலாக அமையும் என்பது எனது நம்பிக்கை.

சத்தியசோதனை வெறுமனே காந்தியடிகளின் சுயசரிதை என்று கருதிவிடமுடியாது. அது அவர்தம் வாழ்க்கை பூராகவும் நடத்தி வந்த சத்தியசோதனைகள் பலவற்றால் பெற்று வந்த அனுபவ வெளிப்பாடாகும். எனவே தான் அடிகளார் தமது நூலின் முன்னுரையில் 'கொள்கைகளைப் பற்றிய சித்தாந்தங்களை மட்டுமே விவாதிப்பது என்றால், நான் சுயசரிதை எழுதும் முயற்சியில் இறங்கியிருக்க வேண்டியதே இல்லை. ஆனால் எனது நோக்கமோ இக்கொள்கைகள், நடைமுறையில் பல வகையிலும் அனுசரிக்கப்பட்டு வந்திருப்பதன் வரலாற்றைக் கூறுவதாகும். அதுவே நான் எழுதப்போகும் இந்த அத்தியாயங்களுக்கு 'நான் செய்த சத்திய சோதனையின் கதை' என்று தலைப்புக் கொடுக்கிறேன். அகிம்சை, பிரமச்சரியம் முதலிய ஒழுக்க நெறிகளைப் பற்றிய சோதனைகளும் இவற்றில் அடங்கியிருக்கும்' என்று தமது சுயசரிதை பற்றிய நோக்கினையும் போக்கினையும் இரத்தினச் சுருக்கமாக விவரித்துள்ளார்.

சாதாரணமாக உலகில் தோன்றிய பெரிய மகான்கள் பற்றிக் காலப்போக்கில் கற்பனைக் கதைகளும் கட்டுக்கதைகளும் வந்து சேர்ந்து விடுவதுண்டு. ஆனால் காந்தியடிகள் தமது சுயசரிதையை எழுதியுள்ளபடியால் இத்தகைய உண்மைக்குப் புறம்பான கதைகள் அவர் பற்றி எழ இடமில்லாமல் போய் விட்டது. தமது முன்னுரையில் 1925ஆம் ஆண்டெனக் குறிப்பிட்டிருப்பதால் இவ்வாண்டோடு சுயசரிதையை முடித்துள்ளார் என்றே கொள்ள வேண்டும். இதற்குப் பின் அவர் வாழ்க்கை பற்றி அறிந்து கொள்வதற்குப் பிற ஆதாரங்கள் துணை புரிகின்றன

### சத்தியசோதனைகள்

காந்தியடிகள் தமது நூலில் எடுத்துக் காட்டியிருக்கும் சத்தியசோதனைகளும் அவற்றின் மூலம் அவர் எமக்கு உணர்த்தும் அறிவுரைகளும் நுணுகி ஆராயப்படுதல் பயன் தரும். அவர் தமது முன்னுரையில் 'இனி வரும் அத்தியாயங்களில் ஆங்காங்கே காணப்படும் புத்திமதிகள் அதிகாரபூர்வமானவை என யாரும் கருதிவிடமாட்டார்கள் என்றே நம்புகின்றேன். அப்படிக் கருதிவிடக் கூடாது என்பதே என் பிரார்த்தனையாகும். கூறப்பட்டிருக்கும் சோதனைகளை உதாரணங்கள் என்றே கொள்ள வேண்டும். அவற்றை அனுசரித்து ஒவ்வொருவரும் தத்தம் நோக்கப்படியும் தகுதிக்கு ஏற்றவாறும் சொந்தச் சோதனைகளை மேற்கொள்ளலாம். இந்தக் குறிப்பிட்ட அளவு வரையில் இந்த உதாரணங்கள் உண்மையில் பயனுள்ளவையாகும் என நம்புகிறேன்' என்று தமது நூலின் பயன்பாடு பற்றி விளக்கியுள்ளார். இதிலுள்ள தனித்தன்மை யாதெனில் அவர் தமது குறைகளையும் நிறைகளையும் எவ்வித ஒளிவுமறைவுமின்றி உள்ளதை உள்ளபடி எடுத்துரைத்திருப்பதாகும்.

# மனிதகுல மேம்பாட்டுக்கு புனிதர் காந்தியின் போதனை

**சி. நு. இராஜேந்திரன் பி.ஏ.எம்.எட்**

### ஒழுக்கமே விழுப்பம் தரும்

காந்திஜியின் இளமைப் பருவ வாழ்க்கையே அவரது பிற்கால வாழ்க்கைக்கு அடித்தளமாக அமைந்தது. அவர் ஏழு வயதாயிருக்கும் போது ஆரம்பப் பள்ளிக் கூடத்தில் சேர்ந்து படித்த போதிலும் படிப்பில் ஆர்வம் காட்டவில்லை. பள்ளியில் படித்ததை விட நாடகங்கள் மூலம் கற்றுக் கொண்டதே அதிகம். அவர் பார்த்த நாடகங்களில் 'சிரவண பித்ருபத்தி நாடகம்' என்பதுஒன்றாகும்கண்ணிழந்த தம் முதிய பெற்றோரைச் சிரவணன் என்பவன் காவடியில் வைத்துத் தூக்கிச் சென்றமையும் சிரவணன் இறந்ததால் புத்திர சோகத்தோடு பெற்றோர் வருந்திப் பிரலாபித்ததும்மோகனதாஸ் காந்தியின் இளம்உள்ளத்தை உருக்கிவிட்டது. தாம் பின் பற்றுவதற்கு இது ஒரு சரியான உதாரணம் என்று தமக்குத்தாமே கூறிக்கொண்டார். ஒவ்வொரு மகனும் இப்படித்தான் பெற்றோருக்குச் சேவை செய்ய வேண்டுமென விரும்பினார். தம் இளம் பிராயம் முழுவதும் பெற்றோர் சொற்படியே நடந்து எண்ணியபடி வாழ்ந்து காட்டினார். இவரது மனத்தில் ஆழப் பதிந்து கொண்ட மற்றொரு நாடகம்' அரிச்சந்திரன்' நாடகமாகும். 'அரிச்சந்திரனைப் போல் எல்லோரும் ஏன் சத்தியசீலர்களாக ஆகக் கூடாது' என்று அல்லும் பகலும் தமக்குள் தாமே கேட்டுக் கொண்டார். தம் வாழ்நாள் முழுவதும் சத்திய விரதத்தை இவர் மேற்கொள்வதற்கு இது தூண்டுகோலாக அமைந்தது. அரிச்சந்திரனைப் போல் மகாத்மாவும் சத்தியத்திற்காகப் பல தியாகங்களைச் செய்தார்; பல இன்னல்களை அனுபவித்தார்.

இவ்வாறு இளமையிலேயே மகாத்மாவுக்குச் சத்தியத்தில் ஏற்பட்ட பற்றுதலும் நம்பிக்கையும் அவரைப் பல தீங்குகளிலிருந்து காப்பாற்றியது. ஒரு முறை கல்வி இலாகாவைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் அவர் படித்த பள்ளிக்கு வந்திருந்தார். ஆங்கிலத்தில் எழுத்துக்கூட்டி எழுதுவதற்கென சில சொற்களை அவர் கொடுத்தபோது ஒரு சொல்லை மோகனதாஸ் காந்தி தவறாக எழுதிவிடவே அதைக் கவனித்த வகுப்பாசிரியர் பக்கத்துப் பையனைப் பார்த்துச் சரியாக எழுதும்படி சைகை செய்தார். பிள்ளைகள் 'காபி' அடிக்காமல் பார்த்துக்கொள்வதற்காகவே ஆசிரியர் இருக்கின்றாரே தவிர அதைத் தூண்டுவதற்காகவல்ல என்று எண்ணிக் கொண்டார். அச்சிறுவயதில் கூட நேர்மையற்ற செயலைச் செய்வதற்கு அவர் மனம் ஒருப்படவில்லை. அதே போன்றே புகைபிடித்தல், திருடுதல் எத்தகைய பாதகமான குற்றங்கள் என்பதை அனுபவவாயிலாக அறிந்து கொண்டார். நாம் ஒவ்வொருவரும் பெறும் அறிவுக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுக்காது சீலத்திற்கே முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்பதை இந் நிகழ்ச்சிகள் துல்லியமாக எடுத்துக் காட்டுகின்றன

மோகனதாஸ் காந்திக்குத் தாயின் மடியே பாடசாலை. அவரது அன்னை புத்திரிபாய் சொல்லிக்கொடுத்த இராமாயண, பாரதக்கதைகளை மந்திரோபதேசமாய்க் கேட்டுக் கொண்டார். தாய் சொல்லைத் தட்டவோ, அவர் மனதைப் புண்படுத்தவோ கூடாதென்ற எண்ணம் அவருக்கிருந்தது.' புலாலுண்ணேன், மதுபானம் அருந்தேன்' என்று தாய்க்குக் கொடுத்த வாக்கை பரிஸ்டர் பட்டம் பெறுவதற்காக இலண்டன் சென்ற சமயத்தில் வெகு சிரமப்பட்டுக் காப்பாற்றிக் கொண்டார்.

### மாணவருக்கு அறிவுரைகள்

காந்திஜி உயர் பள்ளியில் படித்த காலத்தில் உடற்பயிற்சியிலோ வேறு விளையாட்டுக்களிலோ ஈடுபாடு காட்டாது ஒதுங்கியே இருந்தார். இதற்கு அவரிடம் இயல்பாக இருந்த கூச்சமே காரணமாகும். படிப்பிற்கும் தேகப் பயிற்சிக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை என்று கூடத் தவறாக நினைத்தார் ஆனால் பின்னர் அது தவறென்பதை உணர்ந்து பாடத்திட்டத்தில் மனப் பயிற்சிக்கு மட்டுமன்றி உடற்பயிற்சிக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டுமென்பதை வலியுறுத்தினார் உடற்பயிற்சியில் ஈடுபடாத போதிலும் நீண்ட நேரம் நடக்கும் பழக்கத்தை அவர் இளமையிலிருந்து முதுமைவரை கிரமமாக ஏற்படுத்திக்கொண்டதால் அவர்உடல் நன்கு வலுப்பட்டது. மாணவர் மத்தியில் உடற்பயிற்சியின் இன்றியமையாமையை எப்பொழுதும் வலியுறுத்தி வந்தார்.

தமது மோசமான கையெழுத்தை நினைத்து வருந்திய காந்திஜி ''ஒவ்வோர் இளைஞரும், இளம்பெண்ணும் தன்னுடைய உதாரணத்தைக் கண்டாவது எச்சரிக்கையுடன் இருக்கட்டும்; கையெழுத்து நன்றாக இருக்க வேண்டியதும் படிப்பின் ஒருபகுதியென்பதை அறியட்டும். குழந்தைகளுக்கு எழுத்துக்களை எழுதுவதற்குக் கற்றுக் கொடுப்பதற்கு முன்னால் சித்திரம் வரையக் கற்றுக்கொடுக்கவேண்டும் என்று இப்பொழுது கருதுகிறேன் பூக்கள், பறவைகள் போன்றவைகளைக் குழந்தை பார்த்துத் தெரிந்து கொள்ளுவதைப் போல, எழுத்துக்களையும் அது பார்த்தே தெரிந்து கொள்ளட்டும். பொருள்களைப் பார்த்து அவற்றை வரையக் கற்றுக் கொண்டபிறகு எழுத்துக்களை எழுதக் கற்கட்டும் அப்பொழுது அக் குழந்தையின் கையெழுத்து அழகாக அமையும்'' என்ற ஆக்கபூர்வமான கல்விச் சிந்தனையை வெளிப்படுத்தினர். எமது பள்ளிச் சிறுரும் ஆசிரியரும் இதனைக் கருத்திலெடுப்பது பயனுள்ளதாகும்.

### சமயச் சிந்தனை

காந்திஜியின் ஏழாவது வயதிலிருந்து பதினாறும் பிராயம் வரை பள்ளிக்கூடப் படிப்பின் போது சமய அறிவு அவருக்குப் போதிக்கப்பட்ட போதிலும் அனுபவர்தியாக அவர் பெற்றுக்கொண்ட சமய அறிவே அவர் வாழ்க்கையில் நிலைத்தது. சிறுவயதிலிருந்தே பேய் பிசாசுகளின் பயம் அவருக்கு இருந்தது. வைஷ்ணவரான இவருக்கு என்றும் ஆதரவாக இருந்த செவிலித்தாயாக விளங்கிய ரம்பா என்பவர் ராமநாமத்தைத் திரும்பத் திரும்ப உச்சரிப்பதே அப்பயத்தைப் போக்குதற்கு மருந்தென உரைத்தார். அப்பெண்மணி விதைத்த விதையினால் ராமநாமம் காந்திஜியின் இறுதி வாழ்க்கைவரைபொய்க்காத அருமருந்தாக இருந்து வந்தது. இவ்வாறு அவர் இராம பக்தியில் ஈடுபட்ட போதிலும்' எல்லா மதங்களும் கடவுளுக்கு உகந்த மதங்களே' என்று உணர்ந்து கொண்டார். இத்தகைய உயர்ந்த சமய சமரசக் கோட்பாட்டினை இவர் வலிந்து ஏற்றுக் கொள்வதற்கு இவருக்கு உறுதுணையாக இருந்தது இவர் படித்த ஓர் அற்புதமான குஜராத்திமொழிப் பாடலாகும்.

இங்கிலாந்தில் இருந்தபோது இவர் படித்த பகவத்கீதையிலுள்ள சுலோகங்கள், எட்வின் ஆனல்டின் 'ஆசிய ஜோதி' என்ற புத்தர் பெருமானின் சரித்திரம் புதிய ஏற்பாட்டிலுள்ள இயேசுநாதரின் மலைப் பிரசங்கம் முதலியன இவரது சமய சமரச சிந்தனைகட்கு உரமூட்டின

### எளிமை வாழ்வு உயர்ந்தது

மக்கள் எவ்வளவு தான் செல்வம் நிறைந்தவராக இருந்த போதிலும் எளிமையான வாழ்க்கை வாழவேண்டுமென்று காந்திஜி விரும்பினர் இங்கிலாந்தில் வாழ்ந்த காலத்தில் இத்தகைய எளிமையான வாழ்க்கையை வாழ்ந்தார் ஆடம்பரத்தில் விருப்புடையவன் அறநெறியில் நடக்க முடியாதென்பது அவரது கருத்தாகும் இங்கிலாந்தில் தமது போக்குவரத்துச் செலவினைக் குறைப்பதற்காக வண்டியில் பிரயாணம் செய்வதைக் குறைத்து தினமும் எட்டு அல்லது பத்துமைல் வரை நடந்து தம் பணிகளைச் செய்தார். இதனால் இங்கிலாந்தில் இருந்த வரை தமக்கு எவ்வித நோயுமில்லாதிருந்ததோடு உடலும் உரம் பெற்றதாகக் கூறியுள்ளார். அத்துடன் தமது உணவையும் தாமே தயாரித்துக் கொண்டார். அவர் தாம் வாழ்ந்த எளிமையான வாழ்க்கையினால் எத்துணை இன்பம் அடைந்தார் என்பதை '' ..இத்தகைய மாறுதல் என் அக வாழ்வையும் புறவாழ்வை

... 14 ஆம் பக்கம் பார்க்க

## திருவள்ளுவர் அருளிய திருக்குறளின் சிறப்பு

உலகின் மிகச்சிறந்த, அறநெறி மறையாக - தமிழ் தர்மசாஸ்திரமாகத் திருக்குறள் கருதப்படுகிறது. ஈராயிரம் ஆண்டுகளுக்குமுன்பு திருவள்ளுவ முனிவர் வாழ்ந்தார். அவரியற்றிய திருக்குறள்-ஒருநல்ல பண்புள்ள வாழ்வு வாழும் வழிமுறைகளை அளிக்கின்றது அதன் அருமையான குறட்பாக்கள் வாழ்வின் எல்லாத் துறைகளையும் சார்ந்து பரந்து அமைந்து, மனப்பாடம் செய்ய எளிமையாகவும், கேட்க அழகாகவும் உள்ளன. ஒவ்வொன்றும் மனிதப்பண்பு அல்லது தவறின் ஓர் அம்சத்தை விளக்குவதாயுள்ளது. ஒவ்வொரு அதிகாரத்திலும் பத்து குறட்பாக்கள் உள்ளன. ஓர் வைரத்தின் பட்டைகளைப் போன்று அனைத்தும் அவரது அறிவொளியைப் பல கோணங்களில் உருக்காட்டி, நமது அறிவு உணர்வுகளை வளப்படுத்துகின்றன. இம்முறையில் சரியை மார்க்கத்தின் ஓர் விரிவான விளக்கத்தை திருக்குறள் அளிக்கின்றது. ஆதலின் இதனைச் சரியை வேதமாகவும் கருத முடியும் ஒரு முக்கிய சமய வேதமாக இருப்பதோடு, தமிழ் மொழியின் மிகச்சிறந்த இலக்கியமாகவும் அது போற்றப்படுகின்றது சைவஇந்து சமயப் புனித வேதத்தின் ஒரு பாகமாகவே திருக்குறள் விளங்குகிறது. ''நீங்கள் உங்களை அறிந்து கொண்டாக வேண்டும். நீங்கள் படிக்க வேண்டும் என்ற தேவையில்லை. படிப்புங்கூட யோகமேயாகும். திருக்குறளை நன்கு படியுங்கள்'' என்று பரமகுரு சிவயோகசுவாமி நமக்குப் போதித்துள்ளார்.

தொகுப்பு:க. கனகராசா
ஆதாரம்-''திருநெறி''

# காந்தி அடிகள்

மகாத்மா காந்தி இந்தியாவில் உள்ள போர்பந்தல் எனும் இடத்தில் 1869 ஆம் ஆண்டு ஐப்பசிமாதம் 2ம் திகதி பிறந்தார். இவரது தந்தையார் பெயர் கபாகாந்தி. தாயார் பெயர் புத்திரிபாய்.

காந்தி பட்டப்படிப்புப் படிக்க இங்கிலாந்து சென்றார் அப்போது இவருடைய தாய் இவரிடம் மது அருந்தாதே, மாமிசம் உண்ணாதே, மாதுவைத் தொடாதே எனும் மூன்று சத்தியங்கள் வாங்கினார். இவர் இச் சத்தியங்களை தனது கடைசிக்காலம் வரை காப்பாற்றினார்.

இவர் தமது படிப்பை முடித்துக்கொண்டு இந்தியா திரும்பித் தொழில் புரிந்தார். கடமையின் நிமித்தம் 1902 ஆம் ஆண்டு இவர் தென்னாபிரிக்கா செல்லவேண்டி இருந்தது. அப்போது அங்கு ஆங்கிலேயரே ஆட்சி நடாத்தினர். கறுப்பு இன மக்கள் வெள்ளை இனத்தவரால் துன்புறுத்தப்பட்டனர். அவர்களை ஆங்கிலேயர் மிக இழிவாக நடத்துவதைக் கண்டு மனம் கொதித்தார். அவர்களின் அடிப்படை உரிமைக்காக 1906 ஆம் ஆண்டில் இருந்து 1915 ஆம் ஆண்டு வரை ஆங்கிலேய ஆட்சிக்கெதிராகப் பல போராட்டங்கள் நடத்தினார். எல்லாப் போராட்டங்களும் சாத்வீக முறையிலேயே நடத்தப்பட்டன. வெற்றியுடன் தாயகம் திரும்பிய அவருக்கு இந்தியமக்கள் மகத்தான வரவேற்பு அளித்தனர். அப்போது இந்தியாவையும் ஆங்கிலேயரே ஆட்சி செய்தனர். அரசியல் விடுதலையை விரும்பிய இந்திய மக்கள் அவரை தலைவராக ஏற்றுக் கொண்டனர்.

அவரது தலைமையில் உண்ணாவிரதம், சட்ட மறுப்புப் போன்ற சாத்வீக போராட்டங்களை நடத்தினர். இதனால் மகாத்மா அடிக்கடி சிறை சென்றார்.

பிரித்தானிய அரசாங்கம் 1947 ஆம் ஆண்டு அடிபணிந்தது. இந்தியா சுதந்திரமடைந்தது முஸ்லிம் மக்களுக்கும், இந்து மக்களுக்கும் இடையில் போராட்டங்கள் ஆரம்பித்தன. இவர்களை ஒற்றுமையாக இருக்கும்படி வேண்டி உண்ணாவிரதத்தை மேற்கொண்டார். இவர் பிரார்த்தனை நடத்தச் சென்றபோது இவரை கோட்ஸ்சே சுட்டுக் கொன்றான்.

★ பாலகிருஷ்ணா
(அங்கத்தவர் இலக்கம் 18)

## முரசொலி பூந்தோட்டம்
### அங்கத்தவர் பத்திரம்

முழுப்பெயர்: ..............................

வயது: ..............................

பாடசாலையின் பெயர்: ..............................

கல்விகற்கும் வகுப்பு: ..............................

வீட்டு முகவரி: ..............................

கையொப்பம்: ..............................

மேலுள்ள விபரங்கள் சரியானவை என்று உறுதி கூறுகின்றேன்.

.................... ..............................

திகதி பெற்றார் / வகுப்பாசிரியர் கையொப்பம்

(பதினான்கு வயதுக்குட்பட்டவர்கள் மாத்திரம் உறுப்பினராகலாம். மூன்று பத்திரங்களை ஒன்றாக நிரப்பி அனுப்ப வேண்டும்)

# பட்டம் பறக்குது!

பட்டம் பறக்குது பட்டம் பறக்குது
பார்க்க வாரும் தம்பி தங்கையரே,
எட்டு மூலைப்பட்டம் என்னுடைய பட்டம்
ஏறி நின்றாடுது பாரும் பாரும்.

கொக்குப் பட்டமது கோமதியின் பட்டம்
கொண்டு வாருமதை ஏற்றி டுவோம்
பக்குவ மாயதைப் பாலன் பிடித்திடப்
பரந்தாமன் நூல்பிடித் தோடட் டுமே!

வாடைக் காற்று இப்போ வாய்ப்பாக வீசுது
வண்ணப் பட்டம் பல பறக்குதங்கே
கோடைக் காலம்வரச் சோழகம் வீசுமே
கொடிகளை ஏற்றிட வாரும் இங்கே.

என்னுடைய பட்டம் விண்கூட்டி விட்டதால்
இரைந்து கொண்டு நின்று ஆடுதங்கே
இன்று இருள்வர வலித்து இறக்கியே
இன்பமாய் வீட்டுக்குச் சென் றிடுவோம்.

★ விழிசைச்சிவம்




## விலங்குகள் விதம் விதம்:-16

# உராங் உடாங்

உராங் உடாங் என்ற விலங்கு மனிதக் குரங்கு இனத்தைச் சார்ந்த ஒரு சோம்பேறி விலங்கு. மர உச்சிகளில் வாரக்கணக்காக கும்பகர்ணன் தூக்கம் போடும்.

உயர்ந்த மரங்களில் 40 அல்லது 60 அடி உயரத்தில் வசதியான கொப்பைப் பிடிக்கும். பிடித்த கிளைகளில் மரக்கிளைகளாலும், இலைகளாலும் பரண் அமைத்துத் தூங்கும். இந்த உராங் உடாங் தூங்கினால் அது விழிப்பது எப்போது தெரியுமா? அதுபடுத்திருக்கும் இலை, கிளைகள் காய்ந்து அதன் உடலை உறுத்தும் போதுதான். தூக்கத்தில் விழாதிருக்க தன் கை கால்களை கிளைகளில் மாட்டிக் கொள்ளும்.

இந்த உராங் உடாங் குரங்கின் கால்கள் குட்டையானவை கைகள் அதிநீளமானவை அதனால் இது நடக்கும் வேளையில் கைகளை மேலே தூக்கிய வண்ணமே செல்லும்.

இதன் தோலின் தடிப்பு அதிகம். அடர்ந்த முடி இதன் தோலை மூடியிருப்பதால் எச்சிதோஷ்ண நிலையையும் தாங்கும் வல்லமை கொண்டது. இதன் உயரம் 4 அடியாகும்.

இக் குரங்கால் எவ்வித ஆபத்தும் கிடையாது ஏனென்றால் இதற்கு எப்போதும் தூக்கக்கலக்கம் தான்.

தனிமையிலே இனிமை காணும் இந்த உராங் உடாங்குகள் சுமாத்திரா, போர்ணியோ, மலேசியாக் காடுகளில் வாழ்கின்றன.

★ தி. தவபாலன்

## பூந்தோட்டம் அங்கத்தவர்கள்

இலக்கம் 181 சுப்பிரமணியம் திருவேணி
வயது12, வட இந்து மகளிர் கல்லூரி
பருத்தித்துறை

இலக்கம் 182 சுமங்கலி சுவாமிநாதன்
வயது 10, விக்னேஸ்வரா கல்லூரி
கரவெட்டி

இலக்கம் 183 ஊர்மிளா மனோகரன்
வயது 11, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி

இலக்கம் 184 வேலாயுதம் பவதீஸ்வரன்
வயது 13, கோபாலபுரம் அரசினர் த. க. பாடசாலை,நிலாவெளி திருகோணமலை

இலக்கம் 185 செல்வராசா நிசாகரன்
வயது 13, மட்டுவில் மகாவித்தியாலயம்,
சாவகச்சேரி

இலக்கம் 186 சோமசுந்தரம் குகானந்தன்
வயது 13, மகாஜனா கல்லூரி
தெல்லிப்பழை

இலக்கம் 187 யேசுதாசன் மேரி விஜித்தா
வயது 09, சென்ற் ஜேம்ஸ் மகளிர்
பாடசாலை, குருநகர்

இலக்கம் 188 குணரெத்தினம் செந்தூரன்
வயது 08, யாழ். இந்து ஆரம்ப
பாடசாலை, வண்ணார்பண்ணை

இலக்கம் 189 ஜெயந்தி நடராசா
வயது 11, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி

இலக்கம் 190 இ. தருமானந்தம் உமாகரன்
வயது 08, உடுவில் முருகமூர்த்தி
வித்தியாசாலை,

## தாவரவியற் பெயர்

| பொதுப்பெயர் | | தாவரவியற் பெயர் |
|---|---|---|
| தக்கு | — | ரெக்ரோனா கிரண்டிஸ் |
| மூக்குத்திப்பூண்டு | — | திரைடெக்ஸ் புரோக் கம்பை ன்ஸ் |
| ஆகாயத் தாமரை | — | பிஸ்ரியா |
| இருதய மலர் | — | அன்ரிக்கோனன் |
| மணிவாழை | — | கனா இண்டிக்கா |
| பூவரசு | — | தெஸ்பீசியா |

★ செ. தயாபரன்

## குட்டிக்கதை

# இரண்டு வரங்கள்

ஓர் ஊரிலே வேலன் என்றொருவன் வாழ்ந்து வந்தான். அவன் மிகவும் ஏழை, அவன் மிகவும் கஷ்டப்பட்டு தன் குடும்பத்தை காப்பாற்றி வந்தான்.

ஒருநாள் அவனுடைய வீட்டுக்கு ஒரு முனிவர் வந்தார். அவன் அவருக்கு உணவளித்தான். அதனால் அவர் அவனுக்கு உதவி செய்ய விரும்பினார். அவர் மூன்று மந்திரங்களைக் கூறி நீ இம் மூன்று மந்திரங்களையும் உச்சரித்துக் கொண்டு உனக்கு வேண்டிய பொருட்களைக் கேட்டால் அவை உன்முன்வரும் என்றார். இந்த மூன்று மந்திரங்களையும் இரண்டு தரம் தான் உச்சரிக்க வேண்டும் என்று கூறிச் சென்றார்.

முனிவர் சென்றவுடன் வேலன் மந்திரங்களை உச்சரித்துக் கொண்டு எனக்குத் தங்கமும், வெள்ளியும் வேண்டுமென்றான். உடனே அவன் முன் தங்கமும் வெள்ளியும் தென்பட்டன

சிறிது நேரத்தில் அவன் மனதிலே ஒரு பயம் வந்தது. இதைக் கள்வர் வந்து திருடிவிட்டால் என்று அஞ்சினான். உடனே அவன் மந்திரங்களை உச்சரித்தவாறு இந்த தங்கமும் வெள்ளியும் என்னுடைய கண்ணுக்கு மட்டுமே தெரிய வேண்டும் என்றான். உடனே அந்த தங்கமும் வெள்ளியும் அவனுடைய கண்ணுக்கு மட்டுமேதெரிந்தன. அதனால் அந்த தங்கமும். வெள்ளியும் அவனுக்கு எவ்வித உபயோகமுமற்றுப் போயின.

★ சித்திரவேல் கௌரி

## நாடுகளும் பணப் பெயரும்

இலங்கை — ரூபா
இந்தியா — ரூபா
அமெரிக்கா — அமெரிக்க டொலர்
ரஷ்யா — ரூபிள்
ஜப்பான் — ஜென்
இங்கிலாந்து — பவுண்
அவுஸ்ரேலியா — அவுஸ்ரேலியா டொலர்
சவூதி அரேபியா — றியால்
ஜேர்மன் — மார்க்
பிரான்ஸ் — பிராங்
இத்தாலி — லீரா
சாம்பியா — குவாக்கா
ஓமான் — தினார்
சிங்கப்பூர் — வெள்ளி
நோர்வே — குரோணர்
எகிப்து — மில்லியன்
ஆர்ஜென்ரீனா — பெசு

★ சுரேஸ்குமார்

# இந்த வாரம் உங்கள் பலன்

யாழ்சோதிடர் ச. அரியநாயகம்

**29-1-89 -- 04 - 02 - 89 வரை**

**மேடம்:** சத்துருபயம், பெரியோர் ஆதரவு, வாகனபயம், பொருள் நஷ்டம், மாதாவழி பகை, எண்ணிய எண்ணம் தடை, காதலர் ஒன்று சேருவர், வெளிநாடு போனவர் வருகை.

**இடபம்:** பணவரவு, வாகன லாபம், புதுத்தொழில், திடீர் பயணம், இளைய சகோதரர் வழி உதவி, வணிகர்கள் கடற் தொழில் செய்வோர் லாபமடைவர்.

**மிதுனம்:** புண்ணிய வழிபாடு, வாகன நஷ்டம், இனசன வரவு, தடைப்பட்ட தொழில் கிடைக்கும், வணிகர்கள், இயந்திரத் தொழில் செய்வோர் லாபமடைவர்.

**கடகம்:** மூத்தசகோதர வழி உதவி, வாகன லாபம், பெற்ருர் சுகம், பிரிந்த காதலர் ஒன்று சேருவர், பூமியால் நன்மை, வணிகர்களுக்கு சிறப்பான வாரம்.

**சிங்கம்:** எண்ணியது நடக்கும், வாகன லாபம், மங்கள காரிய நிச்சயம், பணவரவு, கல்வியால் தொழில், புதுமனைச் சேர்க்கை, தூரதேசம் போனவர் வருகை.

**கன்னி:** வாகன நஷ்டம், பெண்களால் பகை, பெரியோர் ஆதரவு, தூரதேச பிரயாணத்தடை, வீண் செலவு, தெய்வ வழிபாடு, மாமன் வழியுதவி, இளைய சகோதரர் வழி உதவி.

**துலாம்:** திருடர் பயம், பொருள் நஷ்டம், உதவி செய்யப்போய் கெட்டபெயர் கிடைக்கும், பொருள் தடை, காரியத்தடை.

**விருச்சிகம்:** வாகன மாற்றம், மங்கள காரியம், பெரியோர் ஆதரவு, கல்வியால் தொழில், காதலர் ஒன்று சேருவர், இருதொழில்முயற்சி, தடைப்பட்ட பூமி சேரும்.

**தனுசு:** தானதரும செயல், வாகன மாற்றம், தூரத்து பிரயாணம், விவாக சோபனம், சகோதர வழியுதவி, பிதாவழி பணம், விருந்தினர் வருகை.

**மகரம்:** பெண்களால் சுகம், பெரியோரால் புகழ், கல்வியால் பாராட்டு, பிரிந்த காதலர் ஒன்று சேருவர், வாகன சேர்க்கை, தேடியவர் வீடு வருகை, மனையலங்காரம்.

**கும்பம்:** வாகன லாபம், பொதுநலசேவை, தரும சிந்தனை, பணவரவு, மாதாபிதா வழி உதவி, வணிகர்கள் கடற்தொழில் செய்வோர் பயனடைவர்.

**மீனம்:** வாகன லாபம், மனையில் மங்கள காரியம், பணப்புழக்கம், வெளியூர் வருகை, மனநிறைவு, புத்திர சுகம், மனைவி வழியால் பொருள் சேரும்.

## இன்னும் விடியவில்லை

ஓ
என் இனிய தோழிகளே
நாம் எத்தனை
எழுதித்தான் என்ன
வாயிற்று
நீங்கள்
இன்னமும்
கனவில் சிரித்தபடி
கண்ணீரில் மிதந்தபடி
''கவிஞர்''பாடல்களில்
மோகனமாய் பவனிவரும்
உங்கள்
''வாழ்க்கை''மட்டும் ஏன்
வரண்டு கிடக்கிறது
நிலவை பார்த்து
ஏங்கும் பிள்ளையாய்
உங்கள்
கன்னிமை ஆசைகள்
கனவாய் கலையும்
சுகமாய்
நீங்கள் தூங்க
அன்னைதந்த தலையணைகள்
கண்ணீரின் அணையாகும்
குயிலொடு கூவும்
இன்கு ரலாய்
நின்
குரலும் சோமாய் கூவும்
பனிமலையின்
மேல் தழுவி
பவனிவரும்
இளம் காற்றும்
உம்
இதய வெம்மைபட்டு
அனலாய் காயும்
அடக்குமுறை உடைத்து
அடுப்படியில் நீங்கி என்ன
கல்வி சாலைகளில்
காலடிகள் பதித்துமென்ன
''வாழ்க்கை''
பந்தயத்தில்
வாடித்தான் போனீர்கள்
ஓ
எம் இனிய தோழிகளே
நாம் எத்தனைதான்
எழுதி யென்ன
நீங்கள்
இன்னமும்
கனவில் சிரித்தபடி
கண்ணீரில் மிதந்தபடி

- வேலணையூர் தாஸ்


## ஆங்கிலம்

ஆங்கிலத்தில் பேசவேண்டும் என்று விரும்புகிறீர்கள். ஆனல் தவருக பேசிவிடுவோமா என்று தயக்கமாக இருக்கிறது. இதுதானே உங்களது பிரச்சனை. இனி கவலை வேண்டாம். உங்களின் பிரச்சனை மூன்றே மாதங்களில் தீர்க்க முத்திரையொட்டிய தபாலுறையுடன் தொடர்பு கொள்க.

Bright Training Centre
P. O. Box 162
Colombo 01021

## அமெரிக்காவில் வேலைவாய்ப்பு

பெண் நேர்ஸ் 50 பேர் தேவை

ஐந்து வருட அனுபவம் தேவை
சம்பளம் மாதம் ரூபா 60,000/-

பெண் B. Sc. நேர்ஸ் வெற்றிடம் உண்டு
இருப்பிடவசதி, உணவு இலவசம்
அத்தாட்சிப் பத்திரங்களுடன் உடனடியாக நேரில் வரவும்.
காலை 9 மணிதொடக்கம் பி. ப. 3 மணிவரை

**க. பரமநாதன்**

13, ஆஸ்பத்திரி வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்
நமசிவாய வித்தியாலயத்திற்கு அண்மையில் 01569

## G. C. E. (O/L) மீட்டற் பயிற்சி

1989 பெப்ரவரி சாதாரண பரீட்சைக்குத் தோற்றுவோரின் நன்மைகருதி

BRIGHT STUDY CIRCLE

தபால் மூலம் ஒரு கல்வி வட்டம் ஒன்றினை ஆரம்பித்துள்ளது. மேலதிக விபரங்கட்கு முத்திரையொட்டிய தபாலுறையுடன் தொடர்பு கொள்க.

**BRIGHT STUDY CIRCLE**
P. O. Box 162, Colombo 01030


### மனிதகுல . . .

... 12 ஆம் பக்கத் தொடர்ச்சி

யும் ஒருமைப்படுத்தியது. அத்தோடு இந்த வாழ்க்கை என் குடும்ப நிலைமைக்கும் ஒத்ததாக இருந்தது: முன்பு இருந்ததைவிட அதிமான உண்மையோடும் கூடியதாயிற்று என் ஆன்மா அடைந்த ஆனந்தத்திற்கு எல்லையே இல்லை'' என்ற வாசகங்கள் தெளிவுபடுத்துகின்றன.

### சமூகத் தொண்டு தெய்வீகமானது

மனித நேயக் கோட்பாட்டின் சிறப்பினை நன்குணர்ந்த காந்திஜி தாம் தென்னபிரிக்காவிலும் இந்தியாவிலும் வாழ்ந்த காலத்தில் மக்கள் துயர் துடைத்துத் தொண்டு புரியும் அரிய பணியில் ஈடுபட்டார். சமூகத்தைச் சேர்ந்த ஒவ்வொரு உறுப்பினரும் அந்தச் சமூகத்திற்குப் பயன்படுபவராக இருத்தல் வேண்டுமென்பது அவரது கருத்தாகும். அத்துடன் சமூகத்தில் இருக்கும் குறைபாடுகளை மறைக்கவும் கூடாது; அக்குறைபாடுகளுக்கு உடந்தையாக எவரும் இருக்கவும் கூடாது. சமூகத்தின் குறைபாடுகளைப் போக்கிய பின்பே அதன் உரிமைகளைப் பெற முயல வேண்டும். இதற்கமைய தென்னபிரிக்காவில் வாழ்ந்த இந்திய மக்களிடையே சுகாதாரச்சீர்த்திருத்தம் கொண்டுவர முயன்ருர். இந்திய சமூகத்தினர் தங்கள் வீடு வாசல்களையும் சுற்றுப்புறங்களையும் சுத்தமாக வைத்திருக்கும்படி செய்வதில் வெற்றி கண்டார். மேலும் நாடு கடந்து வந்த இந்தியர்கள் தமது தாய்நாட்டில் கஷ்டப்படும் மக்களுக்கு உதவ வேண்டுமென்பதை அறிவுறுத்திஞர். இதன் விளைவாக 1897, 1899 ஆம் ஆண்டுகளில் இந்தியாவில் பயங்கரமான பஞ்சம் ஏற்பட்டபோது தென்னபிரிக்க இந்தியர்கள் தாராளமாகப் பஞ்ச நிவாரண உதவி வழங்கினர். ''இவ்விதம் தென்னபிரிக்க இந்தியரிடையே நான் செய்து வந்த சேவை ஒவ்வொரு கட்டத்திலும் சத்தியத்தின் புதிய தன்மைகளை எப்பொழுதும் எனக்குக்காட்டி வந்தது. சத்தியம் என்பது பெரிய மரத்தைப் போன்றது. அதை நீர் ஊற்றி நாம் வளர்க்க வளர்க்க அது மேலும் மேலும் கனிகளை அதிகமாகக் கொடுத்துக் கொண்டே இருக்கிறது. சத்தியத்தின் சுரங்கத்தில் மேலும் ஆழத்தில் போய் நாம் தேடத் தேட அதில் பொதிந்து கிடக்கும் மேலும் மேலும் அதிக விலைமதிப்புள்ள ரத்தினங்களைக் காண்கிருேம். பலவகைகளிலும் சேவை செய்வதற்குக் கிடைக்கும் வாய்ப்புக்களே அந்த இரத்தினங்களாகும்'' எனத் தமது சேவை பற்றிக் குறிப்பிட்டிருப்பது மனங்கொள்ளத்தக்கது. ஜோகனஸ்பர்க்குக்கு அருகில் இருந்த தங்கச் சுரங்கமொன்றில் பணி செய்த நீக்கிரோ தொழிலாளருக்கும் சில இந்தியத் தொழிலாளருக்கும் கறுப்பு பிளேக் நோய் கண்ட போது கண் விழித்துப் பணிவிடை செய்த காந்திஜியின் தொண்டு ஈடிணையற்றது.

### செய்யும்தொழிலே தெய்வம்

காந்திஜி அவர்கள் ரஸ்கின் எழுதிய 'கடையனுக்கும் கதிமோட்சம்' என்ற நூல் எடுத்துக் காட்டிய இலட்சியங்களினுல் கவரப்பட்டு அதற்கமையத் தமது வாழ்க்கையையும் மாற்றியமைக்க முற்பட்டார் அந் நூலில் காணப்பட்ட கருத்துக்களைப் பின்வருமாறு வகைப்படுத்திஞர்;

'' (1) எல்லோருடைய நலனில் தான் தனிப்பட்டவரின் நலனும் அடங்கியிருக்கிறது. (2) தங்கள் உழைப்பினுல் ஜீவனுேபாயத்தைத் தேடிக் கொள்வதற்கு எல்லோருக்கும் ஒரே மாதிரியான உரிமை இருப்பதால் ஷவரத் தொழிலாளியின் வேலைக்கு இருக்கும் அதே மதிப்புத்தான் வக்கீலின் வேலைக்கும் உண்டு. (3) ஒரு பாட்டாளியின் வாழ்க்கையும் கைத்தொழில் செய்பவனின் வாழ்க்கையும் வாழ்வதற்கு உகந்த மேன்மையான வாழ்க்கைகள்''– இக் கருத்துக்கள் எமது நாட்டிற்குத் தேவையான தொழிலின் மகத்துவம் பற்றி விளக்குவனவாக அமைந்துள்ளன.

### ஆதாரக் கல்வி

1897 – ல் காந்திஜி தென்னபிரிக்காவில் வாழ்ந்த காலத்திலேயே அவரால் நிறுவப்பட்ட டால்ஸ்டாய் பண்ணையிலிருந்து ஆதாரக்கல்வி பற்றிய சிந்தனைகள் தோன்றின. ருஷியாவைச் சேர்ந்த தத்துவ ஞானி டால்ஸ்டாய் வகுத்திட்ட விவசாய அடிப்படையிற் கல்வி, மதசமரச அடிப்படையிற் கல்வி. உலகநெறிக் கல்வி முதலியவற்ருல் பெரிதும் கவரப்பட்ட காந்தியடிகள் டால்ஸ்டாயின் நினைவாகத் தாம் நிறுவிய பண்ணையில் அரிய செயற்றிட்டங்களை அமுல் படுத்திஞர். பண்ணையைச் சேர்ந்த சிறுவர், சிறுமிகட்கு கல்வி புகட்டுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்ட போதே காந்திஜி பல கல்விப் பரிசோதனைகளைச் செய்தார். அனுபவத்தினுலும், சோதனையினுலும் உண்மையானதொரு கல்விமுறையைக் கண்டுபிடிக்க வேண்டுமென அவர் எண்ணினுர் உண்மையான கல்வியைப் பெற்ருேரினுல் தான் பிள்ளைகட்கு அளிக்கமுடியுமென்று கருதிய அவர் ஒரு தந்தையரின் ஸ்தானத்திலிருந்து பண்ணைச் சிருருக்குக் கல்வி அளிக்கும் பொறுப்பினைத் தாமே ஏற்றுக்கொண்டார். ஆன்மீகப் பயிற்சி அளிப்பதற்கு அவர் சமய நூல்களை அதிகம் நம்பியிருக்கவில்லை. ஆன்மீகப் பயிற்சி மூலமே ஒழுக்கத்தை வளர்த்துக் கொள்ளலாம் என நம்பிய காந்திஜி குழந்தைகளைத் தோத்திரப்பாடல்களை மனனம் செய்யும்படி செய்தார். நல்லொழுக்கத்தைப் பற்றிக் கூறும் நூல்களைப் படித்துக் காட்டினுர் ஆன்ம சமாதானப் பயிற்சி முழுக்க முழுக்க உபாத்தியாயரின் வாழ்க்கையையும், ஒழுக்கத்தையும் பொறுத்ததென நம்பினுர். ஆசிரியர் பற்றிக் குறிப்பிடுகையில் ''டால்ஸ்டாய் பண்ணையில் உபாத்தியாயர்கள் எதைத் தாம் செய்யவில்லையோ அதைச் செய்யுமாறு சிறுவர்களிடம் சொல்லக் கூடாது என்பதை ஒரு விதியாக்கிவிட்டோம். ஆகையால் ஒரு வேலையைச் செய்யுமாறு குழந்தைகளிடம் கூறினுல் ஓர் உபாத்தியாயரும் அவர்களுடன் இருந்து அந்த வேலையைச் செய்து கொண்டிருப்பார். எனவே, சிறுவர்கள் எதைக் கற்றுக்கொண்டாலும் அதை மகிழ்ச்சியுடன் கற்றுக் கொண்டார்கள்.'' எனக் கூறியிருப்பது இன்றும் அவதானிக்கப்பட வேண்டியதொன்ருகும்.

### வளர்ந்து . . .

...11ஆம் பக்கத்தொடர்ச்சி

தவறுகளை மன்னிக்கக் கற்றுக் கொள்ளடி என் கண்ணே! வளர்ந்து வரும் நீ சிரித்துப் பேசிப் பழக வேண்டும். சிநேக பாவம் எத்தனை குறைகளையும் மறைத்து விடும் என்று புரிந்து கொள்வாயா? தன்னிடம் உள்ள குறைகளை எல்லாம் தன் மகள் நிவர்த்தி செய்ய வேண்டுமென்று விரும்புகிற இந்தத் தாயின் ஆசைகளை நிறைவேற்றுவாயோ? என் கண்ணே! கூட்டுக்குள்ளிருந்து வெளியே வருவாயா? உன் மனிதர்கள் உன்னைத் திருத்திக் கொள்வதற்காக குறை சொல்லுகிருர்கள் என புரிந்து கொள்வாயா? பள்ளியிலே நடந்த கதையெல்லாம் வாய் ஓயாமல் பேசுவாயே. இப்போதோ வாய் மூடி மௌனம். வயது உன்னையும் என்னையும் பிரித்து விட்டதா? நீ ஏன் மனம் விட்டே பேச மாட்டேன் என்கிறாய்? உன் அம்மா முட்டாள் என்று நினைத்து விட்டாயா? உன்னைப் புரிந்து கொள்ள மாட்டேன் என்று நினைத்தாயா?

நான் உன்னைப் புரிந்து கொள்வது இருக்கட்டும் நீ என்னைப் புரிந்து கொள். ஐந்து வயதில் உன்னை அள்ளி அணைத்த கரங்கள் இப்போதும் அணைக்கவே துடிக்கின்றன. நீதான் தள்ளித் தள்ளிப் போகிறாய். என்னருகில் வா. என் குழந்தையாக வா இந்த அம்மா உனக்காக ஒரு குழந்தையாக ஏங்குவதைப் புரிந்து கொள்ளடி என் கண்ணே!

## நினைத்ததைச் . . .

...3 ஆம் பக்கத்தொடர்ச்சி

ஓயாது உழைக்கும் இவருடைய அபராமான சக்தி இளம் சந்ததியினருக்கு ஒரு நல்ல வழிகாட்டி அறுபதுகளில் இவருடைய பெயர் பத்திரிகைகளிலே வராத நாட்களே இல்லையெனலாம். இது பற்றி மல்லிகை ஆசிரியர் 1969 இல்பேராசிரியருடைய படத்துடன் வெளியாகிய செப்டம்பர் இதழிலே ''இவர் சதா இயங்கிக்கொண்டிருப்பவர்'' மன்றில் ஒருநாள் நிற்பார், மட்டக்களப்பிலே மறுநாள் தலைமை வகிப்பார். கொழும்பில் அடுத்த நாள் பேசுவார், யாழ்ப்பாணத்தில் அதற்கடுத்தநாள் நாடகம் நடத்துவார். இப்படி நாடு பூராவும் தான் நேசிக்கும் கலைக்காகச்சிரமப்பட்டு உழைப்பவர்களை நாட்டில் காண்பதரிது'' என்று எழுதியுள்ளார். எம்போன்ற மாணவர்களுக்கு இவருடைய உழைப்பு அருமையான எடுத்துக் காட்டாயிருந்தது. சாதாரண ஒரு மனிதன் செய்ய முடியாத அளவு இயங்கிக் கொண்டிருப்பவர் இவர். பல இடங்களிலும் பல்வேறு வகையிலே சேவையாற்றும் இவர் வேகத்துக்கு புகையிரதம் சில வேளை ஒத்துழைப்பதில்லை. ஆனால் பேராசிரியர் அதனுடன் ஒத்துப்போய்விடுவார் கண்டியிலிருந்து யாழ்ப்பாணம் வருவார் அடுத்த புகையிரதத்திலே கொழும்பு செல்ல வேண்டும் புகையிரத நிலையத்திற்கும் போவதற்கிடையில் பல வேலைகள். அனேகமாகக் கொழும்புப் புகையிரதம் யாழ்ப்பாண புகையிரத நிலையத்தைவிட்டுப் புறப்பட்ட பின்னரே அங்கு போவார். உடனே புகையிரத கலைப்பு தொடங்கிவிடும் பெரும்பாலும் பளை புகையிரத நிலையத்திலேயே இவர் ரயிலேறுவது வழக்கமாயிருந்தது. இது பல தடவைகள் நடைபெற்ற நிகழ்ச்சி. சிறிது நேரம் கண்ணயர்ந்துவிட்டு பல மணித்தியாலங்கள் நித்திரை செய்து எழும்பியவர் போலக்களைப்பின்றி இயங்கத் தொடங்கிவிடுவார். அந்தச் சிறு நேரக் கண்ணயர்வு எங்கும் நிகழலாம்.

திருகோணமலையில் 1960 இல் நடைபெற்ற ஒரு வைபவத்துக்கு பேராசிரியர் அழைக்கப்பட்டிருந்தார். திருமலையை பிறப்பிடமாகக் கொண்ட நான் அப்போது பல்கலைக்கழகத்திலே பேராசிரியருடைய மாணவனுயிருந்தேன். கண்டியில் இருந்து தன்னுடைய காரில் புறப்பட்ட பேராசிரியர் என்னையும் தன்னுடன் அழைத்துச்சென்ருர். முதல் நாளிரவு பிரயாணஞ் செய்த களைப்பு இவருக்கு ஏற்கனவே உண்டு. திருகோணமலையை நோக்கிக் காரை செலுத்திக்கொண்டிருக்கும் பொழுது இடைவழியில் முதல் நாளைய களைப்புத் தலை தூக்கத் தொடங்கியது. இடையில் பாதை ஓரத்தில் காரை நிறுத்தினுர் என்னை ஏதாவது வாங்கிக்குடிக்கும்படி கூறினுர். இருந்தபடியே நித்திரையாகிவிட்டார். அதற்கிடையில் நான் இளநீர் ஒன்று வாங்கிக் குடித்துவிட்டு வந்தேன பத்து நிமிடங்கள் ஆகியிருக்கும். அப்பத்து நிமிடங்களில் ஓர் ஆழ்துயிலை முடித்துக்கொண்டு எவ்விதக்களைப்பும் அற்றவராக காரைச் செலுத்தத் தொடங்கினுர்.

சாதாரணமனிதரிடங்காண முடியாத அசாதாரண துணிச்சல் இவரிடமுண்டு பதவிகள், வசதிகள் ஆகியவற்றைக்கண்டு இலகுவில் மயங்கிவிடமாட்டார். தன்கொள்கைகளை துணிச்சலுடன் எங்கும் எடுத்துக் கூறுவார் அக்கொள்கைகளை இக் கட்டான வேளைகளில் பதவிக்கு அஞ்சி விட்டுக் கொடுக்கவேமாட்டார். இவர் தன்னுடைய கொள்கைகளைச் சந்தர்ப்பத்திற்கேற்பமாற்றிக்கொள்பவரென்ருல் இவருக்கு பல உயர் பதவிகள் எப்பொழுதோ வந்து சேர்ந்திருக்கும் அவற்றுக்கெலலாம் மயங்கிக்கொள்கையைச் சோரம்போக விடமாட்டார். நான்காவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டுக் காலத்தில் இவரை அரசு விலைக்கு வாங்கிவிடுமோ எனப் பலர் அஞ்சினர். பேராசிரியரின் குணங்களை நன்கு அறிந்தவர்களோ அப்படி எண்ணவில்லை. உங்களுக்குக் கொழும்பில் எல்லா வசதிகளும் செய்து தருகிருேம் பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் மாநாட்டை அரசின் செலவில் நடத்தலாம்வெளிநாட்டுபிரதிநிதிகள் தங்குவதற்கு ஒழுங்குகள்செய்துதரலாம் எனஆசை வார்த்தைகள் கூறப்பட்டன. தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் யாழ்பாணத்திலே நடத்தாமல் உலக தமிழாராய்ச்சி மாநாட்டை கொழும்பில் நடத்தவேண்டுமென அரசு கங்கணம் கட்டியது சாதாரணதலைவர்என்ருல் இவற்றில் மயங்கியிருப்பார். பேராசிரியர் வித்தியோ சிறிதும் அசையவில்லை.

தனக்குப் பின்னுல் ஒரு தமிழ்க் கூட்டம் இருப்பதை இவர் அறிவார். அந்த துணிச்சல் காரணமாக சொல்லப்பட்ட சலுகைகள் எல்லாவற்றையும் புறக்கணித்துவிட்டு மாநாடு நடந்தால் அதுயாழ்ப்பாணத்திலேயே நடக்கும். அதுவே மக்களின் தீர்ப்பு. அரசதரப்பிற்கு கூறிவிட்டு யாழ்ப்பாணம் வந்து விட்டார். அரச ஆபத்து ஏற்பட்டு விடுமோ என இவர் அஞ்சவில்லை. தமிழ் மக்கள் அன்று அவருக்கு வேண்டிய உதவிகளை எல்லாம் வழங்கினர். இவருக்கு உதவிய நண்பர்கள் உண்மையுணர்வுடனேயே செயல்பட்டனர். இந்தமர்மனிதன் வித்தி உலக புகழ் பெற்ற அந்த மாநாட்டை நடத்தியே முடித்தார்.

## இந்துபோர்ட் . . .

... 10 ஆம் பக்கத் தொடர்ச்சி

இராசரத்தினமான்மியம் பாடலாம். எங்கள் பாடசாலை என்னும் தலைப்பில், சங்கப் பாடசாலைப் பிள்ளைகள் எழுதுவார்களானுல் அவையாவும் ஒருங்குசேரும்போது நவீன கதாசரித்ரசாகரம் என்னும் கதைக் கடலாகும்.

### இந்துபோர்ட்டின் மயன்

பாடசாலைகளுக்கு நிலம் உதவியவர்கள், கொட்டிலமைக்க முற்பணம் உபகரித்தவர்கள், முன்னின்று பணிபுரிந்தவர்கள், உதவிநன்கொடை வரும்வரை ஊக்கமது கைவிடாமல் உள்ளன்போடு பாடஞ்சொன்ன உபாத்தியாயர்கள், உருப்படியாகப் பாடசாலைகளை உறுதி எழுதிக் கொடுத்தவர்கள், இத்திறத்தவர்கள் எல்லோரும் பிள்ளைகளின் கல்விக்கண் திறக்க உழைத்த உத்தமராவர். அவர்கள் உறுதியான பணிபுரிந்தவர்கள்.

இவர்கள் யாவரும் இந்துபோர்ட்இராசரத்தினம் அவர்களுக்கு வந்து வாய்த்த விதத்தில், கிடைத்த மரவேலை நிபுணன் ஒருவரை இங்கே குறிப்பிடின், இராசரின் அன்புப்பரிபாஷையில் ''என்னுடைய மயன்'' என்பவராவர். அவர் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்குக் கிழக்கில் உள்ள கொன்றலடிப் பிள்ளையார் கோயிற் சூழலில் வாழ்ந்த மாணிக்கம் என்னும் ஆசாரியாவர். பெரிய கரிய கொண்டையும், முறுக்கிய கம்பீரமான மீசையும், கறுத்த மேனியும்கொண்டமாணிக்கம் அவர்களுக்குப் பணிவன்புடன் உதவியாளராய் எடுபிடி வேலை செய்வதற்கிருந்த ஊழியர்களே பெருந் திறமைசாலிகள்.

''மயன்! நூறடி நீளத்தில் இருபத்தைந்து அடி அகலத்தில் கொட்டில் போடவேண்டும். மூன்று நாட்களில் பாடசாலை தொடங்க வேண்டும் இந்தா இதில் முந்நூறுரூடா இருக்கிறது''இவ்வளவும் கூறி இடத்தைக் காட்டவேண்டியதுதான் தாமதம். மயன் இரண்டு நாட்களில் கொட்டில்போட்டு,வேய்ந்து எல்லா வேலைகளையும் செய்து முடித்துவிட்டு, ''சரி ஐயா' என்பார்.

சங்ககாலத்திலே தமிழ்நாட்டிலே தினமும் எட்டுத் தேர் செய்து யுத்தகளத்தைத் தேர்ப்படையால் நிரப்பவல்ல மரவேலைக்காரனை, ''வைகல் எண்டேர்வலித்த தச்சன்'' என்று இலக்கியம் புகழ்கின்றது. மயன் வளைவைத்த நூற்றுக்கணக்கான பாடசாலைகளில் எத்தனை ஆயிரம் மாணுக்கர், மாணுக்கியர் அமர்ந்து அறிவுத்திறன் பெற்றுப் போயிருப்பார்கள் இன்னும் எத்தனையாயிரவர் படிக்கவரப் போகிருர்கள். மயன் மனமகிழ்ச்சியோடு தன் வேலைகளைச் செய்து நிறைவேற்றிவிட்டு, ஆறுதலாக இராசரிடம் சென்று கைகட்டி நிற்பார்.

மரவேலை நிபுணன் மயன் என்னும் மாணிக்கத்தின் கைவண்ணத்தைக் கண்டு களித்தவர்களுள் யாழ்ப்பாணத்து நல்லூருக்குக் கிழக்கிலுள்ள நாயன்மார்கட்டு தில்லிணக்கசபை இளைஞர்களும் ஒருசிலர். அவர்கள் தங்கள் சொந்த முயற்சியாக நடத்திவந்த இராப்பாடசாலையொன்றைப் பகற்பாடசாலையாக்குவதற்கு இற்றைக்கு 56 ஆண்டுகளுக்கு முன் இராசரைக் கண்டபோது, 'தம்பிமாரே! நாளைக்கு 300, ரூபா கொண்டு வாருங்கள் மூன்று நாட்களில் கொட்டில் போட்டு அடுத்த விளக்கீட்டிலன்று பாடசாலையை ஆரம்பிப்போம். எல்லாவற்றையும் நன்ருகச் செய்யவல்ல மயன் இருக்கிருர்'' என்ருர்.

அன்பர் ஒருவர் தம் மனைவியின் ஆபரணங்களை அடகுவைத்து 300 ரூபா கொடுத்ததும் இரண்டு நாட்களில் 100 அடி நீளக் கொட்டில் அமைக்கப்பெற்றதும், இளைஞர் இரவிரவாகக் கிடுகுகள் கொண்டுவந்து குவித்ததும், மூன்றும் நாள் வேய்ந்து அடுத்தநாள் மகேஸ்வரி வித்தியாலயம் கோலாகலமாக ஆரம்பிக்கப்பெற்றது. இது ஒரு பெண்பாடசாலையின் கதை. இவ்வாறு நூற்றைம்பதுக்கும் அதிகமான கதைகள் செயல்வீரன் இராசரத்தினம் அவர்களைப் பற்றிக் கூறும். கூறவே இந்துபோர்ட் இராசரத்தினம் வரலாறு பாரதமாகும்.

(தொடரும்)

## இடமாற்றம்

அன்று
உனக்குப் பிடித்தது
எனக்கும் பிடித்தது
இன்று
எனக்குப் பிடிப்பது
உனக்குப் பிடிக்கவில்லை
ஏன்?
அன்றைய காதலி நீயே
இன்றைய மனைவி!

— ச. முருகானந்தன்


VACANCIES IN SAUDI ARABIA

உடனடி வேலைவாய்ப்பு

★ சவூதி அரேபியா ★

| | | |
|---|---|---|
| 1. | மேசன் | 650 - S.R. |
| 2. | தச்சுத்தொழிலாளர்கள் | 650 - S.R. |
| 3. | பிளம்பர்ஸ் | 650 - S R. |
| 4. | மெக்கானிக் | 650 - S R. |
| 5. | எலக்ரிஷன் | 650 - S.R. |
| 6. | ஓட்டோ மெக்கானிக் | 650 - S R. |
| 7. | வெல்டர்ஸ் | 650 - S R. |
| 8. | வயர் எலக்ரிஷன் (Wire Electrician) | 650 - S R. |
| 9. | Heavy Duty Equipment Operators | 700 - S.R. |
| 10. | கிளீனர்ஸ் 500 பேர் | 400 - S.R. |
| 11. | Steel Fixer<br>வயதெல்லை 21 — 48 வரை | 700 - S R. |
| 12. | பணிப்பெண்கள்<br>(வயதெல்லை 30 — 40)<br>(ஒருவாரத்தினுள் பிரயாணம் செய்யலாம்) | 400 - S.R. |

★ ஓமான் நாட்டில் வேலைவாய்ப்பு

300 பண்ணைத் தொழிலாளர்கள் சம்பளம் 43-O. R.
வயதெல்லை 25 — 40 வரை

★ குவைத் நாட்டில் வேலைவாய்ப்பு

500 தொழிலாளர்கள் சம்பளம் 35 K.D.
(No Food Allowance)
வயதெல்லை 18 — 42 வரை

★ குவைத் நாட்டில் பணிப்பெண்கள்

வயதெல்லை 18 — 40 வரை
சம்பளம் 30 - K D.

(தங்குமிடம் உணவு இலவசம்)

IMMEDIATE VACANCIES IN SAUDI ARABIA

10 தாதிகள் (பெண்கள்) 1200 S. R.
ஆஸ்பத்திரி கிளீனேர்ஸ் (பெண்கள்) - 400 S. R.

கொழும்பில் நேர்முகப் பரீட்சை நடைபெறும் திகதிகள் 02-02-89 தொடக்கம்.

முக்கிய அறிவித்தல்:

பணிப்பெண்களாக செல்லவிருப்பவர்கள் கடவுச்சீட்டு, பாஸ்போட்சைஸ் 3 போட்டோ, ஒரு முழுக் கலர்ப்படம் என்பவற்றுடன் எமது காரியாலயத்தில் வந்து சந்திக்கவும். சவூதிக்குப் பணிப்பெண்களாக ஒரு வாரத்தினுள் பிரயாணம் செய்வதற்கு ஒழுங்கு செய்து தரப்படும். குவைற்றிற்கு மூன்று கிழமையில் செய்து தரப்படும் கிழமை நாட்களில் காரியாலயம் திறந்திருக்கும் நேரம் (சனிக்கிழமை உட்பட) காலை 8.00-மாலை 5.00 மணிவரை. ஞாயிற்றுக்கிழமை 8.00-2.00 வரை

★ ஜேர்மனி

16 வயதிற்கு உட்பட்டவர்கள்; ஒரு கிழமைக்குள் பிரயாண ஒழுங்கு செய்து தரப்படும்.

கடவுச்சீட்டு BOND செய்து தரப்படும்.

புதிய கடவுச் சீட்டுகள் ஒரு கிழமையினுள் எடுப்பதற்கு உதவி செய்து தரப்படும்.

T. V. TRAVELS & TOURIST
Brown Road, Kokuvil.
( Railway Station Front )

01596



LML Vespa T5

அடுத்த தொகுதி Scooter கள் பெப்ரவரி முடிவுக்குள் கிடைக்க உள்ளன. குறிப்பிட்ட தொகையே வர இருப்பதால் உங்கள் பெயரை முற்பணம் செலுத்தி உடன் பதிவுசெய்து கொள்ளுங்கள்.

மேலதிக விபரங்கட்கு:

V. K. இராசரத்தினம்
L M L Vespa, நெஷனல் தயாரிப்புகளின்
பிரதான விற்பனை முகவர்
95, ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்

01670

VARAMURASOLI — REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA 29 . 01 . 1989 ஞாயிற்றுக்கிழமை

சிறந்த முறையில்
வீடியோ படம் பிடித்திட
வீடியோ விகோன்ஸ்
(வெலிங்டன் சந்திக்கும் பெருமாள்
கோயிலுக்கும் இடையில்)
353 C, மணிக்கூட்டுவிதி

வார முரசொலி
VARAMURASOLI

For Quality Video Filming
VIDEO Vihons
353 C, Clock Tower Road,
★ Wellington Junction.

# பேராசிரியர் 'வித்தி' தமக்கென வாழாத பெருந்தகை; அவர் தமிழினத்தின் சொத்து

## இறுதிச்சடங்கில் பிரமுகர்கள் இரங்கலுரை

(அலுவலக நிருபர் கிறிஸ்ரி ரஞ்சன்)

"பேராசிரியர் சு. வித்தியானந்தன் கலைஞராகவும், பேராசானாகவும், தமிழ் ஆறிஞராகவும் பிரகாசித்தவர். அவரது திறமைக்கும் உழைப்புக்கும் இனப்பற்றுக்கும் யாழ். பல்கலைக்கழகமே ஒரு சான்றாகும். தன் துன்பத்தை தானே அனுபவித்து பல்கலைக்கழகத்தை உருவாக்கியவர்.

இவ்வாறு நேற்று நண்பகல் தெல்லிப்பழை தமிழகம் இல்லத்தில் இடம் பெற்ற பேராசிரியர் வித்தியானந்தனின் இறுதிக் கிரியையின் போது இரங்கலுரை ஆற்றிய யாழ். அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் தெரிவித்தார்.

"எனக்கு அவரது மாணவனாகும் பாக்கியம் கிடைக்கவில்லை. ஆனால் அவருடன் நெருங்கிப் பழகும் சந்தர்ப்பம் கிடைத்தது. பத்து தினங்களுக்கு முன்னர் கொழும்பில் அவரை சந்திக்க எனக்கு சந்தர்ப்பம் கிடைத்தது. அப்போது அவரை யாழ்ப்பாணத்திற்கு வருமாறு அழைத்தேன். அதற்கு விரைவில் வருவேன் என அவர் பதிலளித்தார், இப்படி சடலமாக இங்கு வரவிருப்பதைத்தான் அவர் உணர்ந்து அப்படிச் சொன்னாரோ தெரியாது. அவர் இப்படி திடீரென இறப்பார் என நான் சிறிதும் எதிர்பார்த்திருக்கவில்லை. அவருக்குஇப்படி கூடிய சீக்கிரத்தில் அஞ்சலி செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டு விட்டதே. இன் சொல்லால் எல்லோரையும் வசீகரப்படுத்தியவர் அவர்"என அரசாங்க அதிபர் அங்கு மேலும் தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை தனதுரையில் கடந்த சில வருடங்களில் நாம் ஐந்து தமிழறிஞர்களை அடுத்தடுத்து இழக்க வேண்டி வந்து விட்டது. தனிநாயகம் அடிகளார், பேராசிரியர் கைலாசபதி, பண்டிதமணி கணபதிப்பிள்ளை, பேராசிரியர் சதாசிவம், இந்த வரிசையில் இன்று வித்தி ஐயாவையும் இழந்து விட்டோம். இலங்கை பல்கலைக்கழகம் 1942ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட போது அதன் தமிழ்த் துறையில் முதல் மாணவராக சேர்ந்து பின்னர் அதே பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகவும், பேராசிரியராகவும், உப வேந்தராகவும் பதவி வகித்தவர் இவர் ஒருவர் தான். நான் இவரால் வளர்க்கப்பட்டவன். குரு பக்தி மிக்கவர் இவர், மிகப்பெரிய மனிதர், மனிதாபிமானம் மிக்கவர். தனிப்பட்ட முறையில் உதவுவதற்கு இவர் என்றும் பின்னின்றதில்லை. உயர்பண்புகள் காரணமாக ஆளுமைமிக்க பேராசிரியர் தன் சுவடுகளை ஆழமாகப் பதித்துச் சென்றுள்ளார்" என்று குறிப்பிட்டார்.

கல்விப் பணிப்பாளர் திரு. வெற்றிவேலு சபாநாயகம் தனது இரங்கலுரையில் 1953 ஆம் ஆண்டு நான் பேராதனை பல்கலைக்கழகத்தில் அவரது மாணவனாகவிருந்தேன். அங்கு தமிழ் மாணவர்களுக்கு அவர் பல உதவிகளைப் புரிந்துள்ளார் தமிழ், சமஸ்கிருத கலப்பில்லாமல் வளர வேண்டுமென உழைத்தவர், தனது மாணவியையே மணம் முடித்து வாழ்வில் நிறைவுகண்டவர். 'தமிழர் சார்பு', 'இலக்கியத்தென்றல்' ஆகிய நூல்கள் இவரது திறமைக்கு நல்ல எடுத்துக்காட்டுகளாகும், தமிழ் மகனாகப் பிறந்து 'தமிழகத்தில்' வாழ்ந்து தமிழனாகவே இறக்கும் பாக்கியத்தை பேராசிரியர் பெற்றுக்கொண்டார் என்று தெரிவித்தார்.

நுண்கலைப்பீடத் தலைவர் பேராசிரியர் கா. சிவத்தம்பி இரங்கலுரையாற்றுகையில் 'இவரின் வாழ்வு தமிழின் சின்னம். இவர் தமிழ்ச் சொத்து. இதனால் இவரின் மறைவு தமிழ் உலகிற்கே பேரிழப்பு, இவர் மனிதாபிமானம் மிக்கவர் பதவிக்கு அப்பால் நின்று எவருக்கும் சேவை செய்தவர், இதனால் சிங்களவர்களே இலங்கையின் சிறந்த பிரஜை என பேராசிரியரை ஏற்றுக் கொண்டுள்ளனர்.

சாதாரண மனிதர்களாக இருந்த சிவத்தம்பி, கைலாசபதி, சண்முகதாஸ் ஆகியோரை பேராசிரியர்களாக்கிய பெருமை இவரையே சாரும். இவரது திருமணத்தின் போதும், மனைவியின் இறப்பின்போதும் முன்னின்று செயற்பட்ட! நான் இவரது மரணத்தின்போது அங்கு இருக்கமுடியாத நிலைவந்து விட்டது. பேராசிரியர் வித்தியானந்தனுக்கு இரத்தக் குடும்பம் ஒன்றுதான் உண்டு. ஆனால் அவருக்கு இதயக் குடும்பங்களோ பல' என்று கூறினார்.

சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தனதுரையில் பேராசிரியர் வித்தியானந்தன் சிறந்த சைவ வாழ்க்கை வாழ்ந்தாரென கூறமுடியாவிட்டாலும் சிறந்த சமூகவாழ்வு வாழ்ந்தவர். சமய வாழ்வு வாழும் எம்மை சமுதாய வாழ்வில் முன்னுக்கு கொண்டுவந்த பெருமை இவரையேசாரும் பாடசாலைகளை கட்டி கல்வி வளர்ச்சிக்கு வித்திட்ட பரம்பரை இவருக்குரியது. இவரது தந்தையால் உருவாக்கப்பட்ட வீமன்காமம் மகாவித்தியாலயம் இதற்கு சான்று. இவரது நினைவாக பல்கலைக்கழகத்திலும், தெல்லிப்பழையிலும் நினைவாலயம் அமைக்கப்படல் வேண்டும்' என்று குறிப்பிட்டார்.

புனித பத்திரிசியார் கல்லூரி அதிபர் அருட்திரு. பிரான்சிஸ்யோசப் தனது உரையில் 'இவர் பெரிய மாமனிதர். உயர்ந்த செயற்பாடு, உன்னத வார்த்தைகள் மகத்துவம் மிக்க திட்டங்களும் உயர்ந்த நோக்கங்களும் கொண்டவர். எதிர்த்துப் போராடி வெற்றி பெறும் மனமும் இருந்தது, கருணை மிக்க மென்மையானஉள்ளமிருந்தது அனைத்திலும் மனிதத் தன்மையே மேலோங்கி நின்றது அடக்கமுடையவர், அமைதி உடையவர், துணிவுடையவர். இதனால் தீர்க்கதரிசிகளைப் போல் தன் சொந்த மண்ணிலேயே சில வேளைகளில் இவர் புரிந்து கொள்ளப்படவில்லை' என்றார்.

ஒஸ்மானியாக் கல்லூரி உபஅதிபர் ஜனாப் கே.எம்.எஸ் ஹமீத் தனதுரையில் 'நாற்பது வருடம் இவர் ஆற்றிய சேவையால் ஆயிரக்கணக்கான மாணவர்களை உலகம் முழுவதும் பெற்றார். இத்தகைய சிறப்பு இவருக்கு மட்டுமே உண்டு' என்று தெரிவித்தார்.

தென் இந்திய திருச்சபையின் செயற்குழு உறுப்பினரும் யாழ்ப்பாண கல்லூரியின் அதிபருமான ஜெபநேசன் தனது உரையில் '1961 ஆம் ஆண்டு கச்சேரியின் முன் நடந்த சத்தியாக்கிரகத்தில் உணர்வுமிக்க மாணவனாக இவரை நான் கண்டேன். தமிழ் மாணவர்களுக்கு ஒரு பாலைவனச்சோலையாக இருந்தவர் வித்தி. நன்மை செய்யப் போய் துன்பத்தை சுமந்த உள்ளம் இது. வித்தி மறைந்து விட்டார். ஆனால் முடிந்து விடவில்லை' என்றார்.

முரசொலி பிரதம ஆசிரியர் திரு. எஸ். திருச்செல்வம் தனது இரங்கலுரையில் 'தனி மரம் தோப்பாகாது என்ற பழமொழியை பொய்யாக்கியவர் பேராசிரியர். இங்கு கூடி நிற்கும் அனைவரும் அவரது மாணவர்களோ அன்றி அவருடன் நாடகம் மேடையேற்றியவர்களோ அல்ல. வித்தி பெரும் தோப்பு, அதன் கிளை, பழம், இலை நாங்கள். இதனால் தான் எங்கள் இழப்பாக இதனைக் கருதுகின்றோம். தமிழ் உலகம் தன் தலைவர்களில் ஒருவரை இன்று இழந்துவிட்டது. 'வித்தி' இன்று தமிழினத்தின் சொத்தாகிவிட்டார்' என்றார்

உதயன் ஆசிரியர் திரு. கான மயில்நாதன் தனதுரையில் 'தமிழ்மக்களின் சொத்து அவர். அவர் உருவாக்கிய பரம்பரை தமிழினம்வாழும்வரை தமிழை வளர்த்துக்கொண்டே இருக்கும். அவர் இறக்கவில்லை, எம்மில் வாழ்ந்து கொண்டேயிருக்கின்றார்' என்றார்.

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா தனதுரையில் 'பேராசிரியர் வித்தியானந்தன் கலை, விஞ்ஞான பீடங்களுக்கு பல புதிய கட்டடங்களை உருவாக்கினார். வைத்திய பீடம் இங்கு உருவாகியதற்கும், விவசாய, பொறியியல் பீடங்கள் உருவாகவுள்ளதற்கும் இவரே காரணம். இவர் இங்கு துணைவேந்தராக இருந்த காலம் மிகவும் நெருக்கடியானது. யாழ். பல்கலைக்கழகத்தில் இவருடைய பெயர் என்றும் நிலைத்திருக்கும்' என்று குறிப்பிட்டார்.

பேராசிரியர் சண்முகதாஸ் தலைமையில் நடந்த இந்த அஞ்சலிக் கூட்டத்தில் மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா, ஏ. ரி. பொன்னுத்துரை, ஆசிரியர் சங்கப்பிரமுகர் த. மகாசிவம், பல்கலைக்கழக ஆசிரியர் சங்கப் பிரமுகர் எஸ். சின்னத்தம்பி, நடிகமணி வி. வி. வைரமுத்து, கலாநிதி சி. மௌனகுரு, பல்கலைக்கழக மாணவர் பிரதிநிதி பி ரஞ்சித், கலாநிதி சுப்பிரமணியம், முருங்கன் குழந்தை ஆசிரியர். என்.சிவமகாராசா, மருத்துவ பீடத்தலைவர் கே. பாலசுப்பிரமணியம், சென். ஜோன்ஸ் கல்லூரி அதிபர் டாக்டர் தேவசகாயம், கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் என். பாலகிருஷ்ணன், விஞ்ஞான பீட பீடாதிபதி பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம், கவிஞர் இ. முருகையன், ஊழியர் சங்கப் பிரதிநிதி இ. சிவயோகேஸ்வரன் உட்பட பலர் இரங்கலுரையாற்றினர்கள்.

## குண்டுவீச்சினால் 25 பேர் காயம்

பலாங்கொடையில் வியாழக்கிழமை இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சி தேர்தல் கூட்டத்தின் மீது குண்டுகள் வீசப்பட்டதால் இருபத்தைந்து பேர்வரை காயம் அடைந்தனர். இவர்களில் நால்வரின் நிலைமைகவலைக்கிடமாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## புதிய சட்டசபை 6-ம் திகதி கூடும்

(சென்னை)

தமிழ் நாட்டின் கருணாநிதி தலைமையிலான புதிய சட்டமன்றம் எதிர்வரும் 6ஆம்திகதி முதல் தடவையாகக் கூடவுள்ளது. புதிய சட்டசபை அங்கத்தவர்கள் அன்று சத்தியப்பிரமாணம் செய்து கொள்வார்கள்.

## கிளிநொச்சியில். . .

பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் அண்மையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் வைத்து கோரியிருந்தார். அதற்கு சம்மதமும் கிடைத்துள்ளது.

## முழங்காவில்...

தொடர்ந்து, அம்பிகைபாலனும், வேறு டாக்டர்களும் அங்கு கடமைக்குச் செல்ல மறுப்பதாலேயே வைத்திய சாலை மூடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது

## தேர்தல்...

மான ஆரம்ப ஆட்சேபனைகளை நீதிமன்றில் முன்வைப்பதா இல்லையா என்பது பற்றி தெரிவிக்க உத்தேசித்திருப்பதாக இவர்கள் தெரிவித்துள்ளனர்.

## கொழும்பில் இன்று வித்தியானந்தன் அஞ்சலிக் கூட்டம்

(கொழும்பு)

மறைந்த பேராசிரியர் வித்தியானந்தனுக்கு அஞ்சலி செலுத்துமுகமாக இன்று மாலை கொழும்பு பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் அஞ்சலிக் கூட்டம் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் இராசதுரையும் கலந்துகொள்வார்.

## மூன்று இளைஞர்கள் சுட்டுக் கொலை

சித்தாண்டியில் தேர்தல் பிரசார வேலைகளில் ஈடுபட்ட மூன்று இளைஞர்கள் கடந்த வியாழன் ஒரு வீட்டில் தங்கியிருந்த போது இனம் தெரியாதவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

## பொலிஸ்மீது தாக்குதல்

பொத்துவில் அரசினர் ஆஸ்பத்திரியில் காவலில் ஈடுபட்ட ஸ்ரீலங்கா பொலிஸார் மீது இனம் தெரியாதோர் நடத்திய தாக்குதலில் ஒரு கான்ஸ்டபிள் உயிரிழந்தார். மற்றொரு பொலிஸார் காயமடைந்தார்.

## கிளிநொச்சிக்கு. . .

முதலாவது தொகுதி, இரண்டாவது தொகுதி விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியர்கள் நாளை முப்பதாம் திகதி திங்கட்கிழமை கிளிநொச்சி கல்வித் திணைக்களத்திற்கு சமுகமளித்து தமது நியமனக் கடிதங்களைப் பெற்றுக் கொள்ளுமாறு கிளிநொச்சி மாவட்ட கல்விப்பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் அறிவித்துள்ளார்.

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் அழகிய படம் பிங்கான் கோப்பையில் பிரதிபண்ண ஆடர்கள் ஏற்கப்படுகின்றன. ஆடர்களுக்கு முன்கூட்டியே பதிவு செய்யவும்.

Hayleys Film Roll Collecting Centre
Photo Gloss
K. K, S. ROAD,
INUVIL.
01672

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி, 62 ஏ, இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகப் பிரிவில் 29-01-1989 அச்சிட்டு வெளியிடப்பெற்றது